சுடர் 30 | கதிர் 145 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 6, திங்கட்கிழமை 20.04.2015

கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

# '20'நிறைவேறியதுமே கலைக்கப்படும் நாடாளுமன்றம்

## கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரி இணக்கம்



கொழும்பு, ஏப்ரல் 20
தேர்தல் முறைமை மாற்றம் 20 ஆவது அரசமைப்புத் திருத்தமாக கொண்டுவரப்பட்ட பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்தார் என ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறினார்.
19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்துடன், தேர்தல் முறை மாற்றத்தையும் 20 ஆவது திருத்தச் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒன்றாக நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்தாலே

பக்.02

## தமிழரசுக் கட்சி மே தினம் திருமலையில்

யாழ்ப்பாணம், ஏப். 20
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் திருகோணமலையில் நடத்தப்படவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் மே முதலாம் நாள் சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, அரசியல் கட்சிகளால் மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. தெற்கில், மே தினக் கூட்டங்கள் அரசியலை முன்னிலைப்படுத்தி சூடு பிடித்துள்ளன. நாட்டில் பிரதான இரு கட்சிகளும் தென்னிலங்கையில் மே தினக் கூட்டங்களை நடத்தவுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆதரவுத் தரப்பினர் தனியானதொரு

பக்.02

## இரு சடலங்கள் நேற்று மீட்பு

நெல்லியடி, ஏப்.20
நெல்லியடி பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இரண்டு ஆண்களின் சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
துன்னாலை தக்குச்சம்பாதி பகுதியில் வீதியோரம் இறந்த நிலையில் ஒருவரும், கரவெட்டிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஒருவரும் மீட்கப்பட்டுள்ளனர்.
குறித்த இரு சடங்களும் தற்போது உடற்கூற்றுச் சோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ந-108)

## 19ஆவது திருத்தம் நாளை விவாதம்


### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எட்டப்பட்டது இணக்கம்

கொழும்பு, ஏப். 20
19 ஆவது திருத்தச் சட்டம், நாடாளுமன்றத்தில் நாளையே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.
முன்னதாக குறித்த திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிர்ப்புக்கள் தோன்றியிருந்த நிலையிலேயே, நேற்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்திலேயே, நாளையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் 19 ஆவது திருத்தத்தைப் பற்றி விவாதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கப்பட்ட

பக்.02

## மே முதல் வாரமே வருகின்றார் கெரி

### தமிழ்க் கூட்டமைப்புடனும் பேச்சு நடத்துவார்



கொழும்பு, ஏப். 20
ஜுன் மாதமளவில் இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் பயணம் ஒரு மாதத்தால் முன் நகர்ந்துள்ளது. அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் அவர் இலங்கைக்கு வருவார் என்றும், இலங்கைப் பயணத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித் துப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பக்.02

## நாளை வருகிறார் பஸில் ராஜபக்ஷ

### கைது செய்யும் திட்டமில்லை என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஏப். 20
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரரும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜ பக்ஷ, நாளை பி.ப 1.35 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடையவுள்ளார். வாழ்வின் எழுச்சித் திணைக்கள நிதி மோசடி தொடர்பில் சாட்சியமளிப்பதற்கே அவர் இங்கு வரவுள்ளார்.

பக்.02

**ஆரம்பக் கல்வியில் கவனம் செலுத்துவோம்**

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். சிறுவயதில் கற்கின்ற விடயங்கள் பசுமரத்து ஆணி போன்று....

விரிவு பக்கம் 14 இல்

## தேர்தல் முறையில் மாற்றம் வேண்டாம்

### சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் போர்க்கொடி



கொழும்பு, ஏப்.20
இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதை சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் கூட்டாக எதிர்த்துள்ளன.
இது குறித்து ஆராய்வதற்காக நேற்று அந்தக் கட்சிகள் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளன. சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,

பக்.02

## தமிழரின் துயரம் தீருமா?

வரலாற்றில் வருட வரிசையாகத் தமிழ் மக்களின் துயரங்களைப் பதிவிட முடியும். இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னர் (சு.மு.) சுதந்திரத்துக்குப் பின்னர் (சு.பி.) என்று அவற்றைப் பதியலாம். சம காலத்தில் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிகழ்ந்தேறிய துயரங்களையே நாம் பெரிதாக எண்ணிப் பார்க்கின்றோம்.....

*விரிவு பக்கம் 08*

## அகதிகள் படகு கவிழ்ந்தது 650 பேர் வரையில் சாவு

### லிபியக் கடற்பரப்பில் சம்பவம்



லண்டன், ஏப்.20
புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றி வந்த படகு ஒன்று லிபியக் கடலில் மூழ்கியதில் குறைந்தது 650 பேர் நீரில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.
புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐரோப்பாவுக்குக் கடல் கடக்கும் நடவடிக்கையில் மிக அதிகமானோர் உயிரிழந்த சம்பவம் இது என்று ஐ.நாவின் அகதிக

பக்.02

## மீள்குடியமர்ந்த மக்களுக்காக ஐ.நா. நிறுவனங்களிடம் உதவி

### கோரியுள்ளது மீள்குடியேற்ற அமைச்சு

யாழ்ப்பாணம், ஏப். 20
வலி.வடக்கு – வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில், மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஐ.நா. முகவர் நிறுவனங்களிடம் மீள்குடியேற்ற அமைச்சு உதவி கோரியுள்ளது.
"ஐ.நா. முகவர் நிறுவனங்கள் மற்றும் ஐரோப் பிய ஒன்றியத்திடம் உதவிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளோம்"– என்று மீள்குடியேற்ற அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
வலி.வடக்கு – வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த ஒரு மாத காலத்துள் மக்கள் மீளக்

பக்.02

## 46 பேர் புனர்வாழ்வில்

கொழும்பு, ஏப். 20
போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகளாகியுள்ள நிலையில் இன்னமும் 46 முன்னாள் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது என்று புனர் வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெகத் விஜே திலக தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் 324 பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் 12 ஆயிரத்து 88 தமிழீழ

பக்.02

# ‘20’நிறைவேறியதுமே கலைக்கப்படும் நாடாளுமன்றம்

19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்குவோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அண்மையில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருந்தனர்.

அதையடுத்து தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார்.

இந்நிலையில், 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்தல் முறைமை மாற்றத்தை 20 ஆவது திருத்தச் சட்டமாக நிறைவேற்றலாம் என்றும், 20 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றிய பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (ற-சி)



## 46 பேர் தற்போதும் புனர்வாழ்வில்

விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைந்தனர் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது. அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு, கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்பட்டு வந்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மேஜர் ஜெனரல் விஜேதிலக,

இதுவரையில் விடுவிக்கப்பட்டவர்களில் 324 பேர் பல்கலைக்கழக கல்விக்குத் தகுதி பெற்றுள்ளனர். அவ்வாறு பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள், ஏற்கனவே பட்டப் படிப்பை முடித்து விட்டனர். 4 பேர் மருத்துவர்களாகவும், 2 பேர் பொறியியலாளர்களாகவும் வெளியேறியுள்ளனர்.

புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளில், 3 ஆயிரம் பேர் வரை, பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில், பணியாற்றுகின்றனர். விடுவிக்கப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். ஆடைத் தொழிற்சாலைகளிலும், சுய தொழில்களிலும், ஈடுபட்டுள்ளனர்.– என்று கூறியுள்ளார்.(ற-5)

## 19ஆவது திருத்தம் நாளை விவாதம்

வாக்குறுதிக்கு அமைய 19 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்டத்தின்மூலம் அரசசேவை, நீதிமன்றம், பொலிஸ்துறை, ஊழல் விசாரணை ஆகிய துறைகளுக்காக சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க முடியும். இவ்வாறான சுயாதீன ஆணைக் குழுக்கள் தொடர்பான சட்டமூலத்தை நிறைவேற்ற, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குப் பலம் இருக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும், நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார். அதனால், நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளிடத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரே, நாடாளுமன்றக் கலைப்புக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அதையடுத்து 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளின் ஆதரவையும் பெறும் பொருட்டு, சகல கட்சித் தலைவர்களுடனான சந்திப்புக்கு நேற்று விசேட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஜனாதிபதி மைத்திரி – பிரதமர் ரணில் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த 19 ஆவது திருத்தச் சட்டத்தை, நாளை எடுத்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளையும், நாளை மறுதினம் புதன் கிழமையும், 19 ஆவது திருத்தம் தொடர்பில் விவாதம் இடம்பெற்று, புதன்கிழமை இரவு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று காலையும் இடம்பெறவுள்ளது. (ற-5)

## நாளை வருகிறார் பஸில் ராஜபக்ஷ

அவரை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவியதும், தனது மனைவியுடன் அமெரிக்காவுக்குச் சென்ற பஸில் ராஜபக்ஷ அங்கு இதுவரை காலமும் தங்கியிருந்தார். இந்த நிலையில் கடந்த அரசில் இடம்பெற்ற ஊழல்கள் – மோசடிகள் – முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தில் 65 ஆயிரம் மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்காகவே, பஸில் ராஜபக்ஷ நாளை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அமெரிக்காவின் மின்னெ பொலிஸ் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, சன் கன்றி உள்நாட்டு விமான சேவை மூலம், ஜோன் எவ்.கெனடி விமான நிலையத்தை சென்றடைவார். அங்கிருந்து, எமிரேட்ஸ் விமானம் மூலம், டுபாய்க்குப் பயணமாவார்.

இதற்காக அவருக்கு, எமிரேட்ஸ் விமானத்தில், கட்டணம் அதிகமுள்ள வர்த்தக பிரிவில் ஆசனம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த விமானத்தில் வர்த்தக வகுப்பில் 10 ஆசனங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றில் மூன்று ஆசனங்களே முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் பஸில் ராஜபக்ஷவும் ஒருவராவார்.

டுபாயில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் முதல் வகுப்பில், பயணம் மேற்கொண்டு நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் 1.35 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைவார். பஸில் ராஜபக்ஷ தனியாகவே கொழும்பு திரும்பவுள்ளார் என்றும், அவரது மனைவி வரவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்படமாட்டார். அவரைக் கைது செய்வதற்காக பிடியாணை பிறப்பிக்கப்படவில்லை என்றும், பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். நிதிக்குற்றப் பிரிவில் வாக்குமூலம் அளிப்பதற்கு முன்னிலையாகுமாறு சாதாரணமான முறையில் பஸிலுக்கு அறிவிப்போம் என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கடுவெல நீதிமன்றத்தில் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கில், பஸில் ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு தடை விதிக்கக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் நிராகரித்திருந்தது. (ற-5)

## தேர்தல் முறையில் மாற்றம் வேண்டாம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற பல சிறுபான்மைக் கட்சிகளும், ஜே.வி.பி. போன்ற பல கட்சிகளும் அதில் கலந்துகொண்டன.

இலங்கையின் தற்போதைய தேர்தல் முறையே ஒப்பீட்டளவில் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளுக்கு சாதகமானது என்றும் ஆகவே அதனை மாற் றக்கூடாது என்றும் அந்த சந்திப்பில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து பி.பி.ஸி. செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், யாழ்ப்பாணத்தில் மக்கள் போரால் இடம்பெயர்ந்திருக்கும் நிலையில் அங்குஅங்கத்தவர்தொகையை உடனடியாகக்குறைக்கக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது என்று கூறியுள்ளார்.

இவை குறித்து அரசுக்கு அறிவிப்பது என்றும் அந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ற)

## மே முதல் வாரமே வருகின்றார் கெரி

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளரை இலங்கைக்கு வருமாறு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த பெப்ரவரி மாதம் நேரில் சென்று அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்புக்கு அமைய அவர் எதிர்வரும் ஜுன் மாதமளவில் இலங்கைக்கு வருகை தருவார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது அவரது பயணத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மே மாதம் முதல் வாரத்தில் அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இலங்கைக்கு வருகை தரும் அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

43 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும், அமெரிக்காவின் உயர் அதிகாரி ஜோன் கெரியாவார். (ற-5)

## மீள்குடியமர்ந்த மக்களுக்காக ஐ.நா. நிறுவனங்களிடம் உதவி

குடியமர்த்தப்பட் டுள்ளனர். அவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாத்திரம் மீள்குடியேற்ற அமைச்சால் தலா 13 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. அதனை விடவேறு உதவிகள் வழங்கப்படவில்லை. விடுவிக்கப்பட்ட பகுதிகளில், வீடுகள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் தங்கி நின்று, பற்றைகளைத் துப்புரவு செய்வதற்கு கூட வழியில்லாத நிலைமையே காணப்படுகின்றது. மீளக்குடியர்ந்த மக்களுக்கு உதவித் திட்டங்கள் எவையும் வழங்கப்படாமை தொடர்பில், மீள்குடியேற்ற அமைச்சின் உயர் அதிகாரியிடம் கேட்ட போது,

“மீள்குடியேற்ற அமைச்சில் இதற்குப் போதுமான நிதி இல்லை. சொற்ப நிதியைப் பயன்படுத்தியே மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய உதவிகள் வழங்குவதற்கும் குறிப்பாக அரை நிரந்தர வீடுகள் மற்றும் நிரந்தர வீடுகள் அமைப்பதற்குமான உதவிகளை ஐ.நா. முகவர் அமைப்புக்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரியுள்ளோம். இதுவரையில் உதவிகள் கிடைக்கவில்லை. உதவிகள் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். அந்த உதவிகள் வழங்கப்பட்டதும், மக்களுக்கு அவை நேரடியாக – விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்”– என்று கூறினார். (ற-5)

## தமிழரசுக் கட்சி மே தினம் திருமலையில்

மே தினத்தை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்து வருகின்ற[illegible] வடக்கில் இன்னமும் மே தினக் கொண்டாட்டங்கள் சூடு பிடிக்கவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தனது மே தினக் கொண்டாட்டங்களை இணைந்த வடக்கு–கிழக்கின்தலைநகரமான திருகோணமலையில் கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளது. (ற-5)

## அகதிகள் படகு கவிழ்ந்தது 650 பேர் வரையில் சாவு

ளுக்கான நிறுவனம் உறுதி செய்துள்ளது.

நீரில் மூழ்கியவர்களை மீட்கும் நடவடிக்கையில் 20 கப்பல்களும், ஒரு விமானமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 700 பேர் வரையில் படகில் பயணித்திருக்கலாம் என்று நம்பப்படும் நிலையில் இதுவரை 50 பேர் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடிப் படகு ஒன்றில் இருந்த புகலிடக்கோரிக்கையாளர்கள், மற்றொரு சரக்குக் கப்பலுக்கு மாறுவதற்காக முண்டியடித்தபோது படகு ஒருபுறம் நகர்ந்துள்ளது. அதையடுத்தே விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மைத்திரி பக்கம் விமல் சாய்வார்

### கூறுகின்றார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

கொழும்பு, ஏப்.20

விரைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்தும் விமல் வீரவன்ஸ புகழ்பாடுவார் என ஜனநாயக கட்சி தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்சி செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடும் சந்தர்ப்பத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தன் வயிற்றை குறித்து மாத்திரம் சிந்திக்கும் ஒருவரே விமல் வீரவன்ஸ. விமல் வீரவன்ஸ தனிப்பட்ட இலாபத்திற்காக எவ்வாறு வேண்டுமென்றாலும் பொய் சொல்லக் கூடிய ஒருவராவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் போன்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விரைவில் புகழ்பாடுவார் என்பது புதுமைப்பட வேண்டிய விடயமல்ல.– என்று அவர் கூறியுள்ளார். (ற)

# பனை வளத்தை அதிகரிக்க சங்கங்கள் சுற்றுப் பயணம்

## இந்தியா அல்லது கம்போடியா செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 20

வடபகுதியில் பனை வளத்தின் பயனை மேலும் அதிகரிப்பது மற்றும் அதன் செயற்பாடுகள் போன்றவற்றை ஏனைய நாடுகளில் கண்டறிந்து பகிர்ந்து கொள்வதற்கான சுற்றுப் பயணம் ஒன்றை விரைவில் பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்கள் மேற் கொள்ளவுள்ளன.

இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேள னத்தின் உதவியுடன் இந்த வெளிநாட்டுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இந்தியா அல்லது கம்போடியா நாட்டுக்கு இந்த சுற்றுப் பயணம் இடம்பெறலாம் என்று தெரி விக்கப்பட்டது.

குறித்த இரு நாடுகளிலுமே பனை வளம் செறிந்து காணப் படுகின்றது. இதன் காரணத்தால் குறித்த இரு நாடுகளில் ஒரு நாட்டுக்கு வடக்கில் உள்ள பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கப்பிரதிநிதிகள்சிலர்அழைத்துச் செல்லப்படலாம் என்று கூட்டுறவு திணைக் களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நாடுகளில் ஒரு நாட்டுக்கு கூட்டிச் செல்லப்படும் கூட்டுறவு பிரதிநிதிகள் அங்கு உற்பத்தி செய்யப்படும் பனம் பொருள் தொடர்பாக கற்றறிவதோடு பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற் கும் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இதேசமயம் இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்களின்சம்மேளனத்தின் உதவியுடன் அண்மையில் வடக்கில் இருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ளில் 12 பேர் அடங்கிய பொது முகாமையாளர்கள் குழுவினர் நேபாளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்தக் குழுவினர் நேபாளத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் அவற்றின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந் தனர்.

நோபாள நாட்டில் கூட்டுறவுத் துறை அதிகளவில் வளர்ச்சியடைந்துள்ளது. எவ்வாறான முறையில் இந்தக் கூட்டுறவு வளர்ச்சியடைந்தது குறித்தும் அந்தக் குழுவினர் விரிவாக ஆராய்ந்து அறிந்துள்ளனர். (வ–17)

---

## நகரசபை அலுவலருக்கு வரியிறுப்பாளர் கொலை மிரட்டல்

சாவகச்சேரி நகரசபையின் உத்தியோகத்தருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் வரியிறுப்பாளர் ஒருவர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நகரசபை உயர் அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றுள்ளது.

இதனால் அங்கு கடமை யாற்றும் அனைத்துத் தர உத்தியோகத்தர்களும் குறித்த வரியிறுப்பாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

ணி தொடர்பான தெளிவான வரைபடம் வழங்குமாறு கோரிய வேளையில் உத்தியோகத்தரை உயர் அதிகாரி முன்னிலையில் தாக்க முற்பட்டதுடன் கொலை அச்சுறுத்தலும் விடுத்து வெளியேறி யுள்ளார்.

இதை அடுத்து குறித்த வரியிறுப்பாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அலுவலக உத்தி யோகத்தர்கள் அலுவலக மேலிடத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ–9)

---

## சாவகச்சேரியில் தரித்துச் செல்லும் கடுகதி, லக்ஸரி ரயில்கள்

தென்மராட்சி,ஏப்.20

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் நகர் சேர் கடுகதி ரயிலும் கொழும்பிலிருந்துவரும் லக்ஸரி ரயிலும் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் தரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப் பட்டது.

கொழும்பு செல்லும் பயணிகள் ரயிலில் ஏறவும் கொழும்பிலிருந்து வரும் பயணிகள் இறங்கவும் என ரயில்கள் நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு செல்லும் இன்ரசிற்றி ரயில் சாவகச்சேரியில் நிறுத்தப் படுகின்றபோதிலும், ஆசன முன் பதிவுகள் இடம்பெறுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இன்ரசிற்றி மற்றும் லக்ஸரி ரயில்களையும் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் தரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்களும் வர்த்தகர்களும் கோரி வருவது குறிப்பிடத்தக்கது. (வ–9)

---



## மன்னார் தீவுப்பகுதிக்குள் வெளிநாட்டு பறவைகள்

மன்னார், ஏப்.20

மன்னார் பிரதான பாலம் முதல் தள்ளாடி வரையிலான கடற் கரையோரங்களில் புதிய வகையான கொக்குகளின் வருகை ஆரம்பித்துள்ளது.

கால நிலை மாற்றத்துக்கு அமைவாக வெளிநாட்டுப் பற வைகள் கடல் கடந்து மன்னார் தீவுப்பகுதிக்குள் வருடா வருடம் வருவது வழமை.

அந்த வகையில் புதிய வகை கொக்குகள் தற்போது மன்னார் கடற்கரை பகுதிக்கு வருகை தர ஆரம்பித்துள்ளன.வருகை தரும் கொக்குகள் மன்னார் தீவுப்பகுதியில் உள்ள கொக் குகளுடன் இணைந்து கொள்கின்றன. (வ–56)

---

## மீள்குடியமர நடவடிக்கை எடுக்கக் கோரி தீர்மானம்

### பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தில் நிறைவேறியது

பளை, ஏப். 20

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய பகுதிகளில் மக்களை விரைவில் குடிய மர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது தலைவரால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணை சபை உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தாவில் சந்தியிலிருந்து முகமாலை வரையான ஏ – 9 வீதியை அண்டிய சுமார் 2 கிலோ மீற்றர் தூரமான இந்தப் பகுதியில் வசித்த சுமார் 300 குடும்பங்கள் 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசித்து வருகின்றன.

மீளக் குடியமர்த்தும் பட்சத்தில் அனைத்துக் குடும்பங்களும் குடியமரத் தயார் நிலையில் இருப்பதாலும் அந்தப் பகுதியில் காணப்படும் வெடிபொருள்கள் அகற்றும் பணியினை துரிதப்படுத்தி விரைவில் மீளக் குடியமர்த்த நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தெரி வித்தார்.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சங்க மத்திய குழுத்தலைவர், உறுப்பினர், காப்பாளர், செயலாளர் போன்றோர் மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ–9)

---

## முதன்முதலில் அதிக குரங்குகள் பிடித்தார் வரணி இளைஞன்

கொடிகாமம், ஏப்.20



மக்களுக்கு நாசங்களை ஏற்படுத்தி வந்த குரங்குகளை இளைஞன் ஒருவர் முதன் முதலில் வரணியில் அதிகளவில் பிடித்துள்ளார். இவ்வாறு குரங்கு பிடிப்பவருக்கு தலா ஆயிரம் ரூபா வனவிலங்குகள் அதிகார சபையால் வழங்கப் படுகின்றது.

கொடிகாமம், கரம்பைக் குறிச்சி, வரணியைச் சேர்ந்த ஆறுமுகம் கண்ணன் என்பவரே ஒரே தடவையில் 13 குரங்குகளை நேற்று முன்தினம் சனிக்கிழமை பொறி வைத்து பிடித்துள்ளார்.

தென்மராட்சியில் குரங்குகள் விவசாயப் பயிர் வகைகள் மற்றும் மாமரங்களில் மாங்காய், முருங்கைக் காய், தென் னங் குரும்பைகள் என பலவகையான பயிர் வகைகளையும் நாசம் செய்து பல இலட்சம் ரூபா வருமானத்தை இல்லாது செய்து விவசாயிகளுக்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தன.

அத்துடன் வீடுகளின் கூரை ஓடுகள் என்பவற்றையும் உடைத்து நாசமாக்கப்பட்ட நிலையில் தென்மராட்சி வாழ். மக்களாலும், கமக்காரர் அமைப்புக்களாலும் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்த கோரிக்கையை அடுத்து, வனவிலங்கு அதிகார சபையினரால் விவசாயிகளுக்கு குரங்குகள் பிடிப்பதற்கான பொறி முறைப் பயிற்சிப்பட்டறை வழங்கப்பட்டு பொறிக் கூடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பொறியில் பிடிக்கப்படும் ஒவ்வொரு குரங்குக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் குரங்கு பிடிப்பவருக்கு வனவிலங்குகள் அதிகார சபையினரால் வழங்கப் படுகிறது. இதனால் குரங்குகளைப் பிடிப்பதில் அந்தப் பிரதேச விவசாயிக்ள், மக்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின் றனர்.

கடந்த வாரம் கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த விவசாயியான ந.உதயகுமார் என்பவராலும் இரண்டு தடவை களாக 12 குரங்குகள் பிடிக்கப்பட்டு வனவிலங்குகள் அதிகார சபையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன. (வ–105)

---

## விஷமிகளால் சேதமாக்கப்பட்ட விளைபயிர் பாதுகாப்பு வேலி

தென்மராட்சி,ஏப்.20

கட்டாக்காலி மாடுகளிடமிருந்து விளைபயிர்களைக் காப்பாற்ற விவசாயிகளால் அடைக்கப்பட்ட முட்கம்பி வேலி விஷமிகளால் சேதமாக் கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் இடம்பெற்றது.



பெருங்குளம், கிராம்புவில் பகுதியில் காலபோக நெற் செய்கை அறுவடையின் பின்னர் சுமார் 200 ஏக்கர் வயல்களில் உப உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டன. அவை தற் போது அறுவடையை அண்மித்த வேளையில் இரவுவேளைகளில் வரும் 15இற்கும்மேற்பட்ட கட்டாக் காலி மாடுகளால் அழிக்கப்பட்டு வந்தன.

இதனை அடுத்து இரவு வேளை யில் வரும் மாடுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள்சுழற்சி முறையில் காவல் இருந்தனர். பயிர்களிலிருந்து அறுவடை முடிய இன்னும் மூன்று மாதங்கள் செல்லும் என்பதால் விவசாயிகள் ஒன்றிணைந்து பெருங்குளம் மட்டுவில் வீதியில் உள்ள வயல் களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த தூண்கள் நிறுத்தி முட்கம்பி வேலி அமைத்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அங்கு வந்த இனம் தெரியாதோர் இரண்டுதூண்களை முறித்து வேலியை வீழ்த்தி விட்டுச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக கல்வயல் கமக்காரர் அமைப்பு மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் விவசாயிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் வேளையில் கிராம்புவில் விளை நிலத்தில் பயிர்களை அழித்த மூன்று மாடுகள் பிடிக்கப்பட் டுள்ளதாகவும் அவை இன்னமும் உரிமை கோரப் படாத நிலையில் கட்டப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ–9–105)

# மலக்கழிவு காரணமாக பெரும் சுகாதாரச் சீர்கேடு

## கொட்டுவதை நிறுத்துமாறு முழக்கன் மக்கள் கோரிக்கை

அச்சுவேலி,ஏப். 20

பவுஸர்களில் கொண்டு வரப் படும் கழிவுகளுடன் மலக்கழிவுகளும் எடுத்துவரப்பட்டு அச்சுவேலி தெற்கு, முழக்கன் பகுதியில் கொட்டப்படுகின்றன. குடியிருப் புக்களுக்கு அண்மையிலும், மேய்ச்சல்நிலம் மற்றும் மயானத்துக்கு அண்மையிலும் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவது பொதுச் சுகாதாரத்துக்கு கேடு விளைவிப்பதாக பொதுமக்கள் பிரதேசசபையிடம் முறையிட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கு முழக்கன் பகுதி யாழ்–பருத்தித்துறை பிரதான வீதிக்குக் குடாக்கடல் நீரேரிக்கும் இடைப்பட்ட நெருக்கமான நிலப் பரப்பாகும். இது ஒரு காலப் பகுதியில் மாட்டு வண்டிச் சவாரித்திடலாகவும் விளங்கியது. குடாக் கடல் நீரேரி ஓரமாக மூன்று மயானங்கள் அமைந்திருப்பதோடு மேய்ச்சல் தரவையாகவும் விளங்குகின்றது. மக்கள் குடியிருப்புக்கு மிக அண்மையில் இருப்பதோடு அந்தப் பகுதியில்உள்ளநீரேரியில்நண்டு,இறால் மீன்வகைகள் பிடிக்கப்படுகின்றன.

அத்துடன் அந்தப் பகுதியில் 50 குடும்பங்களுக்கு குடியிருப்பு நிலம் வழங்கப்படுவதற்கு நில அளவை செய்யப்பட்டு சம்பந் தப்பட்ட குடும்பங்களிடம் இருந்து ஆயிரக் கணக்கில் பணம் அறவீடு செய்யப்பட்டிருப்பதோடு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பு நிலம் வழங்கப்பட்டதை உறுதி செய்யும் வகையில் நில அளவை செய்தது தொடர்பான வரை படங்களும் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பெருமளவில் குப்பைகள் கழிவுகள் பிளாஸ்ரிக்கழிவுகள் கொட்டப்பட்டு இருப்பதோடு தற்போது மலக்கழிவுகளும் பவுஸர்களில் கொண்டு வந்து கொட்டப்படு கின்றன.

இதுதொடர்பாக பொது மக்கள் வலி. கிழக்கு பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்த போதிலும் பொருத்தமான நட வடிக்கைகளை எடுக்கவோ, கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய வகை யில் வேறுபடுத்தவோ எரிக்கவோ முற்படவில்லை என்று தெரிவிக்கின்றனர். (வ–11)



## மாடுகளின் நடமாட்டத்தால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு

மன்னார், ஏப்.20

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஏ–32 பிரதான வீதியில் மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் போக்குவரத்துப் பாதிக்கப்படுவதுடன், விபத்துக்கள் ஏற்படும் நிலையும் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துச் சேவைகள் குறித்த வீதியூடாகவே இடம் பெற்று வருகின்றன.

இந்தநிலையில் குறித்த வீதியில் நாளாந்தம் காலை மற்றும் மாலை நேரங்களில் பல நூற்றுக்கணக்கான மாடுகள் வீதியை இடைமறித்துக் கொண்டு செல்கின்றன.

இதனால் போக்குவரத்துக்கள் நீண்ட நேரம் தடைப்படுவதோடு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் வீதிகளில் திரிகின்ற மாடுகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அல்லது குறித்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச செயலகம், மாந்தை மேற்கு பிரதேச சபை என்பன உரிய சட்ட நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ–56)

## மதில் துவாரத்தை அடைக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.20

சாவகச்சேரி ரயில் நிலை யத்துக்கு முன்பாக உள்ள ரயில்வே திணைக்களத்தின் மதிலில் காணப்படும் பெரிய துவாரத்தை அடைக்குமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

மதிலுக்கு அப்பால் உள்ள பற்றைப் பகுதியில் கலாசார சீரழிவுகள் இடம் பெறுவதாகவும் மதிலில் உள்ள துவாரத்தின் ஊடாக வருவோர் சமூகச் சீரழிவில் ஈடுபடுவதால் அருகில் உள்ள நெல் வயல்களில் வேலைசெய்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக ரயில் நிலைய அதிபர் பொலிஸாருக்கு அறிவித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்த நெற்செய்கையா ளர்கள் போர் காலத்தில் உருவாக்கப்பட்ட மதிலின் துவாரத்தை அடைப்பதுடன் மதி லுக்கு வெளியே காணப்படும் பற்றை களை யும் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள்னர். (வ–9)



ஈழத்தில் வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ் வர ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது. திருக் கோணேஸ்வரர், மாதுமை அம்பாள் சமேதராக தேரில் திருவீதியுலா வருவதைக் காணலாம். (வ–40)

## கிளிநொச்சி மாவட்டத்தில் குற்றங்கள் வெகு குறைவு

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன. கூடுதலான குற்றச் செயல்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்த பொலிஸ் நிலையமாகவும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையமே காணப்படுகின்றது. – இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் உள்ளடங்கலாக 5 பொலிஸ் பிரிவுகள் காணப்படுகின்றன அவற்றில் நாச்சிக்குடா, முழங்காவில் பொலிஸ் நிலையங்களில் கடந்த மூன்று மாதங்களில் எந்விதமான பெரும் குற்றச்செயல்களும் பதிவாகவில்லை.

அத்துடன் பளை பொலிஸ் நிலையத்தில் உடல் சார்ந்த குற்றச் செயல்கள் இரண்டும், உடைமைகள் சார்ந்த குற்றச்செயல்கள் மூன்றும், பூநகரி பொலிஸ் பிரிவில் உடல்சார்ந்த குற்றம் ஒன்றும் உடைமை சார்ந்த குற்றம் ஒன்றும் பதிவாகியுள்ளன.

அத்துடன்குற்றச்செயல்களுக்கான தீர்வுகளும் 100 வீதம் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உடல் சார்ந்த 16 குற்றங்களும் உடைமை சார்ந்த 11 குற்றங்களும் பதிவுசெய்யப் பட்டிருந்தன. அவைகளுக்கான தீர்[illegible] 85வீதத்திற்கு மேலாகவே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே இவை வடக்கில் உள்ள 5மாவட்டங்களின் பொலிஸ் பிரிவுகளுடன் ஒப்பிடுகையில் கிளி நொச்சி மாவட்டத்தில் குற்றச் செயல்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இனிவரும் காலங்களில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதை முடியுமான வரை எங்களால் குறைக்க முடியும்"– என்றும் அவர் தெரிவித்தார். (ற–21)

## சம்பளமின்றி பதில்கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

தென்மராட்சி,ஏப்.20

பொதுச் சுகாதார பரிசோத கர்கள் பதில்கடமைபுரியசுகாதாரத்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் பொதுச்சுகாதார பரிசோதகர் இல் லாத பிரிவுகளுக்கு கடமையில் உள்ள ஏனைய பொதுச் சுகாதார பரிசோத கர்கள் பதில் கடமை புரிந்து வந்துள்ளனர்.

இந்தநிலையில் பதில் கடமைக் கான கொடுப்பனவு நீண்ட காலமாக வழங்கப் படவில்லை. பயணப்படி மட்டும் வழங்கப்பட்டது. பதில் கடமைக்குரிய கொடுப்பனவு வழங்கக் கோரி குறித்த உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனை அடுத்து கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பதில் கடமை செய்வதை பொது சுகாதார பரிசோதகர்கள் நிறுத்தி அத்தியாவசியம் என்று கருதப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதனால் உள்ளூராட்சி சபை களால் வழங்கப்பட்ட நூற்றுக் கணக்கான கட்டட விண்ணப்பங்கள் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தேங்கியி ருந்தன. (இது தொடர்பாக உதயனில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது)

இந்தநிலையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பதில் கடமை புரிய கடந்த ஜனவரி தொடக்கம் அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கடமை புரிய அனுமதி வழங்கப்பட்ட போதிலும் பதில் கடமைக்குரிய கொடுப்பனவு தொடர்பாகடிதத்தில்குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## விபத்து, அவசரசிகிச்சைப் பிரிவுக்கு 300 மில். செலவில் புதிய கட்டடம்

### யாழ். போதனா மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்.போதனா மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டட வேலைகள் 300 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக் கப்படவுள்ளன என்று பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் பிரதான நுழைவாயிலுக்கும் முன்னைய வெளி நோயாளர் பிரிவுக்கும் இடைப்பட்டதாக மருத்துவ மனையின் பின்புறமாக மின்சார நிலைய வீதியை அண்மித்ததாக அந்தக் கட்டடம் அமையவுள்ளது. அந்தக் கட்டடத்தில் முன்னர் மருத்துவ விடுதிகள் இயங்கி வந்தன. ஆனால் அந்தக் கட்டடங்கள் சீர்குலைந்து பழுதடைந்து விட்டதால் கடந்தசில வருடங்களாக குறித்த கட்டடம் பயன்படுத்தமுடியாதநிலைஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் அந்தக் கட்டடம் தற்போது இடிக்கப்பட்டு வருகிறது. கடந்த வாரம் தொடக்கம் கட்டடத்தை இடிக்கும் பணி இடம்பெற்று வருகிறது. அந்த வேலைகள் நிறைவடைந்த பின்னர் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும். 5 மாடிகள் கொண்டதாகவே கட் டத்துக்கான அத்திபாரம் இடப்படவுள்ளது. இடப்பற்றாக் குறை காரணமாக அவ்வாறு செய்ய வேண்டியுள்ளது. எனினும் முதலில் 2 மாடிகளுக்கான பணிகளே முன்னெடுக்கப் படும். அதற்கு மாத்திரம் உலகவங்கி 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கித் தந்துள்ளது.

கட்டட வேலைகள் நிறைவ டைய சுமார் 2 வருடங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அவ்வாறு அமையும் கட்டடத்தில் விபத்துப்பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பன அமையவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ–4)

## உதயங்கவுக்கு எதிரான விசாரணை ஆரம்பம்; அதிகாரிகள் ரஷ்யா விரைவு

கொழும்பு, ஏப்.20

முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


ஆங்கில வார இதழொன்று இது தொடர்பிலான விடயங்களை வெளியிட்டுள்ளது.

பிரிவினைவாத இயக்கங்களுக்கு ஆயுத விநியோகம் மற்றும் இலங்கை பிரஜையை தனது சொந்த போசணைசாலைக்கு வேலைக்கு அமர்த்திய பின் அவர் ரஷ்ய தூதுவராலயத்துக்கு மொழிபெயர்ப்பாளராக அமர்த்தப்பட்டு, மர்மமான முறையில் உயிரிழந்தமை உள்ளிட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரும் ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவராக கடமையாற்றிய உதயங்க வீரதுங்கவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக உயர் பொலிஸ் மற்றும் அரசு அதிகாரிகள் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் அங்கு உக்ரேன் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதம் விநியோகம் தொடர்பாகவும் இலங்கை பிரஜை உயிரிழப்புத் தொடர்பாகவும் விரிவான விசாரணையை நடத்தவுள்ளதாக தெரியவருகின்றது.

அத்தோடு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவிலுள்ள உக்ரேன் தூதுவரை கொழும்புக்கு அழைத்திருப்பதாகவும் வீரதுங்க சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் இவரின் [illegible]ணத்தில் தீவிரமாக கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# இரண்டாம் தரப் பிரஜைகள் என எவருமில்லை

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.20

நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் இல்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்தைத் தமிழில் இசைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும்– இதன் மூலம் நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் கிடையாது என்பது புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம் கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறுபான்மை மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதப்பட்டனர் எனவும் தற்போது அந்த நிலைமை மாறி அனைவரும் சகோதரர்களாக வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசு நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வே தீர்வு என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மஹிந்தவுக்கே மக்கள் ஆதரவு

## கெஹலிய கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.20

தேர்தல் ஒன்றில் தோல்வியடைந்தவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது என்று உலகில் எங்கும் சட்டம் இல்லை. எனவே மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவை அனைவரும் கருத்திற்கொள்ளவேண்டும்– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியல் செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்த தடையும் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அது சிறந்த விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவை அம்பாந்தோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் 37 க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமை தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மஹிந்த ராஜபக்ஷவுடன் பெரும் அரசியல் சக்தி ஒன்று திரண்டுள்ளது என்ற விடயத்தை அனைத்து தரப்புக்களும் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியல் செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்தத் தடையும் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அது சிறந்த விடயமாகும்.

நான் கண்டியில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபாலாவின் பகலுணவு ஒன்றுகூடல் ஒன்றுக்கு சென்றிருந்தேன். அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியல் செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்தத் தடையும் இல்லை என்று கட்சியின் உயர் மட்டம் தீர்மானித்துள்ளதாக கட்சியின் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்திருந்தாலும்– அவருக்கான மக்கள் ஆதரவு அவ்வாறே உள்ளது. தேர்தல் ஒன்றில் தோல்வியடைந்தவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது என்று உலகில் எங்கும் சட்டம் இல்லை. எனவே மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும். அப்படியானால் 29 தடவைகள் தோல்வியடைந்த ஒருவர் தற்போது உயர்பதவியில் இருக்கின்றாரே? அதற்கு என்னசொல்லப் போகின்றார்கள்? இதேவேளை தற்போதைக்கு நாட்டில் தேசிய அரசு அவசியமில்லை. தேசிய அரசு போர்க் காலத்தில் தேவையாக இருந்தது. சுனாமி போன்ற இடர்கள் ஏற்பட்ட போது தேசிய அரசு தேவையாக இருந்தது. ஆனால் தற்போது தேசிய அரசுக்கான அவசியம் இல்லை."

– என்றார். (ற)

# அவசரமான தேர்தல்முறை மாற்றம் தமிழருக்குச் செய்கின்ற துரோகம்

## சாடுகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஏப்.20

இந்நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தேவை பட்டியலில் முன்னுரிமை கொண்ட விடயம் அல்ல. உண்மையில் இது அதிகமாக தேவைப்பட்டது சில பெரும்பான்மை கட்சிகளுக்கும், சில பெரும் பான்மை சமூக அமைப்புக்களுக்குமே. இதை நாம் புரிந்துக் கொண்டு, தேச நலன் கருதியும், ஐக்கியம் கருதியும் விட்டுக்கொடுப்புகளுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க நாம் உடன்பட்டோம். இவ் விதம் புதிய ஜனாதிபதியையும், புதிய பிரதமரையும், புதிய அரசையும் உருவாக்க பெரிதும் துணை வந்த எமக்கு இன்று துரோகம் இழைக்க பெரும்பான்மை கட்சிகளில் இருக்கின்ற சில சக்திகள் திட்டமிடுகின்றன. – இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் முறை மாற்றத்தை சட்ட வரைவை அவசர, அவசரமாக நாடாளு மன்றத்தில் நிறைவேற்ற அனுமதி யளிக்க முடியாது. இந்த அவசரம் இன்று அரசில் இணைந்து கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரிவுக்கே இருக்கின்றது. இது தொடர்பில் ஒரு அமைச்சரவை ஆவணத்தை இவர்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்க முயல்கிறார்கள். இதை அமைச்சரவை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதை அமைச்சரவையில் உள்ள சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளின் தலைவர்களும், தமிழ், முஸ்லிம் அமைச்சர்களும் வலியுறுத்த வேண்டும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த விடயத்தில் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயத்தை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இருக்கின்றது. இது தொடர்பில் தேவை ஏற்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட் டோம்"– என்றும் அவர் தெரிவித் தார்.

"எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எதேச் சதிகாரமான தேர்தல் முறை மாற் றத்துக்கு நாம் உடன்பட முடியாது. நீண்டகாலத்துக்கு ஒருமுறை நடை பெறும் இந்தத் தேர்தல்முறை மாற்றத்துக்கு நாம் உடன்பட்டால், அது இந்நாட்டு தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தையே அழித்து, ஒழித்து விடும். எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய் விடும். இது தொடர்பில் தற்போது சிங்கள மொழி ஊடகங்கள் கூடிய அக்கறை காட்டுகின்றன. அதேபோல் தமிழ் ஊடகங் களும் அதிகூடிய அக்கறையை காட்ட வேண்டும்"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# தேர்தலுக்காக மக்களை குழப்புகின்றன சில சக்திகள்

## மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

கரணவாய், ஏப்.20

தேர்தலை மையமாகக் கொண்டு மக்களை குழப்புகின்ற கருத்துக்களை சில சக்திகள் முன்வைக்கின்றன. மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. நேரம் வரும் போது நாங்கள் நேரில் வந்து சரியான பதிலைத் தருவோம். – இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தேர்தல் அண்மிப்பதைச் சாதகமாகக் கொண்டு சில சக்திகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யும் அனைத்து நல்ல காரியங்களையும் திரிவுபடுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றன. தேர்தல் எப்போது நடைபெறும் என்று இன்று வரை யாருக்கும் தெரியாது. ஒருவேளை 19ஆவது திருத்த சட்ட வரைவு தோல்வியடைந்தால் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். இந்தச் சூழ்நிலையில் எப்போதோ நடைபெறவுள்ள தேர்தலை மையமாகக் கொண்டு மிகமிகத் தீவிரமாக கருத்தரங்குகளையும் சிறுசிறு கூட்டங்களையும் ஏற்பாடு செய்து மக்களைக் குழப்புகின்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை சில சக்திகள் முன்வைக்கின்றன.– என்றும் அவர் தெரிவித்தார்.

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 108 ஆவது நிறைவு விழாவும், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் இரவு சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் நா.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றன.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சதாவதானி நிலையத்தினர் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் ஆளுமையை விருத்தி செய்வதற்காகவும் இத்தகை நிகழ்ச்சிகளை நடத்தி வருவது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

இந்த மேடை அரசியல் பேசுவதற்கு பொருத்தமில்லாதது. இருந்தாலும் சம காலத்தில் என்ன நடக்கின்றது என்பதையும், எதனை நாங்கள் பின்பற்ற வேண்டும் என்பதையும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எமக்குண்டு.



எது சரியானது, எதை மக்கள் செய்யவேண்டும் என்று சொல்ல வேண்டியவர்கள் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர். மக்கள் குழப்பமடையத் தேவையில்லை நீங்கள் மிகவும் அவதானமாக இருங்கள்."– என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ .உதயகுமார், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பா.ரகுநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற–108)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** நீண்ட நாள்களாக இருந்த கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வீர்கள். சுபகாரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**இடபம்:** உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்து சொல்வதையும் தவிர்த்தல் நலம். முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**மிதுனம்:** புதிய காரியங்களை செய்யத் தொடங்குவதற்கு முன் நல்ல நேரம், காலம் பார்த்து செய்வது நல்லது. வேலையில் இருந்த பளு கொஞ்ச கொஞ்சமாகக் குறையும்.

**கடகம்:** நீண்டநாள்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தொழிற்சாலைகள் வைத்திருப்போருக்கு நல்ல இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** பொதுவான விடயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள். அயலாரின் ஆதரவு கிடைக்கும். கலைத்துறை யினருக்கு சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி.

**கன்னி:** பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். சிற்சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள் தான் என்பதை உணருங்கள். உங்கள் தன்னம்பிக்கை, திறமை திறன் அதிகரிக்கும்.

**துலாம்:** உடலைப் பற்றி தவறான எண்ணங்கள் தோன்றி மறையும். விலகி நின்ற உறவுகளும் உரிய நேரத்தில் கை கொடுப்பார்கள். புதிய வீட்டுக்குச் செல்வது சிறிது தள்ளிப் போகலாம்.

**விருச்சிகம்:** வேலை மாற்றம் உறுதிபடுத்தப்படுகிறது. வெளிநாட்டில் பணிபுரியும் அன்பர்களுக்கு அரச அனுகூலம் உண்டு. வியாபாரிகளுக்கு புதிய திட்டங்களை செயற்படுத்திக் கொள்ள சிறப்பான சந்தர்ப்பம் அமையும்.

**தனுசு:** உற்பத்தி சார்ந்த தொழிற்துறையாளர்களுக்கு தொய்வு இன்றி தொழில் நடைபெறும். கலைத்துறையினருக்கு பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் மிகச் சாதுரியமாகக் கையாளுவீர்கள். உங்களது யோசனைகளை மற்றவர்கள் கேட்டும், அனுசரித்தும் செல்வார்கள்.

**கும்பம்:** உங்களின் செயற்பாட்டினால் உங்கள் குடும்பத்திற்கு நன்மை ஏற்படும். குடியிருக்கும் வீட்டை மாற்றவும் சிலருக்கு வாய்ப்புண்டு. பணவரவில் ஓட்டம் இருக்கும்.

**மீனம்:** இரக்கப்பட்டு செய்த உதவி கூட ஏன் செய்தோம் என்று எண்ண வைக்கும். சுகாரிய விடயங்கள் தொய்வு இல்லாமல் நடக்கும். மேலிடத்தில் உள்ள அதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள்.




ஹலோ.... யாராவது இருக்கிங்களா? என் வண்டிக்கு டேங்க் புல் பண்ணனும்...

## வாடிக்கையாளர்கள் வைத்த பெயர்



யூக்நைட், யூனிகான், யூத், யூனிட்டி, யுப்போரியா...! இதெல்லாம் என்ன என்று கேட்கிறீர்களா? எல்லாமே மைக்ரோமெக்சின் துணை நிறுவனமான 'யு'வின் புதிய தொலைபேசிக்காக ரசிகர்கள் பரிந்துரைத்த பெயர்கள்தான். இளைஞர்களைக் கவரும் வகையில் மைக்ரோமெக்ஸ் நிறுவனம் மூலம் 'யு யுரேகா' தொலைபேசியை அறிமுகம் செய்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாக இரண்டாவது தொலைபேசிக்கான திட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இந்தத் திட்டத்துக்கு புரொஜெக்ட் சீஸர் எனப் பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் தொழில் நுட்ப தளங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தொலைபேசிக்கான பெயர் சூட்டும் பொறுப்பை பயனாளிகளிடமே ஒப்படைக்க முடிவு செய்து, பெயர்கள் கோரப்பட்டன.

இப்படிக் குவிந்த பெயர்களில் அதிக வாக்குகள் பெற்ற பெயர்களின் பட்டியல் தான் மேலே பார்த்தது. எல்லாம் சரி இதில் எந்த பெயர் தேர்வானது தெரியுமா? யுப்போரியா. அந்தப் பெயரில்தான் அடுத்த யு போன் வெளியாக உள்ளது.

இது 64 பிட் புரொஸர், 2 ஜிபி ரம், 16 ஜிபி நினைவுத்திறன் ஆகியவற்றுடன் அண்ட்ரொய்ட் லாலிபாப் அடிப்படையிலான சிஎம் ஓஎஸ் 12 கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## அகலமான நாக்கு

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த தந்தையும் மகளும் உலகின் அகலமான நாக்குக்கு சொந்தக்காரர்களாக உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

பைரான் ஸ்க்லெங்கருடைய நாக்கின் அகலம் 8.6 சென்ரி மீற்றராகும். தந்தைக்கு நான் ஒன்றும் சளைத்தவள் அல்ல என்பதை நிரூபிக்க பிறந்திருக்கும் இவரது 14 வயது மகள் எமிலியுடைய நாக்கின் அகலம் 7.3 சென்ரி மீற்றர். அவ்வகையில், உலகிலேயே அதிக அகலம் கொண்ட நாக்குகளை உடைய ஆணாக பைரான் ஸ்க்லெங்கரும், பெண்ணாக இவரது மகள் எமிலியும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....

நம்ம நாராயணசாமி ஒரு நாள் அவர் மகன் கூட இட்லி சாப்பிடப் போனார். இட்லியும் வந்தது. அவர் மகன் தீக்குச்சியை பற்ற வைத்து இட்லி மேல் காட்டினான்.

யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. கடைக்காரர் ஏன் தம்பி, இட்லி மேல் தீக்குச்சியை காட்டுகிறாய் என்று கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான், எங்கப்பா சொன்னது சரியா இருக்குதா என்று பார்க்கிறேன் என்றான்.

உங்கப்பா என்ன சொன்னாரு ? அதற்கு அவன் சொன்னான்.

இங்க இட்லி பஞ்சு மாதிரி இருக்கும் என்று சொன்னாரு, அதான் பற்றிக் கொள்ளுதா என்று பாக்கிறேன்–என்றான்.



வாழ்க்கை என்பது
வெள்ளைக் காகிதம்
கவிில்
ஓவியமாவதும்
குப்பைக்கு
போவதும்
வரைபவர்
கைகளில்...

I like

## திரிஷா இல்லனா நயன்தாரா

இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தற்போது நடித்து வரும் 'திரிஷா இல்லனா நயன்தாரா' எனும் திரைப்படத்தின் டீசர், சமூக வலைத்தளங்களில் பட்டையைக் கிளப்பி வருகின்றது. ரசிகர்களிடையே வரவேற்பு பெற்றுள்ள இந்த டீசரானது, சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டும் வருகிறது.

இதில் ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக கயல் ஆனந்தி நடித்துள்ளார்.

பல்வேறு இயக்குநர்களிடம் இணை இயக்குநராக பணியாற்றிய ஆதிக் ரவிச்சந்திரன் இத்திரைப் படத்தை இயக்கியிருக்கிறார். இந்தத் திரைப்படத்துக்கான இசையை ஜி.வி.பிரகாஷே இசையமைத்துள்ளார்.



# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | மாதகல் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 600 | 300 |
| நண்டு | 250 | 300 | 300 | 300 | 400 | 200 |
| கணவாய் | 500 | 550 | 600 | 600 | 450 | 400 |
| பாரை | 500 | 550 | 500 | 450 | 350 | – |
| சுறா | 500 | 500 | – | 600 | – | – |
| சீலா | 300 | 300 | 400 | 400 | 300 | 400 |
| விளை | 600 | 400 | 400 | 450 | 350 | 400 |
| முரல் | 250 | 300 | 300 | 350 | 250 | 300 |
| கும்பிளா | 350 | 200 | 350 | 400 | – | – |
| கிழாக்கன் | 300 | 600 | – | 400 | 400 | – |
| ஒரா | 400 | 300 | 300 | 350 | – | – |
| திரளி | 150 | 150 | 200 | 250 | – | 200 |
| நகரை | 150 | | 200 | 300 | – | – |
| சூடை | 150 | 100 | 100 | 160 | 100 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 200 | 300 | – | – |
| திருக்கை | 130 | 300 | 300 | 250 | 140 | 150 |
| பாலை | 300 | 200 | – | 400 | – | 400 |
| வாழை | 100 | 100 | – | 300 | 250 | – |
| கொய் | 100 | 150 | 80 | 100 | – | – |
| மதனம் | 150 | 200 | 200 | 230 | 200 | 300 |

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 30 | 30 | 20–30 | 40 | 30 |
| கத்தரி | 60 | 40 | 50–60 | 30 | 40 | 60 | 30 |
| கரட் | 100 | 110 | 120 | 80 | 80–120 | 120 | 100–120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 50 | 45 |
| பயிற்றை | 80 | 120 | 60 | 80 | 80–120 | 80 | 20–50 |
| பாகல் | 100 | 160 | 80–100 | 100 | 80–120 | 80 | 50 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 90 | 80 | 80–100 | 120 | 60 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 90 | 80 | 80–90 | 90 | 65 |
| சி.வெங்காயம் | 60 | 40 | 80–100 | 60 | 50–80 | 80 | 50 |
| பூசணி | 50 | 40 | 40 | 30 | 20–35 | 40 | 30 |
| தக்காளி | 40 | 60 | 40 | 50 | 40–50 | 60 | 35 |
| வாழைக்காய் | 50 | 60 | 30 | 40 | 40–60 | 40 | 25 |
| கீரை | 20 | 30 | 30 | 15 | 20–30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 30–40 | 30 | 30–35 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 | 30–40 | 30 | 20 |
| கோவா | 30 | 60 | 40 | 20 | 25–35 | 40 | 25 |
| வெண்டி | 50 | 80 | 40 | 40 | 50–80 | 20 | 15 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 100 | 100–140 | 160 | 150 |
| லீக்ஸ் | 150 | 160 | 240 | 160 | 160–180 | 240 | 120 |
| தேங்காய் | 60 | 50 | 60 | 50–60 | 40–60 | 60–70 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 75–90 | 90 | 150 |
| தேசிக்காய் | 150 | 160 | 160 | 120 | 140–160 | 140 | 150 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20–30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 80 | 50–80 | 120 | 40–70 |
| இராசவள்ளி | 120 | 120 | – | 100 | 80–100 | 140 | 40–60 |



# அன்னாசி குறித்து சில அறிவுரைகள்

சுவையான அன்னாசி பழத்தில் பல உடல்நல பயன்கள் இருப்பது போல சில உடல்நலத்தை பாதிக்கும் காரணிகளும் அடங்கியுள்ளன. இதனை அளவாக சாப்பிட்டால் பயன்கொடுக்க கூடியதாகவும், அளவு மீறினால் பலவித பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக் கிறது.

இரத்த சீனியை ஊக்குவிக்கும் அன்னாசிப் பழத்தில் இயற்கையான சீனிச்சத்து அடங்கியுள் ளது. ஆனால் அது அதிகளவில் உள்ளது தான் பிரச்சினையாக இருக்கும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு அதன் தாக்கம் நல்லதல்ல. இது இரத்தத்தில் உள்ள இன்சுலின் அளவை அதிகரித்துவிடும்.

அன்னாசி பழத்தில் ப்ரோம்லைன் உள்ளது. இது நாம் உண்ணும் சில மருந்துகளோடு சேர்ந்து கொண்டு பிரச்சினைகளை ஏற்படுத்தும். நீங்கள் வலிப்புத் தடுப்பு மருந்துகளை பயன்படுத்தி வந்தால், இந்தப் பழத்தைஉட்கொள்ளவேண்டாம்.

பழுக்காத அன்னாசி பழத்தை சாப்பிட்டாலோ அல்லது ஜுஸ் போட்டு குடித்தாலோ அது ஆபத்தை ஏற்படுத்தலாம். இது நச்சுத்தன் மையை ஏற்படுத்தி விடும், கடுமையான வாந் தியையும் உண்டாக்கும்.

அன்னாசிப் பழத்தை அதிகமாக உட்கொண்டால் பற்களில் அதிகம் கரை ஏற்படும். இது பற்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். பற்களின் எனா மலின் மீதும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். பல் புழைகள் மற்றும் பல் ஈறு அழற்சி பிரச்சினைகளை கொண்டவர்கள் அன்னாசிப் பழத்தை அதிகமாக உட்கொள்ள வேண் டாம்.

அன்னாசிப் பழம் சாப்பிடுவதால் சில பெண் களுக்கும் ஆண்களுக்கும் லேசான ஒவ்வா மைகள் ஏற்படலாம். இதனை போக்க அன் னாசி பழத் துண்டுகளை சுத்தமான உப்பு தண்ணீரில் கழுவ வேண்டும். சொறியை ஏற் படுத்தும் பழ என்சைம்களை இது நீக்கிவிடும்.

கருவை சுமக்கும் பெண்கள் இந்தப் பழத்தை உண்ணாமல் இருக்க அறிவுறுத்தப்படுகின்ற னர். இருப்பினும் பிரசவத்தின் ஆரம்ப கட் டங்களில் இல்லாமல் பிற கட்டங்களில் பெண்கள் இந்தப் பழத்தை உண்ணலாம்.

முடக்குவாதம் மற்றும் கீல்வாதம் உள்ளவர் கள் அன்னாசி பழத்தை அதிகமாகச் சாப்பிட வேண் டாம். அன்னாசிப் பழம் சாப்பிடும் போது அது இரைப்பை குடலுக்குள் செல்லும் போது ஆல் கஹாலாக மாறி விடுகிறது. இதனால் அதை உட்கொள்பவர்களுக்கு அது கீல் வாதத்தை தூண்டி விடும்.

அன்னாசிப் பழத்தில் அதிக அளவிலான உப்பு உள்ளது. அதனால் இதை உட் கொண்ட பிறகு வாயிலும் தொண்டையிலும் ஊறும் உணர்வு ஏற்படும். இதனால் சில பேருக்கு வயிற்று வலி யும் கூட ஏற்படும்.

## பூண்டு

இரத்த அழுத்தம் உடல் பருமன் உடையோர், புற்றுநோயாளிகள் அவசியம் சாப்பிட வேண் டிய உணவு. கிருமி கள், வைரஸ், நுண்ணுயிர்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப் பிலிருந்து காக் கும். சுவாசப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும். தாய்ப்பால் சுரக்க உதவும். நீரிழிவு நோயா ளிகள் தினமும் உண்ணலாம்.



சீனியின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக் கும், கணையத்துக்கு நன்மைகளைச் செய்யும். பூண்டு சாப்பிட்டால் துர்நாற்றம் வீசும் என்று, பூண்டை ஒதுக்கக் கூடாது. பெருங்குடல், நுரையீரல், மார்பகம், மலக்குடல் புற்றுநோய் கள் வராமல் தடுக்கும். கொழுப்பைக்கரைத்து, இதய நோய்கள் வராமல் காக்கும்.

## நாளை

**சித்திரை-08**
**செவ்வாய்க்கிழமை**
**21.04.2015**

திதி: திருதியை மு.இ.08.29 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.02.51 வரை
சுபநேரம்: 10.31–12.01 வரை
இராகுகாலம்: 03.01–04.31 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மலையையே துளையுங்கள்

சரியான சிந்தனையும், முறையான பயிற்சியும் பெற்றவர்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட் டார்கள். இரும்பு போல மன உறுதியும், மலை களைத் துளைத்துச் செல்லும் வலிமையும் கொண்டவராக செயற்படுங்கள்.

இந்த உலகம் என்னும் பயிற்சிக்கூடத்தில் எம்மை வலிமை யுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே நாம் வந்திருக்கிறோம்.

சண்டையிடுவதால் பயனில்லை. ஒற்றுமையுடன் வாழ்வதில் தான் முன்னேற்றமே அடங்கியிருக் கிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | | | | 6 | 7 | 8 | |
| | 7 | 5 | | 4 | | | | 2 |
| 1 | 6 | | 7 | 2 | | | | 5 |
| | | | | 9 | | | | 7 |
| | | | 8 | | 3 | | | |
| 9 | | | | 6 | | | 3 | |
| 6 | | | | 1 | 4 | | 7 | 3 |
| 4 | | | | 3 | | 9 | 5 | |
| | 9 | 3 | 2 | | | | 1 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 3 | 8 | 6 | 4 | 2 | 5 | 7 |
| 7 | 2 | 6 | 9 | 5 | 1 | 3 | 4 | 8 |
| 8 | 4 | 5 | 2 | 3 | 7 | 6 | 9 | 1 |
| 9 | 1 | 8 | 5 | 7 | 6 | 4 | 2 | 3 |
| 6 | 5 | 2 | 3 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 4 | 3 | 7 | 1 | 2 | 9 | 8 | 6 | 5 |
| 2 | 8 | 1 | 4 | 9 | 5 | 7 | 3 | 6 |
| 5 | 6 | 4 | 7 | 1 | 3 | 9 | 8 | 2 |
| 3 | 7 | 9 | 6 | 8 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உள் விவகாரங்களை தீர்த்துக்கொண்டு தயாராகுக

அரசமைப்பில் மாற்றம் செய்து மூன்றாவது தடவையும் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து கோலோச்சுவதற்கு பேராசை கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதில் எதிர்பாராத விதமாகத் தோல்வி கண்டதுடன் ஒதுங்கிவிடாமல் மீண்டும் பொதுத் தேர்தலில் போட்டியிட விருப் பம்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என்பது தெரிகிறது. அவர் தோற்றகையோடு, அவர் சிந்திய ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருந்த அனேகர் அதிர்ச்சியடைந்து போனார்கள். அவருடைய தம்பிமார், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் மட்டுமன்றி அவர் பின்னால் அரசு இயந்திரத்தின் சகல பிரிவுகளிலும் ஆக்கிரமித்துக் கொண்டு அதிகாரம் செலுத்தி வந்தவர்கள் சடுதியாக ஏற்பட்ட இந்தத் தாக்கத்தினால் நிலை தடுமாறிப் போனார்கள்.

இப்பொழுது முன்னாள் ஜனாதிபதி மீண்டும் வரும் தேர்தலில் போட்டியிட வருவதற்கு அவர் கூறும் நியாயம் மக்கள் அவரை விரும்பு கிறார்கள் என்பதாகும். மக்கள் விரும்பும்போது நான் ஒதுங்கியி ருந்துவிட முடியாது என்று அவர் அறிவித்துள்ளார்.

நியாயமாகப் பார்த்தால், அவரை முழுநாடே வேண்டாம் என்று ஒதுக்கி விட்டதை அவர் மறுக்க முடியாது, மறக்க வும் முடியாது. சிங்கள மக்களில் ஒரு பிரி வினரைத் தவிர ஏனைய சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரும் வேண்டாம் என்றே தீர்ப்பளித்தார்கள். இப்பொழுது அவர் கூறும் மக்கள் என்போர் ஜனாதி பதித் தேர்தலில் அவருக்கு ஆதரவாக வாக்க ளித்தவர்களை மட்டுமே.

முழுநாடும் ஒதுக்கிவிட்ட பிறகு மீண்டும் ஓர் அதிகாரப் பதவியை அவர் நாட வேண்டியிருப்பதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று அவர் ஆரம்பித்துவைத்து இடையில் நின்றுபோன, இப்பொழுது குளறுபடிகளுக்கும் விசாரணைகளுக்கும் உள்ளாகியுள்ள பல்வேறு திட்டங்களையும் தொடரவேண்டியிருக்கிறது. பல்வேறு ஊழல்கள் சீர்கேடுகளை நிகழ்த்தியுள்ள உறவினர்கள் நண்பர்களை காப்பாற்றியாக வேண்டியிருக்கிறது. அத்தகையரே, அவரை எப்படியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூலம் போட்டியிடச் செய்து பிரதமராக்கி விட வேண்டும் என்று, பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் முன்னாள் அமைச்சர்கள் அரசியல் தலைவர்கள் அடங்குவர். தென்னிலங்கையில் முக்கிய நகரங்களில் எல்லாம் மக்களைப் பெரும் எண்ணிக்கையில் திரட்டி ஆதரவுக் கூட்டங்களை அவர்கள் நடத்துகிறார்கள்.

நிலைமைகளைப் பார்க்கும்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நியமனம் கிடைக்காது போனால், வேறு ஒரு கட்சியைத் தோற்றுவிக்கவும் அவர் தயாராக இருப்பதுபோல் தெரிகிறது. அவ்வளவுக்கு அவர் அவசரப்படுவது வெளிச்சமாகப் புலப்படுகிறது. இது மட்டுமல்ல பல மேற்கு நாடுகளுக்கு சவால் விட்டுக் கொண்டு சீனாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தி, அதன் மூலம் பெரிய திட்டங்களை ஆரம்பிக்கச் செய்த அவரை நம்பி கோடி கோடியாய் பணத்தை இறைத்துவிட்ட வெளிநாட்டு நண்பர்களையும் அவர் தாஜா செய்தாக வேண்டிய நிலை.

மஹிந்த ராஜபக்ஷ எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் ஓர் அதிகாரப் பதவியில் அமர்வாரானால் ஜனாதிபதித் தேர்தலில் அவரை தோற்கடிக்க செய்த எல்லாருமே அதன் பிரதிபயனை மிகப் பெரிய அளவில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அவர் செய்யாவிட்டாலும் ஏனையவர்கள் வாளாவிருக்கமாட்டார்கள். இப்பொழுதே முன்னாள் அமைச்சர்களும் பிரமுகர்களும் ஆயத்தமாகி வருகிறார்கள் என்பது அவர்கள் வெளியிடும் கருத்துக்களில் இருந்து தெட்டத் தெளிவாகத் தெரியவருகின்றது.

எனவே, எதிர்காலத்தில் சிறுபான்மை இனமக்கள் தங்கள் உள் விவகாரங்களைத் தீர்த்துக் கொண்டு, வரவிருக்கும் காலத்தை ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடனும் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என்று அடிக்கடி இங்கே வற்புறுத்துகின்றோம். எந்த நிலைமையையும் சமாளிக்க அதுவே சரியான மார்க்கம்

# தமிழரின் துயரம் தீருமா?

## அது நடக்கக்கூடிய காரியமா, எப்போது?

வரலாற்றில் வருட வரிசையாகத் தமிழ் மக்களின் துயரங்களைப் பதிவிட முடியும். இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னர் (சு.மு) சுதந்திரத்துக்குப் பின்னர் (சு.பி) என இவற்றை பதியலாம். சமகாலத்தில் 1983க்குப் பின்னர் நிகழ்ந்தேறிய துயரங்களைத்தான் நாம் பெரிதா எண்ணிப் பார்க்கின்றோம். ஆனால், சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நாம் அனுபவித்த துயரங்களை இன்றைய இளையசமூகம் முழுமையாக அறிந்திருக்கவில்லை – அறிய ஆர்வம் செலுத்தவில்லை என்பது கவனத்துக்குரியது.

1948 பெப்ரவரி 04 இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திர இலங்கையில் முதன்முதலில் கூடிய நாடாளுமன்றம், ஓர் இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதுமட்டுமன்றி, தமிழ்ப்பிரதேசங்களில் குடியேற்றங்களை நடைமுறைப் படுத்தும் திட்டத்தையும் கொண்டு வந்தது. இக்குடியேற்றங்களால் தென்மேற்கு பகுதியில் சனச் செறிவு கூடிய பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் குடியேற்றப் பட்டனர். 1948 இன் பின்னர் இரண்டு முக்கியமான குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன.

1. கல்லோயாத்திட்டம்
2. துரித மாகவலி அபிவிருத்தித் திட்டம்

### மறைந்துபோன பட்டினப்பாளை

1949இல் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவால் 'கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பட்டினப்பாளை என்ற பாரம்பரியத் தமிழ்ப்பெயரே 'கல்லோயா' என மாற்றப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் 44 குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 38 சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் ஆகும். மீதி 6 தமிழ்க் குடியேற்றத்திட்டங்களாகும். இவர்கள் விவசாய நீர்ப்பாசன வசதியற்றவர்களாக இருந்தனர். சிங்களப்பகுதி நீர்ப்பாசன வசதியை நம்பியிருக்க வேண்டிய நிலையில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் 1956, 1958இல் ஏற்பட்ட இனக் கலவரங்களால் விரட்டியடிக்கப் பட்டும், மிஞ்சியோர் கொல்லப் பட்டனர். இதன்பின்னர் இப்பிரதேசம் சிங்களமயமாக்கப்பட்டது. இதனைப்போல வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட இடம் வவுனியாவாகும். வவுனியா வன்னி மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள ஒரு கிராமமாகும். இங்கு பாவற்குளம் என்ற சிறு கிராமத்தின் குடியேற்றத்திட்டம் முக்கியமானதாகும். 1956 இல் 595 சிங்களக் குடும்பங்களும், 463 தமிழ்க் குடும்பங்களும் இங்கு குடியமர்த்தப்பட்டன. இதன் பின்னர் ஏற்பட்ட இனக்கலவரங்களால் தமிழ்க் குடும்பங்கள் விரட்டியடிக்கப்பட்டு இப்பிரதேசம் சிங்களமயமாக் கப்பட்டது.

கிழக்கில் 1956 இல் அம்பாறை என்ற தேர்தல் தொகுதி உருவாக் கப்பட்டது. இது 1961இல் விரிவாக்கப்பட்டு பின்னர் அம்பாறை மாவட்டம் என மாற்றம் செய்யப் பட்டது. அம்பாறை மாவட்டத்தின் முழுப்பரப்பளவு 4318 சதுர கிலோமீற்றர்கள். 1981இல் இருந்த சனத்தொகை பின்வருமாறு:

**தமிழ் பேசும் முஸ்லிம்கள் 46.8%**
**சிங்களவர்கள் 30%**
**தமிழர்கள் 22.8%**

இம்மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களால் 1994 இல் மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின் போது இந்த மாவட்டம் சிங்களப் பெரும் பான்மையினத்தைக் கொண்டு காணப் பட்டது என கணக்கெடுக்கப்பட்டது. இப்போது இப்பிரதேசம் தமிழ் மாவட்டம் என்ற அடையாளத்தை இழந்துவிட்டது. இப்பிரதேசத்தின் அடையாள இழப்பிற்கு முக்கிய காரணியாக மகாஓயா, பத்தியத் தலாவை, தெஹியக்கண்டிய பகுதிகள் இணைக்கப்பட்டதாகும். இவை தமிழர் அல்லாத பிரதேசமாகும். இவற்றைவிட தமிழர் பிரதேசங்கள் 'புனித பிரதேசம்' என்ற பெயரினால் அரசினால் அபகரிக்கப்பட்டது. இதனைவிட பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு தமிழர் வாழ்விடங்களாக பின்வரும் பிரதேசங்கள் காணப்பட்டன.

பெரிய நீலாவணை, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், திரைக்கேணி, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், பாண்டிருப்பு போன்ற பிரதேசங்கள் காணப்பட்டன.

### சிங்கள அரசுகளின் சூழ்ச்சி வலை

தமிழர் அவலங்கள் என்ற வகையில் முக்கியமானதாக காணப்படுவது: குடியேற்றங்களும், கலவரங்கள் மூலம் துரத்தப்பட்டமையும், கொலை செய்யப்பட்டமையுமாகும். இவற்றை விட முக்கியமாகக் காணப்பட்டது பெயர் மாற்றமாகும். இந்த வகையிலே தமிழ்ப்பிரதேசங்கள் பல சிங்களப்பெயர்கள் இடப்பட்டனவாகும். இவ்வாறு காணப்படும் பிரதேசங்களாவன பின்வருமாறு.

**1. பார்வதி கிராமம் – பதவியா**
**2. முதலிக்குளம் – மொறவேவா**
**3. பட்டினப்பாளை – கல்லோயா**
**4. பெரியகுளம் – நமல்வத்த**
**5. புதுவைக்குளம் – சங்கரபுர**
**6. அம்பாள் ஏரி – அம்பாறை**
**7. மணல் ஆறு – வெலி ஓயா**
**8. பெரியவிளான்குளம் – மகாதிவுல்ஓயா**
**9.பனக்கட்டிமுறிப்பு – பென்னிகெற்யாவ**

1977இல் வவுனியா மாவட்ட எல்லைப்பிரதேசப் பகுதியில் இரண்டு குடியேற்றங்கள் அமர்த்தப்பட்டன. இவ்வாறு அமர்த்தப்பட்டவர்களில் சிங்களவர்களான முன்னைநாள் குற்றவாளிகள் குடியமர்த்தப்பட் டனர்.

இவ்வாறாகப் படிப்படியாகத் தமிழர்கள் பெரும் துயரில் மூழ்கிவந்தனர். இந்தத் துயரங்களின் வெளிப்பாடாகவே ஆயுதப்போராட்டம் வெளிக்கிளம்பியது.

ஆயதப்போராட்டம் உச்சம் பெற்றிருந்த காலகட்டத்திலும் கூட பெரும்பான்மை இன அரசு தனது சூழ்ச்சி வலையைத் தொடர்ந்து விரித்து வந்தது. அதனைச் சற்றுப்பார்க்கின். 1987இல் இலங்கையின் வட, கிழக்கில் உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம் இதற்கு உலக வங்கியிடமிருந்து பணம் வாங்கப் பட்டது என்பது முக்கியமானதாகும். 1988 ஏப்ரல் 14இல் விடுத்த அரச அறிக்கையின்படி முல்லைத்தீவுப் பகுதியில் இருந்த மணல்ஆறு என்ற இடம் வெலிஓயா எனப்பெயர் மாற்றப்பட்டது. இது இலங்கையின் 26ஆவது மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இப்பிரதேசத்தில் அவசர அவசரமாக 3364 சிங்களக்குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனவாகும். இது 1988லும் 1989லும் நடைபெற்றதாகும். இங்கு குடியேறியவர்களின் விகிதாசாரப்படி விவரம் பின்வருமாறு:

**சிங்களவர்கள்85%**
**முஸ்லிம்கள் 6%**
**தமிழர்கள் 5%**

### தண்ணிமுறிப்பு ஜனகபுர ஆனது

இதனைப்போன்றே தண்ணிமுறிப்புப் பகுதியில் இருந்து 3000 குடும்பங்களைப் பலவந்தமாக வெளியேற்றினார்கள். அவ்வாறு வெளியேற மறுத்த 29 குடிமக்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப் பட்டனர். இதன் பின்னர் 25,000 இற்கும் மேலான சிங்களக் குடிமக்கள் குடியமர்த்தப்பட்டனர். தண்ணிமுறிப்பு என்ற தமிழ்ப்பெயர் ஜனகபுர என மாற்றப்பட்டது.

1987 நவம்பர் மாதம் 13ஆவது சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்ட போது முடிக்குரிய காணிகளை மாகாண அரசுகளின் பொறுப்பில் விட, மகாவலி அபிவிருத்தித்திட்டம் மட்டும் மத்திய அரசிடமே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1990ஜுன் மாதம் இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஏற்பட்ட போர்க்காலத்தில் தமிழர் நிலங்கள் இராணுவமுகாம் அமைப்பதற்கும், பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலும் அப்பகுதியை அண்டியிருந்த மக்கள் அகற்றப்பட்டனர். இவ்வாறு அகற்றப்பட்ட இடங்கள் பலாலி,லிங்கநகர்போன்றனவாகும். இவ்வாறே தமிழர்கள் தொடர்ச்சியாகத் தமது காணிகளை இழந்து துயரங்களை அனுபவித்து வந்தனர்– வருகின்றனர். இன்றும் கூட இதற்காகப் போராடவேண்டிய நிலைமைகளே நீண்டு தொடரு கின்றன. இவை தொடரப்போவது இன்னும் எத்தனை காலங்களுக்கு என்பதே நம் முன்னுள்ள கேள்வியாகும்.

**தமிழர் அவலங்கள் என்ற வகையில் முக்கியமானதாக காணப்படுவது குடியேற்றங்களும், கலவரங்கள் மூலம் துரத்தப்பட்டமையும், கொலை செய்யப்பட்டமையுமாகும். இவற்றைவிட முக்கியமாகக் காணப்பட்டது பெயர் மாற்றமாகும்.**

சிங்கள மூலம்: தயாசிறி லியனகே (லங்காதீப)
தமிழில்: வீ.எஸ்.ரீ

# மோசமான நிர்வாகச் சீர்கேடு

## பாதாளத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை



ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனம் இந்த நாட்டுக்குப் பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தி வைத்துள்ளது. கட்டுப்பாடற்ற விதத்திலான நிதிச்செலவினம், அரசியல் தலையீடு, தகுதியற்றவர்களை உயர் பதவிகளில் நியமித்தமை, முறையற்ற நிர்வாகம் என்பவையே இந்த நிறுவனம் நட்டத்தில் இயங்க வழி வகுத்த காரணங்களில் முக்கியமானவை ஆகும். நாட்டின் பெருமளவு நிதியை இந்த நிறுவனம் கபளீகரம் செய்து வருவதாக, கடந்த அரசின் ஆட்சியின்போது எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தி வந்திருந்தனர்.

புதிய அரசு பதவியேற்றதையடுத்து, குறித்த நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை மேற்கொள்ளவென விசேட விசாரணைக்குழுவொன்று வழக்கறிஞர் ஜே.சி. வெலியமுன தலைமையில் நியமிக்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதத்தில் நியமிக்கப்பட்ட குறித்த விசாரணைக் குழு கடந்த வாரம் தனது விசாரணை அறிக்கையை அரசிடம் அண்மையில் சமர்ப்பித்திருந்தது.

பெரும் நட்டத்தில் இயங்குமொரு நிறுவனமென பொதுமக்கள் மத்தியில் அவப்பெயர் ஈட்டியுள்ள ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனம் வெள்ளையானை என பொதுமக்களால் கேலியாகக் குறிப்பிடப்படுவதுண்டு. இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரப்படி கடந்த 2012 ஆம் ஆண்டில் 27 பில்லியன் ரூபாவும், 2013 ஆம் ஆண்டில் 28.6 பில்லியன் ரூபாவும் இந்த விமான சேவை நிறுவனத்துக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. அதேவேளை மிஹின் லங்கா விமான சேவைக்கு 2012 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் ரூபா 2013 ஆம் ஆண்டில் 1.5 பில்லியன் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விசாரணைக்குழுவின் 11 பகுதிகளைக் கொண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் நிறுவனத்துக்கு இத்தகைய பெரிய அளவிலான நட்டம் ஏற்படக் காரணமாக முன்னாள் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பற்ற செயற்பாடுகள், வெளிச்சக்திகளது அழுத்தம், உணவு வழங்கல், விளம்பரப்படுத்தல் மற்றும் அனுசரணை வழங்கல், எயர் ரக்சி சேவை,

## அரசியல் தலையீடு, ஊழல் மோசடிகளால் நாசம்




நிறுவனத்தின் ஊழியர்கள் மூலம் பொய்யான தகவல்களை வழங்கி இறக்குமதி செய்ததாக நிஷாந்த விக்கிரமசிங்க மீது விசாரணைக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

துடிப்பு மிக்க இளைஞரொருவர்

விமானங்களைப் புனரமைத்தல், புதிதாக விமானங்களைக் கொள்வனவு செய்தல், நிர்வாக நடைமுறை போன்ற பிரிவுகளில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளே காரணமாக அமைந்ததாக தனித்தனியாக அந்த விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**முன்னாள் தலைவர் மஹிந்தவின் மைத்துனரே**

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரர்; மஹிந்தவுக்கு மைத்துனர். செயற்றிறனற்ற, 68 வயதைக் கடந்துள்ள அவர் தமது இஷ்டப்படி இந்த விமானசேவை நிறுவனத்தின் நிதியை செலவிட்டிருப்பதாகவும், அதன் காரணமாகவே நிறுவனம் பெரும் நட்டத்தைச் சந்திக்க நேர்ந்ததாகவும் விசாரணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

> “ ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரர்; மஹிந்தவுக்கு மைத்துனர் செயற்றிறனற்ற, 68 வயதைக் கடந்துள்ள அவர் தமது இஷ்டப்படி இந்த விமானசேவை நிறுவனத்தின் நிதியைச் செலவிட்டிருப்பதாகவும், அதன் காரணமாகவே நிறுவனம் பெரும் நட்டத் தைச் சந்திக்க நேர்ந்தது.

தமக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டிருந்த இரு ஆடம்பரக் கார்களுக்கு மேலதிகமாக ஒன்றரைக் கோடி ரூபா விலை மதிப்புள்ள மேலுமொரு ஆடம்பரக்காரை, போன்று ஆடம்பரமாகச் செயற்படும் போக்குடைய நிஷாந்த விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளே விமானசேவை நிறுவனம் பெரும் நிதி இழப்பைச் சந்திக்கக் காரணமாயிற்று. பல தடவைகள் வெளி நாடுகளுக்கான பயணங்களை நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி மேற்கொண்டதுடன், தம்முடன்கூட அழைத்துச் சென்றவர்களுக்கான செலவையும்கூட நிறுவனத்தின் நிதியிலேயே அவர் செலவிட்டுள்ளார். தமது அத்தகையவெளி நாடுகளுக்கான பயணங்கள், விமான சேவை நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் வேண்டி மேற்கொள்ளப்பட்டவையே என அவர் தெரிவித்து வந்த போதிலும், நிறுவனம்அவற்றால் பயனெதையும் ஈட்டவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது தனிப் பட்டமகிழ்ச்சிக்காகவும் திருப்திக்காகவுமே நிறுவனத்தின் செலவில் அவர் அவற்றை உல்லாசப் பயணங்களாக ஆக்கிக் கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

நிறுவனத்தின் பெண் ஊழியரொருவர் அரச உயர் மட்ட அரசியல் வாதியொருவரது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவென சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டபோதிலும்அவர்தொடர்ந்தும் விமான சேவை நிறுவன ஊழியராகவே கணிக்கப்பட்டு அவருக்கு47லட்சம் ரூபா விசேட படியாக வழங்கப்பட்டிருந்தது.

நிறுவனத்தின் பதவிநிலை ஒதுக்கீட்டில் குறித்தொதுக்கப்படாத நிறுவன தூதுவர் பதவியொன்றுக்கு நடைமுறை விதிகளற்ற வகையில் பெண்மணியொருவரை நியமித்து, அவருக்கு ஊதியமாக மாதாந்தம் பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டதாகவும் விசாரணைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டி யுள்ளது.

**அனுபவமில்லாவர்கள் உயர் பதவிகளில்**

அத்தோடு குறித்த நிறுவன செயற்பாடுகள் பின்னடைவு கண்டமைக்கு முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் விமான சேவை குறித்த முன் அனுபவமோ, அறிவோ கொண்டிராதமையும் ஒரு காரணமென விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, நிறுவனத்தின் பதவி நியமனங்களின்போது மனித வலுப் பிரிவு உரிய முறையில் நடைமுறைகளைக் கைக்கொள்ளவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், நிறுவனத்தின் உயர் பதவிகளுக்குத் தகுதியும் அனுபவமும் வாய்ந்தோர் நியமிக்கப்படாது அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலேயே பெரும்பாலான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்மட்ட அரசியல்வாதியொருவரது மகனொருவர், ஸ்ரீலங்கன் விமான சேவை விமானமொன்றைப் பயன்படுத்தி மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை நாட்டுக்குள் கொண்டு வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரியவந்துள்ளது.

விமான சேவை பாதுகாப்புச் செயற்பாடுகளில் எந்தவொரு முன் அனுபவமும் அற்றதொரு உத்தியோகத்தரை அந்தப் பதவியில் நியமித்து அவருக்குப் பெருந்தொகைப் பணம் சம்பளமாக வழங்கப்பட்டதாகவும் விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது.

நிறுவனத்தின் உணவு வழங்கல் பிரிவில் முறைப்படியான நடைமுறை பின்பற்றப்படாததுடன், நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவரது பரிந்துரையின் படி உணவு வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து விமான சேவை உணவு வழங்கல் பிரிவுக்கு உணவு வகைகள் நியாயமற்ற கூடிய விலைக்கு பெறப்பட்டதாகவும் விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது.

**நிதி வீண் விரயம்**

அத்தோடு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கல் மற்றும் விமான சேவை குறித்து விளம்பரம் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு முறையற்ற வகையில் பெருந்தொகை நிதி செலவிடப்பட்டதாகவும், குறிப்பாக ரக்பி பந்தயம் மற்றும் மோட்டார் கார் பந்தயம் என்பவற்றுக்கு மேற்குறித்த விதத்தில் செலவு செய்யப்பட்டதாகவும் விசாரணைக்குழுகண்டறிந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் மேற்குறித்த வகையிலான செயற்பாடுகள் காரணமாக நிறுவனத்துக்கு ஏற்பட்ட மிகப்பெருநட்டத்தை எந்த வகையிலும் ஈடு செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ள அதேவேளை நிறுவனத்தின் முழுமட்டத்திலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதேவை எழுந்துள்ளதாகவும் வெலியமுன தலைமையிலான விசாரணைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த விசாரணைக்குழு அரசுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட விமான சேவை பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, குறித்த அறிக்கை தொடர்பாக ஆராய்ந்தறிந்ததன் பின்னரே அது குறித்து கருத்துக்கூற இயலுமென ஊடகவியலாளர்களது கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.

இது விடயம் குறித்து விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் அவரது கருத்தை அறிய முயற்சித்தபோதிலும் அவர் தற்போது வெளிநாடொன்றுக்குச் சென்றுள்ளதால் அவரது கருத்தைக் கேட்டறிய இயலாது போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வு பெற்றோருக்கு மீள தொழில் வழங்கும் திட்டம்

### நடவடிக்கை எடுக்கின்றது ஓய்வூதியத் திணைக்களம்

கொழும்பு, ஏப்.20

ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் தொழில் வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.


ஓய்வுபெற்றவர்களின் திறன்களுக்கு ஏற்ற வகையில் பொருளாதார வளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்பைப் பெற எண்ணியுள்ளதாக ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணியாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற துறைகளிலும், சுயதொழில் முயற்சிகளிலும் அவர்களை ஈடுபடுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக 28 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வு பெற்றவர்கள் மேற்கொள்ளும் உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும், சந்தைப் படுத்தலுக்காகவும் புதிதான இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.(ற)

# பொதுத் தேர்தலை உடன் நடத்துங்கள்

## சோபித தேரர் கோரிக்கை



கொழும்பு, ஏப்.20

பொதுத் தேர்தலை துரித கதியில் நடத்த வேண்டும் என்று சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஸ்திரமற்ற அரசு ஒன்றே ஆட்சி செய்கின்றது என்று குறிப்பிட்ட அவர், 19ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இல்லாதுவிட்டாலும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

"ஆளும் கட்சி எது?, எதிர்க்கட்சி எது? என்பது பற்றிய தெளிவற்ற நிலையே நீடித்து வருகின்றது. இது நாட்டின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதல்ல. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லா தொழிக்கப்படுவதற்கு 19ஆம் திருத்தச் சட்டம் அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"19ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டாலும் உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்."– என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

## முக்கியஸ்தர்கள் 6 பேர் விரைவில் கைதாவர்?

கொழும்பு, ஏப்.20


முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசில் முக்கிய பதவிகளை வகித்த மூன்று பேர் உட்பட ஆறு உயர் அதிகாரிகள் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும் மோசடிச் சம்பவங்கள் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியமை, நடராஜா ரவிராஜ் கொலை, வாழ்வின் எழுச்சியின் (திவிநெகும) மோசடி, அவன்காட் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத கொடுக்கல் வாங்கல் கள், வருமானம் தொடர்பில் பொய் யான தகவல்களை வழங்கியமை, கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக் களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட உள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவங்கள் தொடர்பிலான ஆரம்ப கட்ட விசாரணைகள் பூர்த்தியா கியுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாக குறித்த நபர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என்றும், வெகு விரைவில் அவர்கள் கைது செய்யப்படலாம் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ற)

## ராஜபக்ஷாக்களுடன் இணைய மாட்டேன்

### சோமவன்ஸ உறுதி



கொழும்பு, ஏப்.20

ராஜபக்ஷாக்களுடன் இணைந்து செயற்படப் போவதில்லை என்று முன்னாள் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

"தோல்வியடைந்த ராஜபக்ஷ சக்திகளுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை. விரிவான அரசியல் சக்தியொன்றுடன் இணைந்து கொள்ளுமாறு விடுக்கப்படும் அழைப்புக்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எந்தக் காரணத்திற்காகவும் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி தோல்வியடைந்த ராஜபக்ஷ குழுவினருடன் இணைந்து கொள்ள மாட்டேன்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"ஜே.வி.பி.யிலிருந்து விலகி மற்றொரு அரசியல் கட்சியொன்றுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியமில்லை. புதிய அரசியல் கட்சியொன்றை அமைப்பது குறித்து தேர்தல் ஆணையாளருடன் பேச்சு நடத்தியுள்ளேன்.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் கட்சியொன்றை உருவாக்கி, ஜே.வி.பிக்கும் அதன் மூலம் வழிகாட்டப்போகின்றேன்."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு இணையத்தளமொன்றுக்கு தொலைபேசி மூலம் அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## அரசியல் பழிவாங்கலை கண்டறிய குழு அமைப்பு

கொழும்பு, ஏப்.20

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற மற்றும் இடம்பெற்று வரும் அரசியல் பழிவாங்கல்கள் குறித்து கண்டறிவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின பரிந்துரையின் படி அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் அரசியல் அழுத்தங்கள் காரணமாக மேற்கொள்ளப்படும் இட மாற்றங்கள் மற்றும் பழிவாங்கல்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்தே இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ற)

## மஹிந்தவின் தோல்விக்கு வீரவன்ஸவே பொறுப்பு

### விஜிதமுனி சொய்சா கூறுகின்றார்



கொழும்பு, ஏப்.20

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்று கூறியுள்ளார் நல்லாட்சி அமைச்சர் விஜித முனி சொய்சா.

பிபில பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவின்றி விமல் வீரவன்ஸ போன்றோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது. தோல்வியடைந்தாலும் மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு செல்வாக்கு உள்ளது. மக்களின் அன்பு முழுமையாக மஹிந்தவுக்கு மாத்திரமே காணப்படுகின்றது."– என்று அவர் கூறியுள்ளார். (ற)

## இலங்கைக்கு கடலட்டைகள் கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, ஏப்.20

இலங்கைக்கு கடத்துவதற்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 600 கிலோகிராம் கடலட்டைகளை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய சந்தேக நபரையும் தமிழ்நாடு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத சந்தையில் 12 இலட்சம் ரூபா பெறுமதியுடைய இந்தக் கடலட்டைகள் கடத்துவதற்கு முற் பட்ட நபர், தமிழ் நாடு நாகபட்டினத் துக்கு அருகில் உள்ள கிராமமொன் றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கடலட்டைகள், கடல் சுற்றுச் சூழலின் அமைப்பை பராமரிப்பதற்கு அவசியமானது என்றும் இவை இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் உணவுக்காகவும் மருந்துகளுக்காகவும் கடத்தப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ற)

## ஜனநாயகத்துக்கு கிடைத்த இறுதி சந்தர்ப்பமே 19

### அதனை நிறைவேற்றக் கோருகிறது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.20

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குள் வாதாடிக்கொண்டிருப்பதை விடுத்து ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். 19 ஆவது அரசியல் சட்டவரைவை நிறைவேற்றுங்கள் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவர் சாலிய பீரிஸ் மேலும் தெரி வித்ததாவது:–

இலங்கையில் 19 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக் குழுக்கள் தொடர்பானசட்டவரைவை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயற்சி எடுக்க வேண்டும்.

அரசினால்நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட் டுள்ள அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அரச சேவை, நீதிமன்றம், பொலிஸ், ஊழல் விசாரணை ஆகிய துறைகளுக்காக சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான சட்ட வரைவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான சட்டவரைவை மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இருந்தால் நிறைவேற்ற முடியும் என இலங்கை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அதை செய்து முடிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபடவேண்டும்.

இந்தச் சட்டவரைவை நிறைவேற்றுவது தொடர்பில் அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இதனால் சுயாதீன குழுக்கள் தொடர்பாக வழக்கறிஞர்களும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கை பிளவுபடும் அபாயம் எழுந்துள்ளது. நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது மற்றும் தேர்தல் முறை சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஒருவருக்கொருவர் வாதாடிக்கொண்டிருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்துவிட்டு, ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்ப கிடைத்துள்ள கடைசி சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் –என்றார். (த–4)

*நேற்று முதலாம் பக்கத்தில் வெளியாகியிருந்த தலைப்புச் செய்தியின் தொடர்ச்சி பிரசுரமாகத் தவறியிருந்தது. அதனால் செய்தி இன்று மீளப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

உதயன் 30 ஆண்டு

# மாணவர் கலை இலக்கியப் போட்டிகள் - 2015

## கவிதைப் போட்டி - A

## மாவட்ட மட்ட பெறுபேறுகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

1 ஆம் இடம் - தனுஷா ஸ்ரீஸ்கந்தராசா யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
2 ஆம் இடம்- சாந்தகுமார் ஷாணுஷன், யா/புனித பரியோவான் கல்லூரி
3 ஆம் இடம்- மதுஷா சபாநாயகம் யா/ வேம்படி மகளிர் கல்லூரி

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- நந்தினி நந்தகுமார், யா/யூனியன் கல்லூரி
- நி.ஆதவன், யா/யாழ்.இந்துக் கல்லூரி
- கி.டிலாஜினி, யா/வட்டு இந்துக்கல்லூரி.
- ந.விதுரா, யா/இராமநாதன் கல்லூரி
- டர்சிகா சிவம், யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- மகாலிங்கசிவம் நிவேதா யா/வேம்படி மகளிர் கல்லூரி
- பங்கஜா சுரேஸ், யா/விக்ரோறியாக் கல்லூரி

### கிளிநொச்சி மாவட்டம்

1 ஆம் இடம்-' சி.மதுசன், கிளி/கிளி.இந்துக் கல்லூரி
2 ஆம் இடம்- மதுசுதன் டிலோஜனா, கிளி/கிளிநொச்சி ம.வி
3 ஆம் இடம்- எஸ்.ஆர்.ராம்கி, கிளி/கிளி.இந்துக் கல்லூரி

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-
ஞா.கிருசாந்தினி, கிளி/கிளி.இந்துக் கல்லூரி,
அனுசியா நாகலிங்கம், கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி,
இ.சங்கீர்த்தனா, கிளி/உருத்திரபுரம் ம.வி.

### முல்லைத்தீவு மாவட்டம்

1 ஆம் இடம் - ரஜீஸ்கண்ணா பவித்திரா, மு/உடையார்கட்டு ம.வி
2 ஆம் இடம் - தில்லைநாயகம் டயானா, மு/பாண்டியன்குளம். ம.வி
3 ஆம் இடம் - பங்கஜன் தனுஜா, மு/விசுவமடு ம.வி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-
கலைச்செல்வன் நவீனா, மு/ஐயன்கண்குளம் அ.த.க.பா.
வி.அபிவர்ணா, மு/உடையார்கட்டு ம.வி,
பு.திருச்செல்வி, மு/பாண்டியன்குளம் ம.வி.

### மன்னார் மாவட்டம்

1 ஆம் இடம் :'யூ.எப்.நிசா, மன்/அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை
2 ஆம் இடம்: சி.பாக்கியராஜ்.மன்/அடம்பன் ம.ம.வி.
3 ஆம் இடம் : எம்.எப்.யூடின் நிக்கல்சன், மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-
ஆர்.ஜே.ஆன் மியூறிக்கா மன்/புனித சவேரியர் பெண்கள் கல்லூரி.

### வவுனியா மாவட்டம்

1 ஆம் இடம்: தயானி பரமலிங்கம், வ/சைவப்பிரகாச வித்தியாலயம்.
2 ஆம் இடம்: பி.வேதிகா, வ/கனகராயன்குளம் ம.வி.
3 ஆம் இடம்: ஆறுமுகம் சுதர்சினி, வ/கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயம்

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-
இ.குகழினி, வ/ஓமந்தை மத்திய கல்லூரி
சுரேஷ்குமார் கிருபாலினி, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.
பூ.சயன், வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்.
டர்சிகா அருளானந்தம், வ/ஓமந்தை மத்திய கல்லூரி
க.நந்தகுமார், வ/புளியங்குளம் இந்துக் கல்லூரி.

இவர்களில் முதலாமிடம் பெறுபவர்கள் ரூபா 3,000.00
இரண்டாம் இடம் பெறுவோர் ரூபா 2,000.00
மூன்றாம் இடம்பெறுவோர் ரூபா1,000.00 பரிசுபெற அல்லது
மாகாண மட்டப் பரிசான ரூபா 10,000.00 இரண்டாம் இடம் ரூபா 7,000.00,
மூன்றாம் இடம் ரூபா 5,000.00 பெற உரித்துடையவர்கள் மாகாண மட்டத் தேர்வு செயலொழுங்கு இடம்பெற்று வருகின்றது. மாவட்ட மட்டத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களில் மாகாண மட்டப் பரிசு பெறுவோர் விவரம் பரிசளிப்பு தினத்தன்று நடுவர்களால் தெரிவிக்கப்பட்டு, அன்றைய தினமே பரிசுத் தொகை வழங்கப்படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ.....

சித்திரையில் ஆரம்பம்





/அணிக்கு 5 பேர், பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

## கழுத்தினால் அவதிப்படும் 12 வயதுச்சிறுவன்



டில்லி,ஏப்.20
மத்திய பிரதேசத்தில் பிறவியிலேயே முதுகெலும்புப் பாதிப்புடன் பிறந்த சிறுவன் ஒருவனின் தலை, 180 பாகை கோணத்தில் தொங்கிய நிலையில் காணப்படுகிறது.

குறித்த பகுதியில் உள்ள 12 வயதான அந்தச் சிறுவனின் முதுகெலும்பு பாதிப்படைந்துள்ளதால் நிற்கவோ, நடக்கவோ முடியாமல் தொங்கிய தலையுடன் மெதுவாக தவழ்ந்து மட்டும் செல்லக் கூடிய நிலையில் தற்போது உள்ளார்.

உண்பது, குளிப்பது என அனைத்து அத்தியாவசிய விடயங்களை செய்வதற்கும் அவனது தாயாரின் உதவியை நாட வேண்டி இருப்பதுடன் மருத்துவர்களால் அவனைக் குணப்படுத்த முடியாத நிலையில் 12 வயதாகியும் அந்தச் சிறுவன் குழந்தைகளைப் போன்று தற்போது வாழ்ந்து வருகின்றார். (14)

## ஆந்திர துப்பாக்கிச் சூடு 6 பேரின் உடல்கள் பரிசோதனை

பெங்களூர்,ஏப்.20
ஆந்திராவில் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட ஆறு தொழிலாளர்களின் உடல்கள் நேற்று முன்தினம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஆந்திர துப்பாக்கிப் பிரயோகத்தில் 20 அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. அதில் 6 பேரின் உடல்கள் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி திருவண்ணாமலை அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் உடலை மறுபரிசோதனை செய்ய உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்த நிலையில், மருத்துவக் குழுவினர் நேற்று முன்தினம் உடலை மறு உடற்கூற்றுப் பரிசோதனை செய்துள்ளனர். (14)

## அம்மனுக்கு காவடி எடுத்தார் அமைச்சர்



சென்னை,ஏப்.20
தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் முதல்வராக வேண்டி அமைச்சர்கள் காவடி, சிறப்பு வழிபாடு எனப் பல்வேறு பிரார்த்தனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழகத்தின் கரூர் மாவட்டத்தில் தமிழக போக்குவரத்துதுறை அமைச்சரும் நேற்று மாரியம்மனுக்கு காவடி எடுத்து வழிபாடு மேற்கொண்டுள்ளார். மேலும் , அம்மா அம்மா என அம்மனையும், முருகனையும் இழிவு படுத்தும் விதமாக அந்த வழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பல்வேறு கட்சியினர் கருத்து தெரிவித்துள்ளனர். (14)

# பருவ மாற்றத்தால் பயிர்கள் நாசம் 601 விவசாயிகள் தற்கொலை




மும்பை,ஏப்.20
வறட்சி மற்றும் பருவம் தவறி பொழியும் மழை காரணமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 3 மாதங்களில் மட்டும் 601 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சட்டீஸ்கர், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 13 மாநிலங்களில் கடந்த பெப்ரவரி மாதம் மற்றும் மார்ச் மாதங்களில் பருவம் தவறி மழை பெய்துள்ளது. அதனால் பயிரிடப்பட்டிருந்த கோதுமை, தானிய வகைகள், காய்கறிகள் உள்ளிட்டவை முழுவதுமாக அழிவடைந்துள்ளன. ஏற்கனவே வறட்சி காரணமாக வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு பருவம் தவறி பெய்த மழையும் அவர்களைக் கவலை அடையச் செய்துள்ளது.

அதனால் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை மட்டுமே மகாராஷ்டிராவில் 601 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனாலும் பாதிக்கப்பட்ட 90 லட்சம் விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள நஷ்டஈடு 4 ஆயிரம் கோடி ரூபாய் போதவில்லை என்றும், அதனைக் கணக்கிட்டால் தலா ஒரு விவசாயிக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரத்து 875 ரூபா மட்டுமே இழப்பீடு கிடைப்பதாகவும் விவசாயச் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

விவசாயிகளின்பரிதாபமானநிலையை கருத்தில் கொள்ள மறுக்கும் வங்கிகளும் கடனை திருப்பிச் செலுத்த தொடர்ந்து அறிவுறுத்தி வருவதும், விவசாயிகளின் தற்கொலை தொடர்வதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. கடந்த வருடம் மட்டும் அந்த மாநிலத்தில் ஆயிரத்து 981 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## ரயிலுக்கு தீ வைத்த கிராம மக்கள்



புவனேஸ்வர், ஏப்.20
ஒடிஸா மாநிலத்தில் இளைஞன் ஒருவர் ரயிலில் இருந்து இறங்கும் போது தவறி விழுந்து உயிரிழந்ததால், ஆத்திரமடைந்த கிராம மக்கள் அந்த ரயிலுக்குத் தீ வைத்து எரித்துள்ளனர்.

ஒடிஸாவின் பூரி மாவட்டத்தில் உள்ள தெலாங் ரயில் நிலையத்தில், புவனேஸ்வரில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் வேலை செய்த 22 வயதுடைய இளைஞன் நேற்று இரவு கடுகதி ரயில் ஒன்றிலிருந்து இறங்க முயன்ற போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அதனை அறிந்த உள்ளூர் கிராம மக்கள், அந்த இளைஞரின் உடலைப் பொலிஸார் எடுக்க விடாமல் தடுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் மீண்டும் சேவையில் ஈடுபட்ட குறித்த ரயிலை மறித்து மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர். அதன் போது ரயில் பெட்டிகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றோல் ஊற்றியும் கொளுத்தினர். அதனைத் தொடர்ந்து பொலிஸார் தடியடி நடத்தி ஊரவர்களை விரட்டி அடித்ததோடு, சம்பவ இடத்துக்கு தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப் படுத்தியுள்ளனர். (14)



## பிரபல பாடகர் எஸ்.பிக்கு விருது

சென்னை,ஏப்.20
தனது குரலால் பல்லாயிரக் கணக்கான மக்களை கவர்ந்த பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிமணியம், கேரள அரசின் ஹரிவராசனம் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட பலமொழிகளில் பாடி பிரபலமானவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். சினிமாப் பாடல்கள் மட்டுமன்றி பக்தி பாடல்களும் பாடியுள்ளார். குறிப்பாக சபரிமலை ஐயப்பனுக்கும் பாடல்கள் பாடியுள்ளார்.

எம்.ஜி.ஆர், சிவாஜி காலம் தொடங்கி தற்போது வரை பல பாடல்கள் பாடி வருகிறார். இந்த நிலையில் தற்போது கேரள அரசின் ஹரிவராசனம் விருதை பாலசுப்பிரமணியத்துக்கு வழங்க சபரிமலை நடுவர் குழுவினர் தீர்

## உதவிகோரும் சீன ஜனாதிபதி



சியான்,ஏப்.20
சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் சியான். அந்த நகரத்தை இந்தியாவின் நுழைவுத் தலை நகரமாகக் கருதப்படும் பெங்களூருடன் நகரமயமாக்குவதற்கு சீன அரசு முயற்சி செய்து வருகிறது. இந்த நிலையில் அடுத்த மாதம் பிரதமர் - மோடியின் சீனாவுக்கான பயணத்தின்போது அது சம்பந்தமாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என சீன ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (14)

## தமிழக அரசுக்கு எதிராக நூதனப் போராட்டம்



சென்னை,ஏப்.20
மேகேதாது பகுதியில் காவேரிக்கு குறுக்கே அணை கட்டுவதை தமிழக அரசு எதிர்ப்பதைக் கண்டிக்கும் விதமாக ஜெயலலிதா மற்றும் முதல்வர் மு.பன்னீர்செல்வம் ஆகியோரின் படங்களை வைத்து கன்னட அமைப்பினர் நேற்று திதி கொடுத்துள்ளனர்.

காவேரிக்கு குறுக்கே மேகதாது என்ற பகுதியில் கர்நாடக அரசு அணை கட்டத் திட்டமிட்டுள்ளதோடு அதற்காக நடப்பு நிதியாண்டில் 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதனால், தமிழகத்துக்குச் செல்லும் காவேரி நீர் தடுக்கப்படும் அபாயம் இருப்பதால் தமிழகத்தில் அனைத்து கட்சிகள் மற்றும் விவசாய சங்கங்கள் சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இந்த நிலையில் தமிழகத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக சுமார் 500 கன்னட அமைப்புகள் நேற்று நூதனப் போராட்டத்தை நடத்தினர். அதன் போது ஜெயலலிதா மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோரின் படங்களுக்கு முன்னால் வாழைப் பழம், ஊதுபத்தி, தேங்காய் ஆகியவற்றை வைத்து, திதி கொடுத்துள்ளனர். (14)

## இளைஞர்கள் ஐவர் கைது

சிட்னி,ஏப்.20
ஆஸ்திரேலியாவில் தீவிரவாதத் தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஐந்து இளைஞர்களை பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.
மெல்போர்னில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள உலகப் போரின் நூற்றாண்டு விழாவின் போது தாக்குதல் நடத்த ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவான இளைஞர்கள் சிலர் திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதனையடுத்து 200இற்கும் மேற்பட்ட பொலிஸார் நேற்று தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். அதில் 5 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (14)

## 150 மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலிப் பிரார்த்தனை



ஜேர்மனி விங்ஸ் விமான விபத்தின்போது உயிரிழந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் தேவாலயம் ஒன்றில் சிறப்பு பிரார்த்தனை ஒன்று நடைபெற்றுள்ளது. கடந்த மாதம் 24ஆம் திகதி பிரான்ஸின் அல்பஸ் மலையில் விழுந்து நொறுங்கிய ஜேர்மனி விங்ஸ் விமானத்தில் பயணித்த 150 பேரும் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஜேர்மனியின் கோலோன் நகரத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. உயிரிழந்தவர்களை நினைவுக்கூரும் வகையில், 150 மெழுகுவர்த்திகள் தேவாலயத்துக்குள் எரியவைக்கப்பட்டிருந்தன. அந்த நிகழ்வை முன்னிட்டு ஜேர்மனி முழுவதும் நேற்றுமுன்தினம் அந்த நாட்டின் தேசியக் கொடி அரை கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. (14)

# அகதிகளை நாட்டை விட்டு வெளியேற்ற வலியுறுத்து

### ஜேர்மனியில் தஞ்சம் கோருவோர் எண்ணிக்கை இரட்டிப்பு

பெர்லின்,ஏப்.20
ஜேர்மனில் தகுதியற்ற அகதிகளை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.
அதிகரிக்கும் அகதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அரசியல் தலைவர்களுக்கு அரசிடமிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என்ற அதிருப்தியும் நிலவி வருகிறது. மேலும், ஐரோப்பிய நாடுகளிலேயே ஜேர்மனில் மட்டும் தான் அகதிகள் குடியேறுவது அதிகளவில் அதிகரித்து வருவதால், அவர்களுக்கு தற்காலிகமாக இருப்பிட வசதிகளை ஏற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன. கடந்த 2013ஆம் ஆண்டு ஜேர்மனியில் தஞ்சம் கோரியவர்களின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 23 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை கடந்த வருடம் இரு மடங்காக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# கழுத்து அறுத்து 11 பேர் கொலை

### நைஜீரியாவில் கொடூரம்



அபுஜா,ஏப்.20
நைஜீரியாவில் 11 பேரை போகோ ஹராம் தீவிரவாதிகள் கழுத்து அறுத்து கொலை செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
நைஜீரியாவில் தனி நாடு கோரி அரசுக்கு எதிராக போராடி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து பல அட்டூழியங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் மலைப்பிரதேச நகரமான ஜிவோசா பகுதி போகோ ஹராம் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கிருந்த மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணியில் அந்த நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அதனை அறிந்து கொண்ட தீவிரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களின் 11 பேரை பிடித்து அவர்களின் கழுத்தை அறுத்துக் கொடூரமாக கொலை செய்துள்ளனர். (14)

## வெளி நாட்டவருக்கு எதிராகக் கலவரம்



ஜோகனஸ் பர்க்,ஏப்.20
தென் ஆபிரிக்காவில் குடியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக மூண்ட கலவரத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
தென் ஆபிரிக்காவில் ஏராள மான வெளிநாட்டவர்கள் குடியு ரிமை பெற்று அங்கேயே நிரந்தர மாகத் தங்கியுள்ளனர். அதனால் தங்களது வேலை வாய்ப்பும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக தென் ஆபிரிக்க மக்களில் சிலர் கருதுகின்றனர். எனவே, அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு எதிராகவும், அவர்கள் வெளியேற வலியுறுத்தியும் துறைமுக நகரமான டர்பனில் சில வாரங்களுக்கு முன்னர் கலவரம் மூண்டுள்ளது. தற்போது அந்தக் கலவரம் படிப்படியாக தலைநகர் ஜோகனஸ் பர்க் நகருக்கும் பரவியுள்ளது. கலவரத்தில் ஈடுபட்டவர்கள் இரவோடு இரவாக கடைகளை உடைத்தும், வீடுகளில் புகுந்து பொருள்களையும் சூறையாடியுள்ளனர். ஜோகனஸ் பர்க்கை ஒட்டியுள்ள அலெக் சாண்ட்ரா டவுன் ஷிப்பில் வன்முறை தலைவிரித்தாடுகிறது. அந்த வன்முறை சம்பவத்தால் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
வெளிநாட்டவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடைபெறுவதால் பல்லாயிரக் கணக்கான வெளிநாட்டவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறி பாதுகாப்பு மையங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். (14)

## பிரான்ஸ் அரசின் அதிரடி திட்டம்

பாரிஸ்,ஏப்.20
பிரான்ஸில் அதிகரித்து வரும் இனம் மற்றும் மத அடிப்படையிலான தாக்குதல்களை தடுக்கும் வகையில் புதிய 40 அம்ச திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.
பிரான்ஸில் இன ரீதியான தாக்குதல்கள், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்கள் மீதான தாக்குதல்கள், வெளிநாட்டவர்கள் மீதுள்ள வெறுப்புணர்ச்சி மற்றும் ஓரினச் சேர்க்கை நடவடிக்கைகள் மிக மோசமான அளவில் அதிகரித்துள்ளது. அந்த அவலத்தைத் தடுக்கும் வகையில், 40 அம்சங்கள் அடங்கிய புதிய திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. அதற்கு அரசு சுமார் 100 மில்லியன் யூரோக்களை ஒதுக்கியுள்ளது. அதன் முதற்கட்டமாக இணையத் தளங்கள் மூலமாக இனம் மற்றும் மதங்கள் அடிப்படையிலான தாக்குதல்களை தடுக்க தேசிய அளவில் ஒரு இணையத்தளப் பிரிவை ஏற்படுத்தி, தீவிரமாக கண்காணிக்கப்படும். மேலும், இனம் மற்றும் மத தாக்குதல்களைத் தூண்டும் விதத்தில் இணையம் மற்றும் பொது இடங்களில் பேசினால், அதற்கான தற்போதைய தண்டனையை மேலும் கடுமையாக்க அரசு முடிவெடுத்துள்ளது. (14)

## ஜப்பானில் குறையும் மக்கள் தொகை

டோக்கியோ,ஏப்.20
புதிதாக வெளியிடப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி ஜப்பானின் மக்கள் தொகை 15 வருடங்களில் இல்லாத அளவுக்கு குறைவடைந்திருப்பது தெரியவந்துள்ளது.
கடந்த 2013 தொடக்கம் 2014 வரையான இடைப்பட்ட காலங்களில் அந்த நாட்டின் மக்கள் தொகை 2 லட்சத்து 15 ஆயிரத்தால் குறைவடைந்துள்ளது. அது மொத்த மக்கள் தொகையில் 0.17 சதவீதம் ஆகும். அது கடந்த 15 வருடங்களில் ஏற்பட்ட அதிகபட்ச மக்கள் தொகைச் சரிவாகும்.
ஜப்பானில் வசிக்கும் வெளிநாட்டவர்களைச் சேர்க்காவிடில் அந்த எண்னிக்கை மேலும் குறைவடையும். அந்த நாட்டில் திருமணம் செய்து கொள்ளாமல் அல்லது குழந்தை பெற்றுக் கொள்ளாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்து வருகிறது. அதனால் வயதானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. (14)

## மியன்மாரில் தண்ணீர் திருவிழா: 11 பேர் சாவு; 134 பேர் படுகாயம்

யாங்கோன், ஏப்.20
மியன்மாரில் வருடந்தோறும் நடைபெறும் திங்க்யான் தண்ணீர் திருவிழா கடந்த நான்கு நாள்களாக நடைபெற்று வந்தது.
அந்தத் திருவிழாவில் கலந்து கொண்டவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 134 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.
பர்மீஸ் புத்தாண்டாகக் கொண்டாடப்படும் அந்தத் திருவிழாவின்போது அங்கு பொது விடுமுறை அளிக்கப்படும்.
அந்தத் தண்ணீர் விழாவில் கலந்து கொண்டால் தங்களது பாவங்களும், தீமைகளும் அகன்று புத்தாண்டில் நல்வாழ்வு கிடைக்கும் என்று அந்த நாட்டு மக்கள் நம்புகி றார்கள்.



அந்த விழாவில் கலந்து கொள்ள வந்தவர்களில் 11 பேர் சாலை விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாகவும், 134 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.
அதிக பாரம், போதை மற்றும் அதிவேகத்தில் வாகனம் செலுத்தியதால் 50 இடங்களில் விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், கடந்த வருடம் அதே திருவிழாவின்போது, 15 பேர் உயிரிழந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# ஆரம்பக் கல்வியில் கவனம் செலுத்துவோம்



க.கனகராஜா

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். சிறுவயதில் கற்கின்ற விடயங்கள் பசுமரத்தில் ஆணி போல் அவர்களின் மனதில் பதிந்து கொள்ளும். குழந்தை பிறக்கும் போது 50வீதமான மூளைக்கலங்கள் வளர்ச்சியடைந்துள்ளதாகவும், அக்குழந்தை 2 வயதையடைகின்ற போது 75வீதமான மூளைக் கலங்கள் வளர்ச்சியடைவதாகவும் உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

குழந்தை சரியான முறையில் கல்வியைத் தொடங்குவதற்காக நவராத்திரி விழாவில் விஜய தசமியில் ஏடுதொடக்கல் எனும் நிகழ்வைச் செய்கின்றனர். அக்குழந்தை அன்று தொடக்கம் பெற்றோரின் கவனிப்பில் வளர்ந்து கல்வியில் முன்பள்ளி, மற்றும் ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்று அதன் பின்னர் இடைநிலைக் கல்வியைத்தொடர்கின்றது.

முன்பள்ளியில் இரண்டு வருடங்களும், ஆரம்பப் பாடசாலையில் 5 வருடங்களும் கல்வி கற்று சுமார் 7 வருடங்கள் பூர்த்தி செய்து வரும் மாணவர்களில் சில மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களாக வெளிவருகின்றார்கள். எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என ஔவையார் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் ஒரு மனிதனுக்கு மொழியும் இலக்கணமும் மிக அவசியமாகின்றது. இதனால் தான் ஆரம்பக்கல்வியில் இவ்விரண்டையும் வளர்ப்பதற்காக பல தேர்ச்சிகளையும், அத்தேர்ச்சிகளினூடாக மாணவர்களின் அடைவுமட்டத்தையும் குறிப்பிட வைக்கின்றனர்.

இவ்வடைவு மட்டங்கள் சில மாவட்டங்களில் சரியாக நிறைவேற்றப்பட்ட போதும் வன்னி மாவட்டங்களில் இது முழுமையடையவில்லை என்பதே வெளிப்படை உண்மையாகும். வன்னி மாவட்ட மாணவர்களுக்குஇந்தக்கல்விமுழுமையாக கிடைக்காமைக்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

முன்பள்ளியில் உள்ள சில ஆசிரியர்கள் பொருத்தமானவர்களாக அமையாமல் அவர்கள் சரிவரப் பயிற்சி பெறாமலும் கற்பிக்கத் தொடங்குகின்றார்கள். இதனால் ஆரம்பத்திலேயே அவர்களின் கல்வியில் தவறு ஏற்பட்டு விடுகின்றது. இந்த நிலைமையிலுள்ள மாணவர்கள் தமது ஆரம்பக்கல்வியைத் தொடர இருக்கும் மாணவர்கள் பலருக்கு போதிய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. அத்தோடு வன்னி மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் அதிபர் மட்டுமே கடமையாற்றுகின்றார். அந்தப் பாடசாலைகளிலும் தரம் 1 முதல் தரம்5 வரை மாணவர்கள் கற்று வரும் செயற்பாடும் நடைபெற்று வருகின்றமையும், எல்லாப் பாடசாலை அதிபாகளைப் போலவும் இப்பாடசாலையில் கடமையாற் றும் அதிபருக்கும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என அறிவித்தல்கள் வலயக் கல்வி அலுவலகங்களினால் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால் இந்தப் பாடசாலை அதிபர் செல்லும் நாள்களில் பாடசாலை மூடப்பட்டு விடுகின்றது. இதனாலும் மாணவர்களின் கல்வி தடைப் பட்டு விடுகின்றது.

சில மாவட்டங்களில் முன்பள்ளியிலேயோ தனியார் கல்வி நிலையத்திலேயோ அல்லது கல்வி கற்ற பெற்றோர்களாலோ தமது பிள்ளைகளின் அறிவை வளர்க்க மேன்மேலும் புதிய விடயங்களைக் கற்றுக் கொடுக்கின்றனர். இதனால் கல்வி அறிவற்ற பெற்றோர்களால் தமது பிள்ளைகளை வளர்ச்சியடைய வைக்க முடிவதில்லை. இதனால் அவர்களின் கல்வியும் தடைப்பட்டு விடுகின்றது. இத்தோடு பொருளாதாரப் பிரச்சினை, மற்றும் தந்தை தாய் இல்லாமல் வேறு உறவினர்களுடன் தங்கி வாழ்தல் போன்ற பல்வேறு காரணங்களினாலும் இவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு பாதிப்படைந்த மாணவர்கள் இடைநிலைப் பாடசாலையில் தரம்6 முதல் கல்வியைத் தொடர முற்படும் போதும் அத்திபாரம் சரியாக இடப்படாமையினால் அவர்களால் பூர்த்தியடைய முடியாமல் போகின்றது. அத்தோடு இடைநிலைப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் தமது சித்தி வீதத்தையும், திறமைச் சித்தி பெறும் மாணவர்களையும் இனங்காட்டுவதற்காகவே உழைக்கின்றனரே தவிர கல்வியைப் பெற முடியாத மாணவர்களை ஊக்குவிப்பதற்கு முன்வர மறுக்கின்றனர்.

பல பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் திறமைச்சித்தி எடுக்கும் மாணவர்கள் பக்கம் தமது கவனத்தைச் செலுத்துகின்றார்களே தவிர சித்தியெய்தத் தவறும் மாணவர்களை கவனிக்கத் தவறுகின்றனர். ஒரு பாடசாலை எத்தனை ஒன்பது திறமைச் சித்தி பெற்ற மாணவர்களை உருவாக்கியுள்ளது என்பதை விட அனைத்து மாணவர்களையும் சித்தியடைய வைத்துள்ளதென்பதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

இடைநிலைப் பாடசாலைகள் சில இவ்வாறான மாணவர்களைக் கவனத்தில் கொண்டு விசேட கற்றல் கற்பித்தலில் ஈடுபடுகின்ற போதும் பெருமளவான மாற்றம் மாணவர்களில் கிடைப்பதில்லை என்பதே உண்மை.

> “
> முன்பள்ளியில் இரண்டு வருடங்களும், ஆரம்பப் பாடசாலையில் 5 வருடங்களும் கல்வி கற்று சுமார் 7 வருடங்கள் பூர்த்தி செய்த வரும் மாணவர்களில் சில மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களாக வெளிவருகின்றார்கள். எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என ஔவையார் குறிப்பிட் டுள்ளார்.

தமக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை, நிவாரணம் கிடைக்கவில்லை, நிலஅபகரிப்பு எனப் பல வகைகளிலும் தமது போராட்டங்களை நடத்தும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வியை சரிவர நிறைவு செய்யாமல் அனுப்பும் ஆசிரியர்களுக்கும், அதனைக் கவனிக்க மறுத்த அதிபருக்கும், அதனை மேற்பார்வை செய்யத் தவறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகருக்கும், உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான போராட்டங்களை நடத்தத் தவறுகின்றனர்.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு வருடமும் தமது தரக் கணிப்பைப் பூர்த்தி செய்தாலே அவர்களுக்கான சம்பள உயர்வுகள் வழங்கப்படும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தமது தரக் கணிப்பை பூர்த்தி செய்யும் போது தம்மிடம் கற்கும் அனைத்து மாணவர்களையும் எழுத வாசிக்க முழுமையடைய வைத்தே அனுப்புவேன் என்பதே பொய்த் தரக் கணிப்புக் காட்டியாக அமைகின்றது. இந்தத்தேர்ச்சியை அடைய வைத்துத் தான் மாணவர்களை வகுப்பேற்றம் செய்கின்றார்களா என்பதை அதிபர்கள் மேற்பார்வை செய்து கையொப்பம் இடல் வேண்டும். இவ்வாறு இல்லாவிடில் அத்தரக்கணிப்பு படிவத்தில் கையொப்பம் இடுவதை அதிபர் தவிர்த்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதும் தமது வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் தமது உயர்வுத் திகதி வந்ததும் எந்தவித மனச் சஞ்சலமின்றி அதிபரிடம் போய் நிற்க அதிபரும் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கின்றார். க.பொ.த.சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளி வந்ததும் ஒவ்வொரு பாடங்களிலும் எத்தனை சதவீதம் சித்தி எனப் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கையையே மாகாணக் கல்வித் திணைக்களமும் எதிர்பார்த்து நிற்கின்றது.

ஏனெனில் ஒவ்வொரு வருடமும் வன்னிமாவட்டதில் எத்தனை மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்து முன்னேற்றப்படுகின்றார்கள் என்பதனைக் கவனத்தில் கொள்ளவோ அல்லது அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்து வைக்கவோ மாகாணத் திணைக்களம் முன்வரவில்லை என்றே குறிப்பிடலாம். வளர்ச்சியடைந்த கல்வி வலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பயணம் மேற்கொள்ளும் கல்வித் திணைக்களம் அடிப்படை வசதியின்றி இருக்கும் வலயங்களை கவனிக்கத் தவறுகின்றது. தற்போது வடமாகாண சபையால் வழங்கப்பட்ட பட்டதாரிகள் ஆசிரியர் நியமனங்கள்கூட ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் என வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குத் தான் சிறந்த ஆற்றல் மிகுந்த பட்டதாரி ஆசிரியர்களைநியமிக்கவேண்டும். ஆரம்பக் கல்வியை பாடசாலையில் கற்பித்தால், தாம் படித்த கல்விக்கு இழுக்கு என நினைக்கின்றார்களோ தெரியவில்லை. ஆகையால் தான் இடைநிலை, உயர்தரங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கின்றார்கள். அத்திபாரம் சரியாகப் போடப்படாமல் மேலே எத்தனை மாடிகள் கட்டியும் பயன் கிடைக்கப் போவதில்லை. ஆரம்பக் கல்வியில் தொண்டர் ஆசிரியர் நியமனங்களையும், வேறு தரப்பிலும் ஆசிரியர்களை நியமிப்பதை விடுத்து பட்டதாரிகளுக்கு இந்நியமனங்கள் வழங்கப்படும் போது கல்விச் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

எத்தனையோ பாடசாலைகள் அதிபர் ஒருவருடன் மட்டும் தரம்1முதல் தரம் 5வரை இயங்கி வருகின்றது. அதிபரினால் தனது அலுவலக வேலைகளை பூர்த்தி செய்வதா அல்லது தரம் 1மாணவர்களுக்கு எழுத்துக்கள் பழக்குவதா அல்லது தரம் 5மாணவர்களுக்கு அவர்களின் தேர்ச்சிகளை அடைய வைப்பதா என்ற கேள்வியும் அவர்களிடத்தில் இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் ஆசிரியர் பற்றாக்குறையாகும். இதைத் தீர்ப்பதற்கு 50இற்குக் குறைந்த மாணவர்கள் கற்கும் ஆரம்பப் பாடசாலைகளும், இடைநிலைப் பாடசாலைகளும் பல உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் வலயங்களில் சிறிய பாடசாலைகளை ஒன்றிணைத்து செயற்படுவதன் மூலம் இந்தக் குறைபாட்டை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்ய முடியும். ஆனால் இதற்கு அதிபர்கள் பலர் ஒத்துக் கொள்வதில்லை. ஏனெனில் சில அதிபர்கள் தமது பதவிகளை கருத்தில் கொள்வதும் ஒரு காரணமாக அமைகின்றது.

மிகச் சிறிய கிராமத்தில் பல கஷ்டங்கள் மத்தியில் தகுந்த ஆசிரியர்களின்றி இயங்கி வரும் பாடசாலை மாணவர்களை அந்தப் பகுதியிலிருக்கும் வசதிகளுடன் கூடிய பாடசாலையுடன் சேர்க்கும் போது அவர்களின் கல்வி மட்டுமல்லாது அவர்களின் ஆளுமையும் வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

எதுவாக இருந்தாலும் ஆரம்பக் கல்வியைப் புகட்டும் ஆசிரியர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டால் தான் மாணவர்களின் கல்வியில் உயர்ச்சியைக் காண முடியும்.



## "காலமானாலும் வீச முடியவில்லையே!"

செய்திகள் எதுவாயினும் வாசிப்பதென்பது எல்லோராலும் வளர்க்கப்பட வேண்டிய தொன்றாகும். வாசிப்பதனாலேயே மனிதன் பூரணம் அடைவான். பாடசாலைகள், நூல்நிலையங்கள், சனசமூக நிலையங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள் தத்தம் வரம்புகளை மீறாமல் வாசிப்புக் கலைக்கு ஊக்கமளிக்க வசதிகளைப் பெருக்க வேண்டும்.

காத்திராப் பிரகாரம் உதயனின் காலங்கடந்த நான்கு வெவ்வேறு பக்கங்கள் மேசை துடைப்பதற்காகக் கிடைத்தன. ஒவ்வொன்றையும் என் கண்கள் மேய்ந்தன.

1.நின்று கொல்லும் சோடா– 31.08.2014
2.கல்லினாற் சமைத்த பேர்கள்– 31.08.2014
3.சிறுவர் தொழிலாளர்கள்– 04.06.2014
4.வலைப்பக்கம்–சூரிய காந்தி– 23.11.2014

மேற்படி நான்கும் முறையே, வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன், பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா, செல்வி.க.அர்ச்சனா ஆகியோரால் வரையப்பட்டுள்ளன. படித்தேன், அனுபவித்தேன். தமிழினியின், நீ அழுதபோது...... கவிதையால் நானும் அழுதேன். உண்மைச் சம்பவம், நான் உங்கள் கையைப் பிடித்தால் ஜஸ்வர்யா, ராம் குமரன்–மணிவிழா, சிறீராம் –வன்முறை, வெட்டுக்கிளி–ஜென் கதை, தமிழ் மாணவன்– ஒரு பயணி......

ஆம். அர்த்தமுள்ள உதயனின் வார்ப்புக்கள். கால மாகியும் வீச முடியவில்லை. எல் லாவற்றையும் பேணி வைத்திருக்க சொந்த வீடு இல்லாமல் போய் விட்டதே. வீசமுடியவில்லை. வீசவும் முடியவில்லை. வீசாமலிருக்கவும் முடியவில்லை என்னதான் செய்வது?

*கலாபூஷணம்*
*கே.எஸ். சிவஞானராஜா*
*கொக்குவில்*

## பிரப்பங்குளம் வீதியின் நிலைமை மாறுமா?

**யாழ்.**மாநகர சபைக்குட்பட்ட வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள பிரப்பங்குளம் வீதியின் மிக மோசமான நிலை காரணமாக அந்த வீதியில் வசிக்கும், பயணிக்கும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதி மிகவும் பிரதானமான காங்கேசன்துறை வீதியையும் மானிப்பாய் வீதியையும் இணைக்கின்றது. வீதி ஒழுங்காக புனரமைக்கப் படாது மேடு பள்ளங்களுடனும் புழுதி நிறைந்ததுமாகக் காணப்படுகிறது.

வீதியின் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்திருக்கும் வியாபார நிறுவனங்களின் சிமெந்து களஞ்சியசாலை, வேறு களஞ்சிய சாலைகள் காரணமாக நாளாந்தம் கனரக வாகனங்கள், பாரந்தூக்கிகள் என்பன வீதியை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்கின்றன.




வியாபார நிறுவனங்கள் தமது வியாபார நோக்கத்தை மட்டும் மையமாகக்கொண்டும் சமூ கத்தின் மீதான அக்கறை சிறிதும் கூட இல்லாமல் தொழிற் படுவதால் முதலாளித்துவமே மேலோங்கி இருக்கின்றது. ஒவ்வொரு வாகனமும் வீதியால் பயணிக்கும்போது தூசு மண்டலமாக கிளம்புகிறது. இந்த வீதியால் பயணிப்பதால் வாகனங்கள் பழுதடையும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.

இந்த வீதியில் வாழும் சிறுவர்கள், பெரியோர்கள், வயோதிபர்கள் என சகலதரப்பட்டோரும் காச நோய், தொற்று நோய்கள், சுவாச நோய்கள் போன்ற பல தரப்பட்ட நோய்களுக்கு ஆளாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு தற்காலிக நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்வார்களா? மிகவும் சிறிய வீதிகள் கூட காப்பெற் வீதியாக மாறியுள்ளது. ஆனால் இந்த வீதியை மட்டும் கவனிப்பார் எவருமில்லை. பிரப்பங்குளம் வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்று வதற்கும் அங்கு அமைந்துள்ள சிமெந்து களஞ்சியசாலையை அகற்றவும் தகுந்த நடவடிக்கையை விரைவில் மேற்கொள்வார்களா?

*பிரப்பங்குளம் வீதி வாழ் மக்கள்*


## குழந்தைகளின் பால்மா விலைகுறையாதா?

தற்போதைய அரசு தனது நூறு நாள் வேலைத் திட்டத்தில் பால்மாவின் விலையைக் குறைத்து அதனை நடைமுறைப்படுத்தியும் உள்ளது. அது மகிழ்ச்சிக்குரிய விடயம்தான்.

ஆனால் பால்மாவின் விலை குறைப்பு என்பது பெரியவர்கள் அதாவது வளர்ந்தவர்கள் பாவிக்கும் பால்மா மட்டும்தான். ஆனால் குழந்தைக ளுக்குத்தான் பால்மா மிகவும் முக்கியமானதென்று அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். எனவே குழந் தைகளின் பால்மாவின் விலையையும் குறைத்து அதனை நூறு நாள் வேலைத்திட்டத்தில் நடை முறைப்படுத்த வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட வர்களைக் கேட்டுக் கொள்கிறோன்.

*எஸ்.விஜிதா உரும்பிராய்.*

### கேலிச் சித்திரம்




*நன்றி: லங்காதீப*

## மஹிந்தவுக்கு திருப்பதியான் ரணிலுக்கு குருவாயூரப்பன்

இலங்கையின் அரசியல் தலைவர்கள், நாட்டு மக்களை நம்புகின்றார்களோ இல்லையோ, இந்தியாவில் அமைந்துள்ள பிரபல கோயில்களின் கடவுள்களின் மீது அதீத நம்பிக்கைகளை வைத்திருக்கின்றனர். அதனால்தான், நாட்டில் நல்லது நடந்தாலும் அல்லது ஏதாவது பிரச்சினைகள் என்றாலும் உடனடியாக கடவுள்களிடம் ஓடி விடுகின்றனர்.

முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சோதிடத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்தவர். நடந்து முடிந்த தேர்தல் திகதியிலிருந்து எல்லாவற்றையுமே சோதிடர்கள் கணித்துக் கொடுத்ததை வைத்து செயற்படுத்தியிருந்தார். அதே போன்று இந்தியாவின் திருப்பதி வெங்கடாச்சலபதி மீதும் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி வெங்கடாச்சலபதி கோயிலுக்கு அடிக்கடி சென்று வந்தார். (ஆந்திராவில் அண்மையில் 20 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். மஹிந்த காலடி வைக்கும் இடத்திலெல்லாம் தமிழர்களுக்கு சாவு என்று தப்பித் தவறியும் நினைத்து விடாதீர்கள்.) தமிழகத் தலைவர்களின் எதிர்ப் பையும் மீறி வி.வி.ஐ.பியாக (மிக முக்கிய நபராக) திருப்பதியானைத் தரிசித்து விட்டு வந்தார்.

மஹிந்த திருப்பதியானை வழிபடச் சென்றால் – பொருத்தமாகச் சொல்வதென்றால், சந்திக்கச் சென்றால், அங்கு அவருக்கு உச்சக்கட்ட வரவேற்பை ஆந்திர அரசும் – இந்திய மத்திய அரசும் வழங்கும். அவருக்காக விசேட பூசைகளும் நடக்கும்.

இந்தக் கலாசாரத்தை ஆரம்பித்து வைத்தவர் மஹிந்தவே. மஹிந்த ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதும் இது முடிவுக்கு வரும் என்று எண்ணப்பட்டது. ஆனாலும், புதிய ஜனாதிபதி மைத்திரியும் திருப் பதியானை தேடிச் சென்று சந்தித்திருந்தார். அவர் செல்லும் போது திருப்பதியானின் திறப்பு உடைந்தது என்பது வேறு விடயம். இதன் பின்னர் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குருவாயூரப்பன் கோயிலுக்குச் சென்றிருக்கின்றார். கேரள மாநிலத்திலிருக்கும், குருவாயூரப்பன் கோயிலுக்கு நேற்றுமுன்தினம் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு வழிபாடுகளை நடத்தினார். மஹிந்த – மைத்திரி எல்லோரையும் மிஞ்சியது அவரது பக்தி. தனது நிறைக்குச் சமனான 77 கிலோ கிராம் சந்தன மரக் கட்டைகளை, துலாபாரமாகக் கொடுத்து வழிபாடு நடத்தியிருக்கின்றார். இதற்கு 8 லட்சத்து 45 ஆயிரம் ரூபா செலவாகியிருக்கின்றது.

கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தியது தொடக்கம், சந்தன மரக் கட்டைக்கான கொடுப்பனவு வரையில் எல்லாமே, பிரதமர் ரணிலின் சொந்தச் செலவா ? அல்லது அரச செலவா என்பது தெரியப்ப டுத்தப்பட வேண்டும். ஏனெனில், முன்னைய அரசு வீண் செலவு செய்கின்றது – வீண் ஆடம்பரங்களுக்கு பணத்தை வாரியிறைக்கின்றது என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க, இப்போது இவ்வாறு 8 லட்சத்தை வாரியிறைப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

நாட்டின் பொருளாதாரம் இக்கட்டில் மாட்டியிருப்பதாக உலக வங்கி எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. தெற்காசியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைகின்ற போதிலும் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக உலக வங்கி குறிப் பிட்டிருக்கின்றது.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனது பயணம் சொந்தச் செலவில் இடம்பெற்றதா? அல்லது அரச செலவில் இடம்பெற்றதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

மஹிந்த திருப்பதியான்னை நம்பி, ஆட்சியில் நீடிக்க முயற்சித்தார். ரணில் குருவாயூரப்பனை நம்பி ஆட்சியைத் தொடர எண்ணுகின்றார். எந்த ஒரு தலைவரும் நாட்டு மக்களை நம்பி ஆட்சி நடத்தத் தயாரில்லைப் போலும்.

தமது அரசியல் முடிவுகளை மேற்கொள்வதன் முக்கிய கட்டமாக சிங்கள அரசியல் தலைவர்கள் இந்தியத் திருத்தலங்களுக்கு பயணம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியான முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், இந்தியாவில் புகழ் பெற்ற திருத்தலமான திருப்பதிக்குச் சென்று, வழிபட்டு வந்தார். ஏற்கனவே போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியி ருந்த அவர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழக அரசியல் கட்சிகளால் அவருக்குப் பலத்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுவந்தது.

இதனால், அவர் பயணம் மேற்கொள்ளும் வேளையில் இந்தியாவில் உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுவந்தது. அதேபோன்றே இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் குருவாயூருக்கு காணிக்கை செலுத்தச் சென்றுள்ளார். அவருக்கு அங்கு அதி உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ரணில் இவ்வாறு திடீரென இந்தியாவுக்குச் சென்றமை அரசியல் வட்டாரங்களில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசியலில் எதிர்வரும் நாள்களில் முக்கிய முடிவொன்றை மேற்கொள்வதற்காக ரணில் இவ்வாறு இந்தியா சென்றிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த முக்கிய முடிவு என்ன என்றே எதிர் பார்க்கிறார்கள் பலர்.

**பத்தி எழுத்து**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அராலியைப் பிறப்பிடமாகவும் வேலணையை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் செல்வம் கந்தையா**

தோற்றம் 15.04.1922 — மறைவு 01.05.2014

இன்று (20.04.2015) திங்கட்கிழமை
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறவுள்ளதால்
அனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

அராலி தெற்கு, அராலி.
துறைமுகவீதி, வட்டுக்கோட்டை.

(58950(4.3.6)

பேரன்: கஜன்.
மருமகன்: தியாகராஜா

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சுப்பிரமணியம் அழகரத்தினம்**

தாயின் மடியில் 1955.03.24 — மண்ணின் மடியில் 2009.04.27

பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டகன்று
ஆறு ஆண்டுகள் ஆனதுவே!
பாசச் சுவைகளுடன் பனித்த விழிகளுடன்
பாவிகளாய் நாம் இங்கே!
சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (20.04.2015) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்
அன்னாரின் ஆறாம் ஆண்டு நினைவுதின நிகழ்வினை உறவினர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பேராலை, பளை.

மனைவி (அம்மாச்சி),
பிள்ளைகள் (ஸ்ரீவிநா,சவிநா),
மருமக்கள் (சுரேஸ், நிமல்)

(53729) (4.6.3)

## 51 ஆவது பிறந்ததினமும் 15 ஆம் மாத நினைவஞ்சலியும்

**அமரர் பத்மநாதன் கமலேஸ்வரி**



தோற்றம் 20.04.1964

மறைவு 05.02.2014


நீங்கள் மறைந்து போய்
ஆண்டுகள் நூறு ஆனாலும்
அழியாத ஓவியமாய் – என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
8ஆம் வட்டாரம், புங்குடுதீவு
மடத்துவெளி (கமலா அகம்)

## 11 ஆவது நினைவு அஞ்சலி

மண்கும்பானைப்
பிறப்பிடமாகவும்
யாழ்.ஆஸ்பத்திரி வீதி,
கூழாவடியை
வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர்
**ஐயம்பிள்ளை கந்தையா**



தோற்றம் 15.05.1933

மறைவு 21.04.2004

திதி:
20.04.2015

ஐயா நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றுமே மறையாது
உங்களின் அன்பும் பாசமும்
எம் நெஞ்சங்களில் என்றுமே
நிலைத்திருக்கும் எம்மை என்றுமே
ஆசிர்வதித்துக் காத்துவரும் ஆசை ஐயாவே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய அனுதினமும்
ஆண்டவரை வேண்டுகின்றோம்.

இல.09, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(59965(4.3.7)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 03.03.1944

ஆண்டவன் அடியில் 20.04.2011



**திருமதி ஆன்பிரான்சிஸ்கா புஸ்பரத்தினம் தியாகராசா**

ஆண்டுகள் நான்கு போனது அம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் ஆயிரம் போனாலும்
அகலுமா அம்மா உங்கள் நினைவுகள்
மெழுகுவர்த்தி போல் உருகி எம்வாழ்வுக்கு
ஒளி கொடுத்த அன்புத் தெய்வமே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எமக்கு அம்மாவாக நீங்கள் வரவேண்டும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

47, பென்ரிக் கோஸ்ரல் லேன்,
யாழ்ப்பாணம்.

(54982) (4.6.3)

குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவும் 79 ஆவது பிறந்தநாளும்



மனிதருக்குள் 20.04.1936 — கர்த்தருக்குள் 18.04.2010

**அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம்** (டானியல்)

(இளைப்பாறிய அதிபர்,
எக்காலத்தொனி பூரண சுவிஷேசசபை)

ஐந்தாண்டுகள் வந்தும் மனம் ஆறுதல் கொள்ளுதில்லை
ஆண்டுகள் தான் போகுதே அன்றி! ஆவல் இன்னும் தீருதில்லை
வேண்டுதல் செய்கின்றோம்!
கர்த்தரின் காலடியில் நித்தமும் நீர் இருக்க
சொர்ப்பனம் காண்கிறோம்.

74/9, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(58894)(4.6.3)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், பூட்டர்கள்.

## மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து அதிபர்களையும் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)

## சமயசந்நிதிகளில்

கிளிநொச்சி, ஏப். 20

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெரு[illegible] கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மகோற்சவத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும்மறுநாள்ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★★★

அச்சுவேலி, ஏப். 20

அச்சுவேலி வடக்கு (சரசாலி) சித்திர வேலாயுதர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திரு விழாவும் நடைபெற்று 3ஆ[illegible] திகதி தீர்த்தோற்வம் இடம்பெறும்.

## மகாகும்பாபிஷேகம்

அராலி, ஏப் 20

அராலி தெற்கு ஸ்ரீநாகராஜேஸ்வரி ஆலய மகாகும்பாபிஷேகம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு 23ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு வைக்கும் நிகழ்வு இடம்பெறும். எண்ணெய்காப்பு செலுத்துபவர்கள் வியாழக்கிழமை காலை 8.[illegible] மணிமுதல் பி.ப 3.00 மணிவரையில் வைக்கலாம் எனவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.23 மணி முதல் 10.26 வரையான நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். (ஒ–10)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# காத்தான்குடி நூதனசாலைக்கு ஜம்இய்யதுல் உலமா அதிருப்தி

காத்தான்குடி, ஏப். 20

மனிதர்களை ஒத்த உருவச் சிலைகளை உள்ளடக்கியதாக காத்தான்குடியில் திறக்கப்பட்டுள்ள பாரம்பரிய நூதன சாலைக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பான கடிதம் ஒன்று அகில இலங்கை ஜம் இயத்துல் உலமாவின்பத்வாக்குழுஇணைப்பாளர் எம்.ஏ.எம். ஹாரிஸ் ரஷஜுதியினால் காத்தான் குடி ...ர சபைத்தவிசாளர் எஸ்.எச். எம்.அஸ்பருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடித்தத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'மனிதர்களை ஒத்த உருவச் சிலைகளை உள்ளடக்கிய நூதனசாலை ஒன்று ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் அது தொடர்பான மார்க்கத் தீர்ப்பை கோரியும் ஜம்இய்யதுல் உலமாவின் காத்தான்குடி கிளைக்கு கடிதம் ஒன்று கிடைத்தது. அந்தக் கடிதத்தில் குறித்த நூதன சாலையை அவசரமாகத் திறக்க வேண்டியுள்ளதால் அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் பத்வாக் குழு காத்தான்குடிப் பிரதேசத்துக்கு வந்து பார்வை யிட்டு ஷரீஆ அடிப்படையில் ஆலோசனைகளை வழங்குமாறு குறிப்பிடப் பட்டிருந்தது.

குறித்த கடிதம் தொடர்பில் ஆழமாக ஆராயப்பட்டதுடன் மேற்படி விடயம் தொடர்பிலும் இதன் விபரீதம்தொடர்பிலும்முன்னாள் பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விற்கு விளக்கிக்கடிதம் ஒன்றை அனுப்புவதாகத் தீர்மானித்தோம். இருந்தாலும் தங்கள் வேண்டு கோளை மதித்து நூதனசா லைக்கு நேரில் வரமுற்பட்ட போது தாங்கள் இந்தியா செல்லவிருப்பதால் பிறிதொரு தினத்தில் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தனர்.

இந்தநிலையில் அவர்கள் இந்தியாவுக்குச்சென்றாலும்வேறொரு நபர் மூலம் நூதன சாலையைக் காட்டுவதற்கு எற்பாடு செய்யுமாறு நாங்கள் கேட்டபோது அது மறுக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை குறித்த நூதனசாலை திறக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடி நகரில் மேற்படிநிகழ்வுஏமாற்றத்தையும் வருத்தத்தையுமே தந்துள்ளது.

பொதுவாக முஸ்லிம்கள் உருவச் சிலைகளை வணங் கவோ அவற்றைக் கண்ணியப் படுத்தவோ அல்லது ஞாபகச் சின்னங் களாக வைக்கவோ இஸ்லாம் அனுமதிக்க வில்லை. இந்த விட யத்தில் ஹதீஸ்கள் மத்தி யில் பலத்த எச்சரிக்கைகள் வந்துள் ளன' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (வ-10)

# வீட்டுக்காரர் இல்லாத சமயம் திருடர் கைவரிசை

தென்மராட்சி, ஏப்.20

வீட்டுக்காரர் சாவு வீட்டுக்குக் கலந்து கொள்ளச் சென்ற வேளை வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பணம் உட்பட பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் பகல் நுணாவில் மத்தியில் இடம் பெற்றது.

குறித்த பகுதியில் உள்ள இ.தர்மலிங்கம் என்பவரின் குடும்பத்தினர் கற்குளியில் இடம்பெற்ற உறவினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டுவிட்டு வீடு விரும்பிய போது கதவு திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. உள்ளே சென்று பார்த்த போது அலு மாரியில் வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பணமும் பெறுமதிமிக்க பொருள்களும் திருடப்பட்டதைக் கண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)


**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரை அண்டிய சைவ உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை.

- சப்ளையர்
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

(58931) (9.3)

தொடர்பு: 077 906 3036, 077 236 5622

**வீடு வாடகைக்கு**

கந்தர்மடச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 656 2661

(58970) (45.3.7)

**கடை வாடகைக்கு**

சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு முன்பாக நவீன வசதிகளுடன் கூடிய விசாலமான கடைத்தொகுதி (4 கடைகள்) வாடகைக்கு உண்டு (நிலத்துக்கு மாபிள் பதிக்கப் பட்டுள்ளது)

தொடர்பு: 077 644 6693, 077 219 8518

(58831) (45.3)

**காணி விற்பனைக்கு**

நவக்கிரி விளாத்தியடியில் 14 பரப்புக் கல்லுக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 3278, 076 888 2614

(58831) (45.3)

**வேலைக்கு ஆள் தேவை**

கைதடியில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள ஓட்டோ/ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 248 7772

(58980) (9.3)


# கடந்த 15 மாதங்களில் 30 பேருக்கு விவாகரத்து

## சாவகச்சேரி நீதிமன்று வழங்கியது

தென்மராட்சி, ஏப்.20

சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த 15 மாதங்களில் 30 பேருக்கு விவாகரத்து வழங்கப் பட்டுள்ளது. கடந்த வருடத்தில் (2014) 29 பேருக்கும் இந்த வருடத்தில் மார்ச் மாதம் வரை ஒருவ ருக்கும் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது. விவாகரத்துக் கோரி கடந்த வருடம் 23 பேரும் இந்த வருடம் மார்ச் மாதம் வரை 5 பேரும் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை பெருமளவு விவாகரத்து வழக்குகள் விசாரணை கள் முடிவுறாத நிலையில் நிலுவையில் உள்ளதாகவும் தெரி விக்கப் பட்டது. விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்வோரும் எதிராளியும் ஒரே கருத்துடன் விவாகரத்து தேவை எனில் ஆலோசனை நடத்திய பின்னர் விவாகரத்து வழங்கப் படுவதாகவும் இருவரில் ஒருவர் விவாகரத்துக்கு மறுப்புத் தெரிவித்தாலும் சில ஆண்கள் குறித்த பெண்ணுக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகையை வழக்கு முடியும் வரை செலுத்துவதாக நீதிமன்றில் கூறினாலும் வழக்குக்கு தவணை போடப் பட்டு தீர்ப்பு வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் 40 இற்கும் மேற்பட்ட தாபரிப்பு வழக்குகள் நடைபெற்று வருவதாகவும் எதிர்மனுதாரரால் மாதாந்தம் வழக்குத் தவணைகளின்போது நீதிமன்றில் உரிய தொகை செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# முல்லைத்தீவில் கோப்சிற்றி அண்மையில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கோப்சிற்றி விற்பனை நிலையம் ஒன்றை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் அமைக்கப்பட்ட இந்த கோப்சிற்றி விற்பனை நிலையத்தை வடக்கு மாகாண கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

கடந்த போரால் குறித்த கோப்சிற்றி கட்டடம் பலத்த சேதமடைந்தது.

அந்தக் கட்டடத்தை சங்கம் தற்போது புனரமைப்பு செய்து மீள கோப்சிற்றி விற்பனை நிலையத்தை திறந்து வைத் துள்ளது.

திறப்பு விழா நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் கூட்டுறவாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (வ-17)

# செயலிழந்த வீதி விளக்குகள்

கொழும்புத்துறை, ஏப். 20

குருநகர் சென் ஜேம்ஸ் வீதி, மற்றும் தண்ணீர்த் தாங்கி வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் வீதி மின் விளக்குகள் பெரும்பாலும் ஒளிராது செய லிழந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் நெருக்கமாக வாழும் இப்பகுதி வீதிகள் இரவு வேளை களில் இருள் சூழ்ந்து காணப் படுவதால் விபத்துக்கள் ஏற் படும் வாய்ப்புக்கள் அதிகரித் துள்ளன. அதேவேளை இருளைப் பயன்படுத்தி திருடர்களின் நடமாட்டமும் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)


**மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை மேக்ஸ் கிளினிங் சேவை**

வெற்றிடங்கள்

01. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் - ஆண்கள்/ பெண்கள்
02. சுத்திகரிப்புச் சேவை ஊழியர் - ஆண்கள்/ பெண்கள்

தகைமைகள்

கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்-
- க.பொ.த. (சா/த).
- நல்ல தேகாரோக்கியம், கண்பார்வை
- உயரம் 5'4"

சுத்திகரிப்புச் சேவை ஊழியர்- நல்ல தேகாரோக்கியம்

வயதெல்லை

கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்- 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்

சுத்திகரிப்புச் சேவை ஊழியர்- 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்

சம்பளம்

தொழில் திணைக்கள சட்ட வரையறைக்கு அமைவாக

நேர்முகப் பரீட்சை

காலம்: 27.04.2015, 28.04.2015 முற்பகல் 10.00 மணி

இடம்: அலுவலகம் - 651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பின்வரும் ஆவணங்களுடனும் பிரதிகளுடனும் நேரில் சமுகம் தரவும்

1. கிராம உத்தியோகத்தரின் நற்சான்றுப் பத்திரம்
2. தேசிய அடையாள அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. பாடசாலை கற்றல் சான்றிதழ்
5. உறவினர் அல்லாத ஒருவரின் நற்சான்றுப் பத்திரம்.

651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(58966) (45.3.7)


# திடீரென அதிகரித்தது கடலுணவுகளின் விலை

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை திடீரென அதிகரித்தமையாலும் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

தற்போதைய கடும் வறட்சி, வெப்பம் காரணத்தால் மீன் களின் பிடிபாடு மிகக் குறைவடையும் காலம். இந்த மாதத்தில் கடல் வற்றியும் காணப்படுவதால் மீன் பெருக்கமும் குறைவடையும்.

இதன் காரணத்தால்தான் கடலுணவுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு அவற்றின் விலையும் பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் மீனவர்களின் வலையில் கடலுணவுகள் பிடிபடாததால் மீனவத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நகரை அண்டிய பாஷையூர், கொழும்புத்தறை, குருநகர், கொட்டடி மீன் சந்தைகளில் கடலுணவுகளின் வருகை மிக மிக குறைந்தே காணப்ப டுகின்றன.

குறித்த சந்தைகளில் அவற்றின் விலை திடீரென அதிகரித்தும் காணப்படுகின்றது.

அதேசமயம் தீவுப்பகுதி மற்றும் வடமராட்சி பகுதிகளில் இருந் தும் யாழ். நகருக்கு கடலுண வுகளின் வருகை தற்போது குறைவடைந் துள்ளது.

மேலும் அந்த சந்தைகளில் சகல கடலுணவுகளுமே நேற்று கிலோ 500 ரூபாவுக்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டன. (வ-17)

# சீ.எஸ்.என்.முன்னாள் தலைவரிடம் விசாரணை

கொழும்பு, ஏப்.20

சீ.எஸ்.என். தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக பிரிவின் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு, நிதி குற்றத்தடுப்பு பிரிவுக்கு சமுகளித்துள்ளார்.

சீ.எஸ்.என். தொலைக்காட்சியின் ஆரம்ப நிறுவநராக ரொஹான் வெலிவிட்ட செயற்பட்டிருந்தார். குறித்த தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பிப்பதற்கு எவ்வாறு நிதி பெறப்பட்டது என்பது தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக ரொஹான் வெலிவிட்ட, நிதி குற்றத் தடுப்பு பிரிவுக்கு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## 25 அடி பள்ளத்தில் விழுந்து பஸ் விபத்து

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று 25 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. தியத்தலாவை, பண்டாரவளை வீதியில் நேற்றுமுன்தினம் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் பஸ்ஸில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்கள் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ற)


**உடனடி வேலைவாய்ப்பு**

**VACANCY**

**Supermarket in Jaffna**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி சுப்பர் மார்க்கட்டில் தங்கி வேலை செய்வதற்கு கீழ்வருவோர் தேவை.

I.T. Executives

சுப்பர் மார்க்கட்டில் முன் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வு இன்று (20.04.2014) திங்கட்கிழமை

காலை 9.30 - 5.00 மணி வரை கீழ்வரும் முகவரிக்கு சமுகம் தரவும்

**Human Resource Manager**
175, K.K.S. Road, Jaffna
0774773484
E-mail : anfccolombo@gmail.com


# சிறுவர் கழக கலைஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை அமைச்சால் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியி லான நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பனிப்புலம் சிறுவர் கழக கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட் கிழமை மாலை 4 மணிக்கு பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறும். (வ)

வர்ணம் தீட்டிக் கொடுக்கின்றோம்
(Painting)
உங்கள் வீடுகள், கடைகள், ஆலயங்கள் என்பன தற்காலத் தேவைக்கேற்ப நவீன டிசைன்களிலும், நவீனமுறையிலும் சூழல் பாதிப்பு ஏற்படாத வகையிலும் தரமான வர்ணம் தீட்டுநர்களால் (Painters) பெயின்ரிங் செய்து கொடுக்கப்படும்.
உலகத்தரம் வாய்ந்த முதற்தர பெயின்ற் வகைகளால் பெயின்ரிங் செய்யப்படும்.
அழையுங்கள் – 071 902 6157,077 744 8131
071 902 4193

# தரம் 5 மாணவருக்கு ‘ஏணி’ செயல் நூல்

அச்சுவேலி.ஏப்.20

புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் வாழும் உறவுகளில் லடர் மற்றும் ஆர்.ரி.எஸ். நிதியங்களின் நிதி அனுசரணையுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாண வர்களுக்கான ஏணி செயல் நூல் நாளை செவ்வாய்க் கிழமை முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களின் மாணவர்களின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் ‘ஏணி’ செயல் நூல் கடந்த வருடமும் வெளியிடப்பட்டு, மாண வர்களுக்கு வழங்கப்பட்டது. புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு இந்த வருடமும் நூல் வெளியிடப்பட்டு மாண வர்களுக்கு வழங்கப்பட வுள்ளது. முல்லைத்தீவு,மன்னார் மாவட்ட பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி பயிலும் எல்லா மாணவர்களுக்கும் மட்டக் களப்பு, கிளிநொச்சி மாவட்டங்களில் பின் தங்கிய பிரதேச மாணவர்களுக்கும் ஏணி செயல்நூல் வழங்கப்படவுள்ளது. இலவசமாக வழங்கப்படும் ஏணி செயல் நூலுக்கான நிதி அனுசரணையை ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர் நிலையில் வாழும் உறவுகள் லடர், ஆர்.ரி.எஸ் நிதியங்கள் வழங்கி யுள்ளன.

நிதியங்களின் கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் பிரதம காப்பாளர் ஏ.பிரான்சிஸ் மரியதாஸ் லண்டனில் இருந்து தகவல் தெரிவிக்கையில்

“கல்வி ஊக்குவிப்பு வேலைத் திட்டம் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரம் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் இதன் செயல்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவித்தார். (வ–11)

# சம்பவ இடத்துக்கு பொலிஸார் உடனடியாக சமுகமளிப்பதில்லை

## சாவகச்சேரி நகர சபையின் கூட்டத்தில் தெரிவிப்பு

தென்மராட்சி, ஏப். 20

தென்மராட்சி பிரதேசத்தில் அசம்பாவிதம் நடைபெறும் வேளைகளில் பொலிஸாருக்கு அறிவித்தால் உடனே வருவதில்லை. இது தொடர்பாக பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாட்டுக் கடிதம் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் கூட்டத்தில் உறுப்பினர் அ.பாலமயூரன் தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பிரதேசத்தில் அசம்பாவிதம் ஏதும் நடைபெற்றால் பொலிஸாருக்கும் 110 அம்புலன்ஸ் சேவைக்குத் தகவல் கொடுப்பார்கள். அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்கு வந்து காயமடைவோரை கொண்டு சென்று பல மணிநேரம் கழித்தே பொலிஸார் அங்கு வந்து சேர்வதாக மக்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களால் வழங்கப்படும் தகவலுக்கு உடனடியாக பொலிஸாரை சம்பவ இடத்துக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்று பிரதேச உதவிப்பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்ததாகக் கூறப் பட்டது. (வ–9)

# மணவாளக்கோல நிகழ்வு

தென்மராட்சி,ஏப்.20

எழுதுமட்டுவாழ் சோம சுந்தரேஸ்வரப் பெருமான் (சிவன்) ஆலய மகா கும்பாபிஷேக தினத்தையொட்டிய மணவாளக் கோல மகா சகஸ்ர சங்காபிஷேகமும் புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்தக் கேணி பிரதிஷ்ட நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும்.

காலை 8 மணி தொடக்கம் சிவனுக்கு ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும் மீனாட்சி அப்பாளுக்கு 108 சங்காபி ஷேகம் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தக் கேணி பிரதிஷ்டையும் இடம்பெறும்.

ஸ்ரீவிஸ்ணு ஸ்ரீ.க.ச.சோமஸ் கந்தக் குருக்கள் தலைமையில் கிரியை நடைபெறும்.

# பதவி உயர்வு பெற்ற பிரதேச செயலர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 20

உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சின் தரம் ஒன்றுக்கான பதவி உயர்வு யாழ். மாவட்டத்தில் உள்ள 9 பிரதேச செயலர் களுக்கு கிடைத்துள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், உடுவில் பிரதேசசெயலர் மு.நந்த கோபாலன், உடுவில் உதவிப்பிரதேசசெயலர் திருமதி யசோதா உதயன், சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி ரி.பாபு, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், நெடுந்தீவு பிரதேச செயலர் அ.சிறி ஆகியோரே தரம் ஒன்று பதவி உயர்வு பெற்ற வர்களாவர். (வ–7)

# பட்டமளிப்பு விழா

தென்மராட்சி, ஏப். 20

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டப்பின் படிப்பு பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான பட்டமளிப்பு எதிர் வரும் மே 26, 27 ஆகிய திகதிகளில் பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

பட்டமளிப்பு தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவிச் சிரேஷ்ட பதிவாளரினால் அனுப்பப்பட்டுள்ளன. (வ–9)

# பயிரழிவை ஏற்படுத்திய மாடுகள் சிக்கின

தென்மராட்சி, ஏப். 20

சாவகச்சேரி பெருங்குளம் கிராம்புவில் பகுதியில் பயிரழிவை ஏற்படுத்திய மூன்று மாடுகள் கடந்த 14 ஆம் திகதி விவசாயிகளால் பிடிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளன.

மாடுகளின் உரிமையாளர் பயிரழிவு மற்றும் பராமரிப்பு செலவுகளை செலுத்தி மீட்டுச் செல்லுமாறும் தவறின் கமநல சேவைகள் நிலையத்தின் உத்தரவுப் பிரகாரம் விற்பனை செய்யப்படும் என்றுகிராம்புவில் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (வ–9)

## விலைமனுக்கோரல்

பாதுகாப்புச் சேவை

மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 06 பிரதேச செயலகங்களிலும் பாதுகாப்புச்சேவையை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றுவதற்காக பதிவுசெய்யப்பட்ட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

01. நன்கு பயிற்றப்பட்டதும் ஆற்றலுடைய தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட வேண்டும்.
02. பாதுகாப்புச் சேவை 12 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.
03. சேவைக்கான ஒப்பந்தம் ஒரு வருடத்துக்கு கைச்சாத்திடப்படும் இக்காலத்துக்குள் சேவைகள் திருப்தியற்றதாயின் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படலாம்.
04. இச்சேவைக்கு பயன்டுத்தும் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தம் ஆகக் குறைந்த சம்பளம் குறிப்பிடப்படுவதுடன் ஊழியர்களுக்குரிய EPF, ETF மற்றும் அத்துடன் தொடர்புடைய பாதுகாப்பு வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
05. பாதுகாப்புச்சேவை வழங்குவதற்காக பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தல்வேண்டும்.
06. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளும் சகல வரி செலுத்துதல்களுக்கும் ஒப்பந்தகாரர் உட்படுதல் வேண்டும்.
07. கடந்தகால நிகழ்கால அனுபவச் சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி இல.021 229 0032 ஊடாகவோ நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொருத்தமான பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் குறித்த சேவையின் விலைமனு விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 15.05.2015 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவை விலை மனு'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

திருமதி ரூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.
(சி.16956) (45.3.7)

## Lanka Skill Development Acadamy (Pvt) Ltd
UK ABC AWARD HOTEL MANAGEMENT
ACADAMY IN
JAFFNA AND MULLAITHIVU

முல்லை மண்ணில் புதிய உதயம் 22.04.2015
யாழ். மண்ணிலும் , முல்லை மண்ணிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம் (ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்)

பின்வரும் பாடநெறிகளுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற
*சான்றிதழ்கள்*

* சுத்தப்படுத்தல் மற்றும் அறை ஒழுங்கமைப்பு (House keeping)
* உணவு மற்றும் பானம் பரிமாறல் (Service Food Drink)
* வேலைத்தளப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பேணல் (Safety on work Place)
* மேற்கத்தேய நாடுகளுக்கான உணவு வகைகள் தயாரித்தல் (Western Food Preparation)
* உணவுப் பாதுகாப்பு (Food & Hygine)
* வாடிக்கையாளர் சேவை (Customer Care)
* மனித வள முகாமைத்துவம் (Human Resource Management)
* அடிப்படை விருந்தோம்பல் முகாமைத்துவம் (Basic hospitality Management)
* ஐசிங் கேக் தயாரித்தல்

கல்வித் தகைமை:
* சாதாரண தரம் போதுமானது (O/L)
* UK இல் இருந்து வருகை தந்துள்ள விரிவுரையாளர்களால் விரிவுரைகளும்,செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படு கின்றன.

(போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்கை நெறிகளுக்காக உதவிகள் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:
* இல.21, சிவன் அம்மன் வீதி,
(பழைய நேசிங் சென்ரர் வீதி)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 454 6008, 077 815 3187,077 128 6382
* பாரதி சிறுவர் இல்ல வீதி,
4 ஆம் வட்டாரம், முள்ளியவளை,
முல்லைத்தீவு.
தொ.பே. 076 547 8007, 021 206 1440,
077 128 6382
(58909)
(45.3.7)

## SAPARI
BOUQUETS CENTER
இந்தியா அன் நுவரெலியா இயற்கைப் பூக்கள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
Wedding & Lovers Bouquets
Home Dilivery



திருமண மாலைகள், சாதாரண மாலைகள், நாகசடைகள், திருமண கார் அலங்காரம், அன்பளிப்புப் பூங்கொத்துக்கள், மலர்வளையங்கள் செய்து கொடுக்கப்படும்.
No.51, K.K.S Road, Jaffna. T.P. 077 400 5023, 077 942 4011
மனோகராச் சந்தி. rg.thiliban@yahoo.com

## வாழ்த்துகின்றோம்




யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறுகளைப் பெற்ற ஜெயராஜன் போல்ஜான்சன் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். அவரை மேலும் கல்வியில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
திரு.திருமதி ஜெக்சன், டில்ஷான், சனோஸ்.
(58964)(4.3.6)

# மன்மத வருட பலன்கள்

## மிதுனம்



இந்த ஆண்டு, உங்களின் பொருளாதார நிலை மேம்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். பொது நலக் காரியங்களில் ஆர்வம் அதிகரிக்கும். திருமணம் தடைப்பட்டவர்களுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் கைகூடும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். மகிழ்ச்சி தரும் பயணங்களை மேற்கொள்வீர்கள். அதன் மூலம் வருமானமும் பெருகும். உங்கள் செயல்களை நேர்மையான பாதையில் செவ்வனே செய்து முடித்து அனைவரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள்.

குல தெய்வ வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். சிலருக்கு நல்ல குருநாதரிடம் தீட்சை பெறும் பாக்கியமும் உண்டாகும். இவை ஒருபுறமிருக்க, இந்த ராசி நேயர்கள் பலருக்கு சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள முடியாமல் பணிகள் கசக்கிப் பிழியக் கூடும். இதனால் உடலில் அவ்வப்...து சோர்வு உண்டாகும். தனித்து நின்று போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும். கடினமான காரியங் களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பீர்கள். உங்களின் உடல் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் நடையில் ஒரு மிடுக்கு உண்டாகும். அவ்வப்போது சிறு உடல் உபாதைகள் தோன்றி மறையும். வசிக்கும் வீட்டைப் பழுது பார்ப்பதற்குச் சிறிது செலவு செய்ய நேரிடும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை சாதுரியமாகச் சமாளிக்க சனி பகவான் உதவுவார். சிலர் புதிய இல்லங்களுக்கு மாறுவார்கள். உங்களுக்கு பேராற்றல் உண்டாகும். புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள். 'சாமர்த்தியசாலி' என்று பெயர் எடுப்பீர்கள். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உதவியாக நடந்து கொள்வார்கள். நல்ல செய்திகள் உங்களை வந்தடையும். இதனால் மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள்.



**உத்தியோகத்தர்களுக்கு**

உத்தியோகத்தர்கள் இந்த ஆண்டு கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றவும். சுணக்கத்திற்கும் சோம்பலுக்கும் இடம் கொடுக்காமல் பணியாற்றினால் மேலதிகாரிகளின் ஆதரவை எளிதில் பெறலாம். இல்லையேல் கிடுக்கிப்பிடி தான்! எப்போதும் நிதான மாகவே பேசி சக ஊழியர்களின் அன்பைப் பெறவும். இதற்குப் பயனும் உண்டு. உங்கள் உடல் உழைப்பிற்கு மேல் இரு மடங்கு வருமானத்தைக் காண்பீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்; பயணங்களும் பலன் தரும். சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புதிய சந்தைகளைத் தேடிச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். புதிய முதலீடுகளையும் துணிந்து செய்யலாம்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினருக்கு திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள். சில விரயங்களும் அவ்வப்போது உண்டாகும் என்பதால் சேமிப்பு விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

**பெண்களுக்கு**

பெண்மணிகளுக்குக் கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். அதே சமயம் குடும்பத்தில் உங்கள் பொறுப்பு களைத் தட்டிக் கழிக்காமல் நடந்து கொண்டு அமைதி காப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.


**மாணவர்களுக்கு**

மாணவமணிகள் புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். போட்டிகளில் பங்கேற்றுப் பாராட்டைப் பெறுவீர்கள். உடற்பயிற்சிகளை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பெற்றோர்களின் அறிவுரைப்படி நடந்துகொண்டு மேலும் சிறப்படையுங்கள்.

**அதிர்ஷ்ட எண்கள்: 2, 5, 6**
**அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, வடக்கு**
**அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி;**
**அதிர்ஷ்ட மாதங்கள்: ஆனி, ஐப்பசி, மாசி**
**கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்: வைகாசி, தை**

# பெண்மனது என்னவென்று புரியவில்லையே?


காதலியைப் புகழ்வதிலே பாலியல் தேவைகள் என்ற காரணமுண்டு. தாயைப் புகழ்வதற்குக் காரணமென்ன? மனிதன் உயர்நிலைப் பகுத்தறிவுள்ள விலங்கு. தான் புரியும் ஒவ்வொரு செயலுக்கும் தனது சமூகம் சார்ந்த பெறுமானங்களை அறிந்தும் புரிந்தும் வைத்திருக்கக் கூடியவன். எந்தவொரு தீங்கான செயலைச் செய்யும் போதும் உள்ளார்ந்த குற்றவுணர்வை வேறு ஏதோ ஒரு விதத்தில் சமாதானம் செய்ய வேண்டிய தேவை அவனுக்குள்ளது. நமது சமூகத்திலேயுள்ள ஆண்கள் தங்களில் ஒருத்தியாகி ஒன்றாய் வாழும் பெண்ணை எட்டாத உச்சியில் கொண்டு போய் நிறுத்துவார்கள் அல்லது அதல பாதாளத்தில் வீழத்துவார்களேயொழிய சக மனிதனாக மதிப்பதில்லை என்பதுதான் உண்மை. இவ்வாறு மதிக்காமல் இருப்பதற்கு அடிப்படைக்காரணங்கள் எதுவாக இருக்க முடியும் என்று பார்ப்போம். வேறு எதுவுமே கிடையாது. நாம் வாழும் குடும்பச் சூழல்தான் முக்கியமான காரணம். சிசுவாகப் பிறக்கும் ஓர் ஆண்குழந்தை ஓரளவு தன்னைப் புரிந்து கொள்ளக் கூடிய பருவம் வந்தவுடன் ஆண்– பெண் பால் வேறுபாட்டையும் அவற்றுக்கிடையேயுள்ள சமமின்மையையும் தனது தாய் தந்தையிடமிருந்துதான் முதலில் புரிந்து கொள்கின்றான். வெகுஅரிதான விதிவிலக்குகளைத் தவிர, தந்தை நினைத்ததைத் தடையின்றிச் செய்வதையும் சுதந்திரமாக இயங்குவதையும் மாறாக, தாய் அவ்வாறின்றி தனது பெரும்பான்மையான தேவைகளுக்கும் நடமாட்டங்களுக்கும் தந்தையைச் சார்ந்து வாழ்வதையும் பார்க்கின்றான். அத்துடன் அடிக்கடி தாயின் நியாயமான கோரிக்கைகள் கூட தந்தையினால் வரையறுக்கப்படுவதையும் காண்கின்றான். அங்கிருந்தே ஆரம்பமாகின்றது ஓர் ஆண்மகனின் பெண்களின் மீதான மேலாதிக்கக் கருத்துருவாக்கம். இந்தக் கருத்து மேலும் வலுவடைவது தனது சகோதரி அல்லது உறவுப் பெண் பருவ வயதுக்கு வந்தவுடன் திடீரென வேறுபட்டு நடாத்தப்படும் விதத்திலாகும். அவளைச் சுயமாக நடமாட விடாது கட்டுப்படுத்துவதும் அவளது நிலை குறித்து குடும்பத்தினரால் அதீதகவனம் செலுத்தப்படுவதும், சிறிய சிறிய மீறல்களுக்கெல்லாம் அவள் கண்டிக்கப்படும் விதமும் அவனைப் பெரும் குழப்பத்திற்குள்ளாக்குகின்றன. பலவேளைகளில் அதற்குரிய உருப்படியான காரணங்கள் கூட அவனுக்குச் சரிவரக் கூறப்படுவதில்லை. இதனால் ஆண்– பெண் எனும் பால்வேறுபாடுள்ள மனிதர்களின் இயற்கையான உடல்சார்ந்த வேறுபாடுகள் பற்றிய புரிந்துணர்வு, முறையாகச் செய்யப்படாத வெற்றிடம் ஒன்று அவனிடம் உருவாகின்றது.




அந்த வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவது அவனது வயதொத்த நண்பர்களே. முறையான பாலியல் கல்வி மூலமாகச் செய்யப்பட வேண்டிய மேற்கூறப்பட்ட விடயம் காத்திரமற்றதான அரைகுறை விளக்கங்களால் நிரப்பப்படுகின்றது. இதனால் தான் பொதுவாக ஆண்கள் இளம்பருவத்தை எட்டும் போது தமது நண்பர் வட்டத்தின் தன்மைகளுக்கேற்ப பெண்கள் பற்றிய தவறான கண்ணோட்டங்களுக்கும் வக்கிர உணர்வுகளுக்கும் ஆளாகி விடுகின்றனர். இன்றைய முதலாளித்துவ சமூக நுகர்வுக் கலாசாரத்தின் விளைவுகளான சினிமா, தொலைக்காட்சி, நச்சு இலக்கியங்கள், விளம்பரங்கள்போன்றவை பெண்களை வெறும் போகத்திற்குரிய உயிரினங்களாக மட்டுமே கருதுகின்ற வக்கிர உணர்வுகளையும் மரியாதையின்மையையும் மேலும் தூண்டி விடுகின்றன. சில சமூகங்களிலே பின்பற்றப்படும் நம்பிக்கைகள் சார்ந்த கருத்தாக்கங்களும் ஆண்களின் மனதிலே பெண்களை இரண்டாம்தரப் பிரஜைகளாகக் கருதும் எண்ணப்பாங்குகளுக்குக் காரணமாக இருந்து வருகின்றன. தாம் பின்பற்றுகின்ற மதம், கலாசாரம் ஆண்கள்–பெண்கள் தொடர்பாக எத்தகைய வழிமுறைகளைக் காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றதோ அத்தகைய நிலைப்பாடே ஆண்களின் மனோபாவமாக உருவெடுத்து வளருகின்றது. கல்வி வளர்ச்சி, தர்க்க ரீதியான சிந்தனை, ஏனைய சமூகங்களின் இடைத்தாக்கங்கள் இத்தகைய நம்பிக்கைகள் சார்ந்த கருத்தாக்கங்களில், தாக்கங்களை விளைவித்தாலும் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்குவதில்லை. உதாரணமாக ஓர் ஆண்மகன் தனது துறைசார் கல்வியினூடாக தனது சமூக நம்பிக்கைகள் பற்றி எழும் கேள்விகள் குறித்து சிந்திக்க முன்வருவதில்லை. இதற்குரிய காரணங்களில் ஒன்றாக அந்த நம்பிக்கைகளைக் கேள்விக்குட்படுத்தம்போது தான் வாழும் சமூகத்திலிருந்து கிடைக்கும் உவப்பற்ற எதிர்வினைகளைக் கூறலாம். இதைவிடவும் முக்கியமான காரணம் ஒன்றுள்ளது. இயல்பாகவே சமூக நம்பிக்கைகளால் ஆண்களுக்குத் தரப்பட்டிருக்கும் 'பெண்களை மேலாதிக்கம் செய்யும் வசதியை' அவர்கள் இழக்க விரும்புவதில்லை. இதன் காரணமாக ஓர் ஆண் மகன் எவ்வளவுதான் தான் சார்ந்திருக்கும் துறையில் பெரும் அறிஞனாகவோ புத்திஜீவியாகவோ இருந்த போதிலும் தனது சமூகம் பின்பற்றி வருகின்ற நம்பிக்கை மரபுகளைக் கேள்விக்குட்படுத்துவதில்லை.





# முயற்சி வேண்டும்



இராமன் பாடசாலைப் பாடங்களை சரிவர படிக்க மாட்டான்.அதனால் அவனால்...அவன் நண் பன் இலட்சுமணனைப்போல அதிக மதிப் பெண்கள் வாங்க முடிவதில்லை. நாளை முதல் பரீட்சை ஆரம்பம். கடவுளிடம் இராமன் இந்த முறை இலட்சுமணனைவிட அதிக மதிப் பெண் கள் கிடைக்குமாறு அருளை வேண்டினான். ஆனால் பரீட்சை முடிவு வந்ததும் அருளை லட்சு மணனுக்கே அதிக மதிப்பெண்கள். கோயி லுக்கு வந்த இராமன் ..'கடவுளே.. நான் உன்னை எவ்வளவு வேண்டியும் என்னை ஏமாற்றி விட் டாயே!' என்றான். ஆண்டவன் உடனே அவன் முன் தோன்றி.. 'இராமா.. உனக்கே மதிப் பெண் கள் அதிகம் கிடைக்க வழி செய்ய நான் முனைந் தேன்..ஆனால் அதற்கு நீ படித்து.. பதில்களை எழுதியிருந்தால் மட்டுமே என்னால் முடியும். ஆனால் நீ எழுதியிருந்தவை எல்லாம் தவறு என்று தெரிந்தது என்னால் எப்படி உனக்கு உத விட முடியும்' என்றார். இராமனுக்கு அப் போது தான் தெரிந்தது... ஆண்டவனை மட்டுமே வேண் டினால் போதாது... நாமும் உழைத்து படித்திருக்க வேண்டும் என்று. தெய்வ நம்பிக்கை மட்டுமே இருந்தால்போதாது ஒருசெய லில்வெற்றியடைய நாமும் முயற்சிசெய்ய வேண்டும்.



## காண்டாமிருகம்

காண்டாமிருகம் அசாம் காடுகளில் அதிகம் காணப் படுகிறது. இதன் நீளம் 10 அடி, உயரம் 5 அடி, 6,000 பவுண்ட் எடை கொண்டது. குட்டையான கால்களில் மூன்று விரல்கள் உண்டு. அகன்ற தோல் இவற்றை இணைத்திருக்கும். இதன் தடித்த தோல் மூன்று மடிப்புகளாகக் கவசம் போல் அமைந்திருக்கும். இதனை துப்பாக்கிக் குண்டுகள் கூட துளைக்க முடியாது என்று– ஒரு கருத்து உள்ளது. இது தவறான கருத்து. காண்டா மிருகம் உயிரோடு இருக்கும் வரை இந்தத் தோல் மிருது வாகத்தான் இருக்கும். ஆனால் இறந்து விட்டால் தோல் உலர்ந்து குண்டுகள் துளைக்க முடியாத அளவுக்கு கடினமாகி உறுதியாகிவிடும். இதன் மூக்கிலிருந்து வளர்ந்திருக்கும் கொம்பு தோலில் இருந்து வளர்கிறது. இது எலும்பு அல்ல. இது எதிரிகளைத் தாக்க பயன்படாது. கிழங்குகளைத் தோண்ட மட்டுமே பயன்படும். எதிரி களை பற்களாலே கடித்துக் கொன்று விடும் ஆற்றலு டையது. யானையையும் கொல்லக் கூடிய சக்தி படைத் தது காண்டாமிருகம். இவை வெகு வேகமாக ஓடும். கேட்கும் சக்தி, பார்க்கும் சக்தி குறைவு. பிராணிகளைக் கொன்ற போதும் அதை உணவாக உண்பதில்லை. காண்டா மிருகம் புல், பூண்டு, கிழங்குகளையே சாப்பிடும். தனித்து வாழ்வதையே விரும்பும். சேற்றில் விழுந்து புரள்வதென் றால் இதற்கு அலாதி கொண்டாட்டம். இரவில்தான் இரை யைத் தேடும், ஒரு தடவை ஒரு குட்டி மட்டுமே போடும். அதற்கு கோபம் வந்தால் உடலெல்லாம் இரத்தம் போல் சிவப்பாக வியர்த்துக் கொட்டும். மிகவும் மூர்க்கத்தனமாகக் காணப்படும். காண்டாமிருகம் கண்ட இடங்களில் மலம் கழித்து அசுத்தப்படுத்துவது இல்லை. சொல்லி வைத்தாற் போல் எப்போதும் குறிப்பிட்ட இடத்திலேயே மலம் கழிக்கும். புல் நிறைந்துள்ள அடர்ந்த காடுகளிலேயே காண்டாமிருகம் வசிக்கும் குணமுடையது.

# நம்பினால் நம்புங்கள்!

உலகில் 460 கோடி மக்கள் மொபைல் போன் பயன்படுத்துகிறார்கள்.

3 கோடி மக்கள், இரண்டாம் உலகப்போரின் போது அகதிகள் ஆக்கப்பட்டார்கள் (1939 முதல் 1945 வரை).

170 கோடி மக்கள் ஏதேனும் ஒரு வகையில் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

250 கோடி மக்கள் தொலைக்காட்சியில் டயானா இறுதி யாத்திரையைக் கண்டார்கள் (1997).

470 கோடி மக்கள் ஒலிம்பிக் போட்டிகளை தொலைக் காட்சியில் பார்க்கின்றனர்.

20 கோடி மக்கள் தாய்நாட்டுக்கு வெளியே வாழ் கின்றனர்.

250 கோடி மக்களுக்கு அடிப்படைத் துப்புரவு வசதிகள் இல்லை.

90 கோடி மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பது இல்லை.

## சகிப்புத்தன்மை ஒரு பெரிய வரப்பிரசாதம்





உங்களுக்கு சகிப்புத்தன்மை இருக்கின்றதா? இல்லையா? இருந்தால் நீங்கள் ஒரு அதிர்ஷ்டசாலி. இல்லா விட்டால் நீங்கள் இப்போதிலிருந்து அதைக் கடைபிடியுங்கள். எந்த ஒரு காரியமும் கை கூடுவதற்கு சரியான காலமும், நேரமும் வரவேண்டும். அவைகள் வரும் வரை நாம் அவசரப்படாமல் சகித்துத் கொள்ளவேண்டும். சகிப்புத்தன்மை இல்லாமல் போவதற்கு காரணம் என்னவென்றால் நம்மை சூழ்ந்துள்ள சூழ்நிலைகளும் , சுற்றியிருக்கும் மனிதர்களும் நமக்கு உதவி செய்வதற்கு சாதகமாக இல்லை என்றாலோ, நம் கருத்தை மற்றவர்கள் ஏற்கவில்லை என்றாலோ நமக்கு ஆவேசமும், அகங்காரமும் , எரிச்சலும், கோபமும், பழிவாங்கும் எண்ணமும் வருகின்றன. இதன் காரணமாக நம் கருத்தை ஏற்காதவர்களை வெறுக்கும் மனப்பான்மைக்கு நாம் ஆளாக நேரிடுகிறது. அது நமக்கு மிகப்பெரிய ஆபத்தில் முடிகின்றது என்பதை உணராமல் இருந்து வருகிறோம். நாளடைவில் அவர்கள் எதிரிகளாக மாறி அவர்களின் கருத்துக்களை கேட்காதவராகவும், அவர்களின் உணர்ச்சிகளை மதிக்காதவர்களாகவும், சுதந்திரமான ஆரோக்கியமான உணர்வுகளை ஏற்றுக் கொள்ளாதவர் களாகவும் இருக்கச்செய்கிறது. இவற்றைப் போக்க வேண்டு மென்றால் நமக்குத் தேவை சகிப்புத்தன்மை. சகிப்புத் தன்மை நம்மை மறைமுகமாக பலசாலியாக்குகிறது. எந்தப் பிரச்சினை வந்தாலும் நன்றாக யோசித்தோ, ஆலோசித்தோ எதிர்கொண்டு சமாளிக்க உதவுகின்றது. அதற்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும் சேமித்து வைக்க உதவுகின்றது. சகிப்புத் தன்மை இருப்பவர்கள் கோழைகள் அல்ல. அவர்கள் பலத்துடன் பாய்வதற்குத் தான் பின்னால் நகர்கிறார்கள். எதையும் சாதிக்கும் துணிவுகொண்டவர்கள். தங்களுடைய உணர்வுகளை கட்டுப்படுத் தும் திறமை கொண்டவர் கள். சகிப்புத்தன்மை உள்ள வர்கள் எந்த ஒரு எதிர்ப்பையும் சமாளிக்கும் மனஉறுதி கொண்டவர்கள். அவர்கள் தங்களுடைய ஆற்றலையும், அறிவையும் காலம், நேரம் பார்த்து மிகுந்த நம்பிக்கையுடன் செயற்பட்டு அனைத்து தடை களையும் மீறி தாங்கள் நினைத்தபடி வெற்றிகளைக் குவிக்கும் சாதனையாளர்கள். சகிப்புத்தன்மைக்கு மனக்கட்டுப்பாடு, உணர்வு கட்டுப்பாடு மிக மிக அவசியம். அதை நீங்கள் தியானம் மற்றும் யோகா மூலமும், மன பயிற்சி மூலமாகவும் கண்டிப்பாக பெறமுடியும். மேலும், எதுவும் என்னால் செய்துமுடிக்க முடியும் என்று உங்களை நீங்கள் நம்புங்கள். சகிப்புத்தன்மை கொள்வோம் உணர்வுகளைக் கட்டுப்படுத்து வோம் நினைக்கின்ற காரியத்தை சரியானபடி முடிப்போம்! வெற்றிகள் பல அடைவோம்!

# மே தினக் கூட்டம் குறித்து இன்று முடிவு

## சு.கவில் இருந்து நீக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்

கொழும்பு, ஏப்.20

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் இன்று விசேட சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளனர். அதில் கட்சியின் மேதினக் கூட்டங்களில் கலந்துகொள்வதா? இல்லையா? என முடிவெடுக்கவுள்ளதாக முன்னாள் கலை மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சர் டி.பி.ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து தம்மை நீக்கு வது குறித்தும் அதற்கான காரணம் குறித்து ஏற்கனவே தம்மிடம் கட்சி கூறி விசாரணைகள் எதனையும் நடத்த வில்லை எனவும் திடீரெனவே இவ் வாறு நீக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முறையான அறிவித்தல்கள் மற்றும் காரணங்கள் இன்றி நீக்கப்பட்ட தாம் சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட் டத்தில் கலந்த கொள்வதா இல்லையா என எவ்வித முடிவும் எடுக்கவில்லை அதற்காகவே இன்று நாம் விசேட சந்திப்பொன்றை எற்பாடு செய்துள் ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான டி.பி.ஏக்க நாயக்க, பந்துல குணவர்தன ரோஹித அபே குணவர்தன, சாலிந்த திஸாநாயக்கமற்றும்எஸ். எம்.சந்திர சேன ஆகியோர் கடந்த வாரம்சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்மத்தியசெயற் குழுவி லிருந்து நீக்கப் பட்டிருந் தனர். (ற)

**அதிஷ்ட விளாச் சீட்டிழுப்பு முடிவுகள்- 2015**

முதலாவது பரிசு: 30739
2 ஆவது பரிசு : 19332
3 ஆவது பரிசு : 15318
ஆறுதல் பரிசில்கள்
13934, 26771, 15545, 25379, 7386
**Village 2 City Club**
**Jaffna, Srilanka 077 833 1202**
(சி/16974)(4.3.7)

## மே தின கூட்டங்களில் பங்கேற்கார் மஹிந்த

மே தினக் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பங்கேற்க மாட்டார் என்று தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்படப் பல்வேறு தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மே தினக் கூட்டத்திலும் அவர் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பு ஹைட் பாக் மைதானத்திலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எட்டு கட்சிகள் இணைந்து கிருலப் பனையிலும் மேதினக்கூட்டங்களைநடத்தவுள்ளன.

மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா அண்மையில் உத்தியோக பூர்வமாக மஹிந்தவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருவதாகவும், இந்த அரசில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அங்கம் வகிப்ப தால் தாம் மே தினக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என மஹிந்த தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுத்நதிரக் கூட்டமைப்பின் சில கட்சிகள் கிருலப் பனையில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைப்பதற்கு மஹிந்த முடிவெடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

**பணிப்பெண் தேவை**

கிளிநொச்சி நகரில் உள்ள சிறிய குடும்பத்துக்கு உதவிக்கு பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 077 704 6682
(57078)

**இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் விழாக்கால அறிவித்தல்**

வருடாந்தப் பெருவிழா 24.04.2015 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04.05.2015 பூங்காவன திருவிழாவுடன் நிறைவுபெறும்.

விழாக்காலங்களில் ஆலய வீதியில் வியாபாரம் செய்ய விரும்புவோர் 21.04.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொண்டு பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

அறங்காவலர் சபை
(57079)

## வனுவாடு குடியரசுக்கு 50 ஆயிரம் டொலர் உதவி

*இலங்கை வழங்கியது*

கொழும்பு, ஏப்.20

கடந்த மாதம் சூறாவளியால் பாதிக்கப்பட்ட வனுவாடு குடியரசுக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை இலங்கை வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான பதில் உயர்ஸ்தானிகர் பி. செல்வராஜ் கென்பராவில் [illegible]மந்துள்ள வனுவாட்டு உயர்ஸ்தானிகரைச்சந்தித்து இந்நிதிக்கான காசோலையை வழங்கினார் என அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசு மற்றும் மக்கள் சார்பில் வழங்கப் பட்ட இந் நிதியுதவியை பாராட்டிய வனுவாட்டு உயர்ஸ்தானிகர் இரு நாடுகளுக்கிடையிலான உறவு மேலும் மேம்பட இதுவொரு சந்தர்ப்பமாக அமையும் என தெரிவித்தார். (ற)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111




25 வருடத்துக்கு மேல் இலவச மின்சாரம்
இந்த முதலீடு உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கே!

நிலவும் சூரிய வெயில் தாங்க முடியவில்லையா?
வீட்டில் அலுவலகத்தில் A/C போட வேண்டும் என்ற விருப்பம் ஆனால் மின்கட்டணம் அதிகரிக்கும் என்ற பயம்!
கவலையை விடுங்கள் சூரிய மின்கலம் பொருத்தி உங்கள் மின்கட்டணத்தை Zero (0) ஆக்கி Cool ஆக இருங்கள்.

நெற்மீற்றர் + சோலர் + மைக்ரோ இன்வெட்டர் தொழில்நுட்பத்தில்

- உங்கள் வீடு, வியாபார ஸ்தாபனங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலை, ஹோட்டல் ஆகியவற்றிற்கு "சோலர்" பூட்டித் தரப்படும்.
- வங்கிக் கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
- மேலதிக விசேட வயரிங் தேவையில்லை
- பற்றறி தேவையில்லை
- அனைத்து மின் உபகரணங்களையும் பாவிக்கலாம்.



ரூபா 63,700/ இலிருந்து
25 வருட உத்தரவாதம்

MICRO PC SYSTEMS

Open on Sundays 9 a.m. to12.00 noon

No. 115 C, W. A. Silva Mawatha, Colombo 06, Sri Lanka.
Tel : 011 4000 686 Mobile : 077 307 6409
E-mail : mail@micropcsystems.com

VAVUNIYA : No. 73, 2nd Cross Street, Vavuniya. 077 742 5973
JAFFNA : No.218,Hospital Road,Jaffna. 077 312 6712
NELLIYADI : Kodikamam Road, Nelliyadi 077 303 9536
KILINOCHCHI : A9 Road, Kilinochchi.
TRINCOMALEE : 231, Main St, Trincomalee.
Kilinochchi: 077 312 6712


**விழிநீர் சொரிகின்றோம்**



**இராஜரட்ணம் யோகேஸ்வரன்**

பிறப்பு : 23 . 10 . 1963
இறப்பு : 10 . 04 . 2015

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு பிரிந்துவிட்ட ஆன்மா சாந்தி பெற்றிட அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரியைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

அருள்மிகு ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானமும்,
ஆலய சமூகத்தினரும்

**துயர் பகிர்கின்றோம்**

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமை யாற்றும் செல்வி க. பிரமீஸ்வரி (J/ 19 வேலணை மேற்கு) அவர்களின் அன்புத் தந்தையார்

**வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு, வேலணை.

பிரதேச செயலரும்
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

**மரண அறிவித்தல்கள்**



**விஸ்வலிங்கம் பாஸ்கரநாதன்**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பாஸ்கரநாதன் 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் மகனும், மீசாலை வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிரசன்னா, பிரவீன், ஜனனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மசிக்காவின் அன்பு மாமனும், தில்லைநாதன், காலஞ்சென்ற இரங்கநாதன் மற்றும் இராஜநாதன், வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைலிஸியின் அருமைப் பேரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாத்தாகலட்டி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தகவல் : இரங்கநாதன் தயாளன் (பெறாமகன்)
(58988) (45.3.7)



**திருமதி சரஸ்வதி இராமலிங்கம்**

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராமலிங்கம் நேற்று (19.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம்(குஞ்சுராசா), சுதந்திராதேவி, சுசிலாதேவி, நிர்மலாதேவி, மஞ்சுளாதேவி, ஆகியோரின் அன்புத தாயும், இந்திராணி, கலைவாணி, இராசதுரை, குணபாலசிங்கம், தேவராசா, பகீரதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் சரசாலை கொம்பிக்குள மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சராசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல் : இராசலிங்கம் (குஞ்சுராசா-மகன்)



**நாகன் வேலுப்பிள்ளை**

(ஓய்வு நிலை பணியாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் வேலுப்பிள்ளை நேற்று (19.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகன் தம்பதியரின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், கந்தன், மாரிமுத்து, தெய்வயானை , ஐயம்பிள்ளை, காமாட்சி, லக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மலோஜினி, மங்கயர்க்கரசி, கமலநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்திரன், தேவராஜா, ஜெயரோகினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2015) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி

தகவல் : குடும்பத்தினர்.

**திருமதி தனலட்சுமி (தேவி) கருணானந்தசிவம்**

புங்குடுதீவு தெற்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் (தற்போது நீர்கொழும்பை வதிவிடமாகவும்) கொண்ட திருமதி தனலட்சுமி (தேவி) கருணானந்தசிவம் நேற்று 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமணி - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கருணானந்தசிவத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு தெற்கு,
புங்குடுதீவு.

தகவல் : குடும்பத்தினர், 077 167 347

# கிண்ணம் இமையாணனிடம்

# டைமன்ஸ் கௌரவத் தோல்வி

மாங்குளம், ஏப். 20
கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட எல்லே தொடரில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

களத்தடுப்பில் டைமன்ஸ் அணி வீரர்கள் சொதப்ப முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் டைமன்சின் பலவீனங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி 22ஓட்டங்களைக் குவித்தனர். அதிகபட்சமாக வர்மன் 5 ஓட்டங்களைப் பெற்றார்.

23 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற மிகக் கடினமான இலக்கை நோக்கி டைமன்ஸ் அணி களம் இறங்கியது. ஆரம்பமே அசத்தலாக அமைய நம்பிக்கை வீரர் பிரதீப் வானவேடிக்கைகள் காட்டினார். ஒரு புறத்தில் பிரதீப் அணிக்காக பலம் கொடுத்துக் கொண்டிருந்த போதும் மறுபக்கத்தில் டைமன்ஸ் அணிவீரர்கள் இலக்குகளைக் கொடுத்துக் கொண்டே சென்றனர். இலக்குகளின் வீழ்ச்சி பின்னடைவாக அமைய டைமன்ஸின் ஆட்டம் 20 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. அதிகபட்சமாக பிரதீப் 9 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். (ரி-422)



# வருணபகவான் வழிவிட வெற்றிபெற்றது யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், ஏப். 20
கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 30 பந்துப்பிரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக்கழ்க அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக ராம்மியராகுலன் 40 ஓட்டங்களையும் நிக்சன் 27 ஓட்டங்களையும், சஞ்ஜீவன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி யினர் 24.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5இலக்கினை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டுக் கொள்ள ஆட்டத்தின் போக்கை வைத்து 'டக் வோர்த்லூயிஸ்'விதிமுறைக்குஅமைய யாழ்.பல்கலைக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ரி-23)



# தீபஜோதி, ஞானம் அணிகள் அரையிறுதியாட்டத்துக்கு தகுதி

கரணவாய் ஏப். 20
திருநாவலர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தொடரில் தீபஜோதி விளையாட்டுக்கழகமும் கரவெட்டி ஞானம் விளையாட்டுக்கழகமும் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்தத்தொடரின் காலிறுதியாட்டங்கள் நேற்று முனதினம் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கூவில் தீபஜோதி விளையாட்டுக் கழகமும் பொலிகை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தீபஜோதி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றஙகளில் 4 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிறோஜ் 44 ஓட்டங்களையும் பிரதீபன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அனுதர்சன் ஒரு இலக்கையும் சிந்து 2 இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 76 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பொலிகை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அதிகபட்சமாக ரயிசன் 16 ஓட்டங்களையும் முகுந்தன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அயந்தன் பிரதீபன் தினேஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கை கைப்பற்றினர்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சிவசக்தி விளையாட்டுக்கழகமும் கரவெட்டி ஞானம் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிவசக்தி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றனர் அதிகபட்சமாக சுதர்சன் 14ஓட்டங்களையும் மயூரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்;. பந்துவீச்சில் ஞானம் அணி சார்பாக யசிந்தன், பிரகாஸ், குகதாஸ், அகிலன் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். 56 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம் அணி பிரகாஸின் அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 4.5 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. அதிகபட்சமாக பிரகாஸ் 27 ஓட்டங்களையும் கீரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிவசக்தி சார்பாக [illegible] ஒரு இலக்கை வீழ்த்தினார்.(ரி-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்.20
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர்பங்கு பற்றும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்; கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஶ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# யாழ். மாவட்ட பெருவிளையாட்டுக்கள் ஆரம்பம்

கரணவாய், ஏப். 20
யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுக்கள் நளை மறுதினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதில் நாளை மறுதினம் புதன்கிழமை, ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் பெண்களுக்கான எல்லே தொடர்கள் வரணி மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி பெண்களுக்கான கரப்பந்தாட்ட தொடர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் ஆண்களுக்கான எல்லே தொடர்கள் வரணி மத்திய கல்லூரி மைதானத்திலும் 24ஆம் திகதி ஆண் பெண்களுக்கான எறிபந்து தொடர்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் 26ஆம் 27ஆம் திகதிகளில் ஆண் பெண்களுக்கான கபடித் தொடர்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்திலும்; 28ஆம் 29ஆம் திகதிகளில் ஆண் பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடர்களும் 30ஆம் திகதி வலைப்பந்தாட்டத் தொடரும் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்திலும் துடுப்பாட்டத் தொடர் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. (ரி-108)



தழிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையத்தால் மகாதேவ ஆச்சிரமத்தின் சுமார் 150 மாணவர்களுடன் ஏனைய மாணவர்களையும் உள்ளடக்கி அண்மையில் முன்னெடுக்கப்பட்ட விளையாட்டுப்போட்டிகளின் சில பதிவுகள். (ரி-21)

## எறிபந்தில் சாதித்தது நெல்லியடி மத்தி

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத் தொடரின் ஆண்கள் மற்றும் பெண்கள் என்று இரு பிரிவுகளிலும் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று நடப்பு வருடத்துக்கான வலயச் சம்பியன்களாகின.

வலய மட்ட எறிபந்துதொடரின் இறுதியாட்டங்கள் சில நாட்களுக்கு முன்னர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும் கலட்டி றோ.க.த.பாடசாலையும் மோதின. மூன்றுசெற்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் 25:10, 25:11என்ற புள்ளிகள் பெற்று 2:0என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது நெல்லியடி மத்தி. மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் 25:23, 25:20 என்ற புள்ளிகளைப்பெற்று 2:0 என்ற நேர்செற் கணக்கில் வென்று சம்பியனாகியது நெல்லியடி மத்தி. மூன்றாமிடத்தினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.(ரி-108)

## யங்ஹென்றிஸ், றோயல் அபாரம்

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி, ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றிபெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ரி-23)

## யூனியனை ஊதித்தள்ளியது கிறாஸ்கொப்பர்ஸ்

மாங்குளம், ஏப். 20
யதுசனின் அபார துடுப்பாட்டத்தாலும், கோகுலன், கபில் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சினாலும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

கே.சி.சி.சியின் மட்டுப்படுத்தப்பட்ட 30 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை எதிர்த்து யூனியன் அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி வீரர் யதுசன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி யூனியன் அணியின் பந்து வீச்சாளர்களிற்கு அச்சுறுத்தலாக இருந்தார். யூனியன் அணியின் பந்துகளை நாலா பக்கமும் வெளியில் அனுப்பிக் கொண்டிருந்தார். இதனால் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 29.2பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் 183 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக யதுசன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், கோகுல்ராஜ் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யூனியன் சார்பாக தயாளன் 4 இலக்குகளையும் துசி 3இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணியினர் கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் கோகுலன், கபில் ஆகியோரின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர். இதனால் சகல இலக்குகளும் மளமளவென சரியத்தொடங்க இறுதியில் 26.3 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. கிறாஸ்கொப்பர்ஸ்அணி 54ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. (ரி-422)




# அப்பாடா! மும்பைக்கு முதல் வெற்றி

சிம்மொன்ஸினதும் சந்தினதும் அரைச்சதங்களும் ரோகித் சர்மாவின் தாண்டவமும் ஹர்பஜன் சிங்கின் சுழலும் கைகொடுக்க 18 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவுசெய்தது மும்பை.

மும்பை எதிர் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டம். அதிரடிக்குப் பஞ்சமே இல்லாத அணி பெங்களூர். சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அதிரடியே இல்லாத அணி மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் களத்தடுப்பை தீர்மானித்தது. வம்பை விலைகொடுத்து வாங்கினார் ஹோக்லி. களத்தில் சிம்மொன்சுடன் பார்திவ் பட்டேல். பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார் பட்டேல். மும்பையின் தடுமாற்றம் ஆரம்பமானது. சிம்மொன்சுடன் இணைந்தார் உம்குட் சந். இருவருமாக இணைந்து பிளந்து கட்டினார்கள். அறிமுக நாட்களில் ஹோக்லியின் ஆட்டத்தை அப்படியே நினைவு படுத்தினார் சந். சிம்மொன்ஸ் வான வேடிக்கைகளை உயரக் காட்டினார். சிம்மொன்ஸ் அடித்த சிக்சர் ஒன்று பவிலியனின் மேல் தளத்தில் பட்டு விழுந்ததை அற்புதமாகப் பதிவு செய்தார் படப்பிடிப்பாளர். சந்தும் விடுவதாயில்லை ஏட்டிக்குப் போட்டியாக அதிரடி காட்டி ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தார்கள். 14ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 120 ஓட்டங்களை மும்பை எட்டியது. சிம்மொன்ஸின் ஆட்டம் சகலால் முடிவுக்கு வந்தது. அதே சகல்சந்தையும் வழியனுப்பி வைக்க களத்தில் தலைவர் ரோகிட் சர்மா. தொடக்கத்திலேயே ரோகிட் அப்படி அடித்தாடியதும் நடப்பு ஐ.பி.எல் தொடரில் மும்பை 200 ஓட்டங்களை எட்டியதும் நேற்றுத்தான் முதல் தடவை. வெறுமனே 15 பந்துகளைஎதிர்கொண்டு நான்கு சிக்சர்களை விளாசினார். 42 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பவும் செய்தார். இறுதிக்கட்ட அதிரடிகளும் கை கொடுக்க மும்பை 209–7.



120 பந்துகளில் 210 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு. மிகவும் கடினம்தான். ஆனால் கெயிலும் வில்லியர்ஸும் ஒன்றாக இருக்கும் அணியால் எந்த இலக்கையும் எட்டிவிட முடியும். எதையும் எதிர்வு கூறமுடியாத நிலையில் களத்தில் கெயிலுடன் பிஸ்லா. நினைப்பது ஏதோ நடப்பது ஏதோ என்பதைப் போல கெயில் டெஸ்ட் பாணியில் ஆடிக் கொண்டிருந்தார். 24 பந்துகளில் வெறும் பத்து ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க பெங்களூரின் வெற்றி வாய்ப்பு பாதியாகக் குறைந்தது. வில்லியர்ஸை எதிர்பார்க்க ஹோக்லி வந்தார். ஒருநாள் பாணியில் ஆடிவிட்டு சென்றார். பிஸ்லாவும் பெரிதாக எதுவும் செய்துவிடவில்லை. தற்பொழுது பெங்களூரின் கடைசி கட்ட நம்பிக்கை வில்லியர்சிடம் மட்டுமே. வில்லியர்சுக்கு பக்கபலமாக டினேஸ் கார்த்திக். சும்மாவே வில்லியரஸ் சுழற்றி சுழற்றி அடிப்பார். இக்கட்டான நிலைமைகள் என்றால் கேட்கவும் வேண்டுமா? ஒரு பந்தைக் கூட வில்லியர்ஸ் வீணடிக்க வில்லை. வெற்றியின் விளிம்பில் இருந்த மும்பையை பதட்டம் ஆட்கொண்டது. வில்லியர்ஸின் துடுப்பில் பட்ட ஒரு பந்து மைதானத்தின் மேல் தளத்திற்கு சென்று காணா மல் போனது. பத்தே பந்துகளில் நாநூறுக்கும் அதிகமான சராசரியில் 41ஓட்டங்களை விளாசித் தள்ளி ஆட்டமிழந்தார் வில்லி யர்ஸ். வில்லியர்ஸ் ஆட்டமிழந்த தும்மும்பையின் வெற்றி உறுதியானது. முடிவில் மும்பை எதிர்பார்க்கப்பட்டதைப்போலவே 18 ஓட்டங்களால் வெற்றி யீட்டியது.

(ரி)



நேற்றைய ஆட்டத்தில் பெங்களூர் வீரர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பொலார்ட்டை நடுவர் அழைத்து கண்டித்த பின்னர் அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் பொலார்ட் வாய்க்கு பிளாஸ்ரர் ஒட்டிக் கொண்டு வந்து தன்னைக் கண்டித்த நடுவர் முன்னால் நிற்கும் ஓர் நகைச்சுவைப் பதிவு

# என்னம்மா இப்பிடிப் பண்றியளேம்மா?



நடப்பு ஐ பி.எல். தொடரில் பெங்களூரின் ஆட்டத்துக்கு ஹோக்லி செல்லும்போதெல்லாம் அவரது காதலியான அனுஷ்கா சர்மா கூடவே செல்வதாக ஹோக்லி–அனுஷ்கா காதலில் புதுக்கதை வெளியாகியுள்ளது,

இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமான ஹோக்லியும் ஹிந்தி நடிகையுமான அனுஷ்கா சர்மாவும் காதலித்தது, ஹோக்லி சதமடித்த பின்னர் மைதானத்தில் நின்றவாறே அனுஷ்காவுக்குகாற்றில் முத்தத்தைப் பறக்க விட்டது, உலகக் கிண்ண தோல்விக்குப் பின்னர் இருவரினதும் மானத்தை ரசிகர்கள் பறக்க விட்டது இதெல்லாம் பழைய கதை. ஆனால் இவற்றைத் தொடர்ந்து தற்பொழுது ஐ.பி.எல் லில் புதிய கதையொன்று உலாவு கின்றது. அது என்னவென்றால் ஹோக்லி தனது அணியுடன் மைதானத்துக்குப் புறப்படும் போதெல்லாம் அனுஷ்காவும் கூடவே புறப்பட்டுவிடு வாராம். ஐ.பி.எல் தொடரில் வீரர்களுடன் மனைவியரோ காதலியரோ இருக்க தடைகள் இல்லை என்ற காரணத்தினால் அனுஷ்கா தப்பித்தார்.

(ரி)

# அதிக இலக்குகளில் அண்டர்சன்




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ராம்டினின் இலக்கை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக இலக்குகளை வீழ்த்திய இங்கி லாந்து வீரர் என்ற சாதனையை படைத்தார் அண்டர்சன்.

வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன், ராம்டினின் இலக்கை வீழ்த்தி, இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான இயன் போத்தமின் சாதனையை முறியடித்தார். டெஸ்ட் அரங்கில் 100 ஆட்டங்களில் பங் கேற்று 187 இன்னிங்ஸில் விளையாடியுள்ள அண்டர்சன் 384 இலக் குகளை வீழ்த்தியுள்ளார்.

(ரி)

# பாகிஸ்தானை ஊதித்தள்ளியது பங்களாதேஷ்



இக்பாலின் சதமும் ரஹீமின் அரைச்சதமும் சகிப் அல் ஹசனின் சுழலும் கைகொடுக்க பாகிஸ்தானை 7 இலக்குகளால் இலகுவாக வீழ்த்தி 2:0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்.

பங்களாதேஷ்மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றையதினம் பங்களாதேஷில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டியது. வழக்கம்போல தலைமைத்து இன்னிங்ஸாக அலி ஓர் முனையில் போராடினாலும் மறு முனையில் இலக்குகள் சரிவதை எவராலும் தடுக்க முடியவில்லை. கடந்த ஆட்டத்தைப்போலவே ஹபீஸிம் அஹமட்டும் அணியை கைவிட்டுச் சென்றனர். சொகைல் சற்று தாக் குப்பிடிக்க பாகிஸ்தான் ஐம்பதை எட்டியது. தலைமை இன்னிங்ஸ் சகிப் அல் ஹசனால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே அலி யின் வழியில் அலாமும் சென்றார். மொத்தத்தில் பாகிஸ்தான் 59–4. ரிஸ்வானும் நீடிக்கவில்லை. பாகிஸ்தானின் இறுதி நம்பிக்கையான நஷீணமுடன் இணைந்தார் பந்து வீச்சாளரான ரியாஸ். பாகிஸ் தானி னின் சகல இலக்குகளும் வீழ்த்தப் படும் என்ற வங்கத்தின் கொட்டத்துக்கு இருவருமாக இணைந்து முற்றுப் புள்ளி வைத்தனர். ஆரம்பவீரர்கள் செய்ய மறந் ததை அப்படியே செய்து முடித்தனர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் ஆளுக் கொரு அரைச்சதமும்கண்டனர். அதிலும் ரியாஸ் சராசரி குறையாமல் ஆடிக் கொண்டிருந்தார். வாண வேடிக்கைகளும் இல்லாமல் இல்லை. முடிவில் பாகிஸ்தான் 239–6.



பங்களாதேஷ் நிற்கிற திறன் நிலைமைக்கு பாகிஸ்தானுக்கு மரண அடி விழுந்தாலும்விழும் என்ற நிலைப் பாட்டில் களத் தில் இக் பாலுடன் சர்கார். சர்கார் சறுக்கினார். பாகிஸ்தான் பக்கமும் வாய்ப்பு உள்ளதோ என்ற மாதிரியான எண்ணங்கள் அலை மோதின. முகமதுல்லா முடிந்தவரை செய்து பார்த்தார். அணி நூறு ஓட்டங்களை எட்டியது, ஆனால் அதே ஓட்டத்தில் இலக்கும் சரியத்தான் செய்தது, அஜ்மலின் பந்தில் முகமதுல்லா வால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இக்பாலுடன் இணைந்தார் சதநாயகன் ரஹிம். பாகிஸ்தானுக்கான வாய்ப்புக்கள் பஞ்சு பஞ்சாய்ப் பறந்தன. ஆட்டத்தில் அனல் பறந்தது. இக்பால் அரைச்சதம் கடந்தார். ரஹிம் அதிவேகமாக ஓட்டங்களைக்குவிக்க தொடங்கினார். ரஹிமின் அரைச்சதம் 57 பந்துகளில் பதியப் பட்டது. சதத்தை எட்டினார் இக்பால். பாகிஸ்தானின் வாய்ப்புக்கள் அறவே இல்லாமல் போய்க்கொண் டிருந்தது. ரஹிம் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தாலும் இறுதி வரை ஆட்டமிழக்காது ஆட்டத்தை முடித்துவைத்தார் இக்பால்.

(ரி)

# தடைப்பட்டது தமிழின் பயணம்



ரஹானேயினதும் வற்சனினதும் ஆரம்ப இணைப்பாட்டமும் மொறிஸினதும் பல்க்நெரினதும் வேகமும் கைகொடுக்க 8இலக்குகளால் சென்னையை இலகுவாக வீழ்த்தி தொடர்வெற்றியில் தொடர்ந்து பயணிக்கிறது ராஜஸ்தான்.

சென்னை எதிர் ராஜஸ்தான் இடையிலான ஆட்டம். இரண்டுமே தொடர் வெற்றிகளுக்கு பெயர் போனவை. ஆனால் ஆட்டம் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் என்ற காரணத்தினால் ஏதேனும் ஒரு அணியின் வெற்றிப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி நிச்சயம் வரும். இந்த நிலையில் ஜாம்பவானுக்குள் ஜாம்பவான் யார் என்று அறிவதற்காக ஆவலாக இருந்தது ஐ.பி.எல் உலகம்.

நாணயச்சுழற்சியில் சென்னை வெற்றிபெற்றுக் களத்தில் ஏழே பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை ஊதித்தள்ளினர் சிமித்தும் மக்கலமும். சென்னையின் கடந்த ஆட்டத்தின் தாக்கம் நேற்றைய ஆட்டத்தில் சிறிதும் இருக்கவில்லை. ஒரு முனையில் சிமித் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் மக்கலம் 12, ரெய்னா 4, பிளாஸிஸ் 1 என்று அடுத்தடுத்து பவிலியன் திரும்பினார்கள். சிமித்துக்கு பிராவோ கைகொடுத்தாலும் அரைச்சதத்தை தவறவிட்டு 40 ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார்சிமித். சென்னைக்கானவிசில் சத்தங்கள் குறைந்து கொண்டே சென்றன. களத்தில் கப்டன் கூல் பிராவோவுடன் இணைந்து இலக்குச் சரிவை நிரந்தரமாக் தடுத்தார். தவறும் செய்யவே செய்தார். இறுதிக்கட்டத்தில்கூட டோனி அதிரடியைக் கையிலெடுக்கவில்லை. டோனியின் ஒவ்வொரு அதிரடி முயற்சியும் தோல்வியிலேயே முடிவுகண்டன. டோனிக்கு நேர்மாறாக சென்றுகொண்டிருந்தார் பிராவோ. 170 என்ற சராசரியில் ராஜஸ்தானை ஆட்டிப் படைத்தார். 29 பந்துகளில் அரைச்சதம் கடந்து 62 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார் முடிவில் சென்னை 156–4.

120 பந்துகளில் 157. ராஜஸ்தானுக்கு இது ஒரு இலக்கே இல்லை. ஊதித்தள்ளிவிடும். ஆனாலும் சென்னையின் பந்துவீச்சுக்கும் களத்தடுப்புக்கும் முன்னால் எதுவும் நடக்கலாம் என்ற நிலைமை. களத்தில் வற்சனுடன் ரஹானே. இருவரும் நல்ல திறனில் இருப்பவர்கள். இந்த நிலைமை நேற்றும் நீடிக்கவே செய்தது. ஆரம்பம் முதலே அடித்து நொருக்கினார்கள். இலக்கைநோக்கி இலகுவாகப் பயணித்துக் கொண்டிருந்தார்கள். வான்வேடிக்கைகளுக்கும் பஞ்சம் இருக்கவில்லை. முதலாவது இலக்கைச் சரிக்கவே சென்னைப் பந்துவீச்சாளர்களுக்கு மூச்சுத் திணறியது. ஓட்டங்களை வழங்குவதில் வள்ளல்களாக செயற்பட்டனர். மும்பைக்கு எதிரான வெற்றிக்குப் பின்னர் சென்னையின் பந்துவீச்சுக் குறித்துக் கவலைப்பட வேண்டிய காலம் வரலாம் ஏனெனில் பந்து வீச்சில் துல்லியத்தன்மை இல்லை என்று டோனி கூறியது நேற்று அப்படியே நிறைவேறியது. ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்து அதிரடியாகச் சென்று கொண்டிருந்தனர். இலக்குகள்மட்டும் விழவேயில்லை. இணைப்பாட்டமாக144 ஓட்டங்களைப் பகிர்ந்து 73 ஓட்டங்களுடன் வற்சன்விடைபெற்றாலும்ரம்மியமாக ஆட்டத்தை முடித்து வைத்தார் ரஹானே. மொத்தத்தில் சென்னை விசில்போட மறந்தது.

(ரி)

# பந்துதாக்கி இளைஞர் சாவு



துடுப்பாட்டமொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது பந்து தாக்கியதில் இளைஞர் பலியான சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

வங்கக் கடலில் கடந்த 2014ஆம் ஆண்டு உருவான ஹூட்ஹூட் புயல் விசாகப்பட்டினத்தை தாக்கியதில் அந்த மாவட்டம் பெரும் சேதத்துக்குள்ளானது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க விசாகப்பட்டினம் பொதத்தூரில் நடிகர்கள் பங்கேற்ற நட்சத்திர கிரிக்கெட் ஆட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆட்டத்தில் நடிகர் ஒருவர் அடித்த பந்து பார்வையாளருக்கான மண்டபத்தில் இருந்து ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த 21வயதுடைய ஸ்ரீனிவாசன் என்ற இளைஞனை தாக்கியது.

அடிபட்ட வலி குணப்படுத்தப்பட்டதும் பின்னர் இதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை ஸ்ரீனிவாசன். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அடிபட்ட இடத்தில் மீண்டும் வலி ஏற்பட ஸ்ரீனிவாசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரைப்பரிசோதித்த மருத்துவர்கள் பந்து தாக்கியதில் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு ரத்தம் உறைந்து இருப்பதாக தெரிவித்து உடனடியாக அறுவைச்சிகிச்சை மேற்கொண்டனர். சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று ஸ்ரீனி வாசன் மரணமடைந்தார். (ரி)

# நான் கேட்டேனா?

டெல்லி டேர் டெவில்ஸ் அணி நடப்பு ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் யுவராஜ் சிங்கை 16கோடி ரூபாய் (இந்திய மதிப்பில்) விலை கொடுத்து வாங்கியது. ஆனால் தனக்கும் அந்த விலைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கூறியுள்ளார் யுவராஜ் சிங்.

16 கோடி உங்களது ஆட்டத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறதா என்ற கேள்விக்கு பதில் அளித்த யுவராஜ், உண்மையில் இல்லை என்றே கூறுவேன். ஏலம் நடைபெறும் போது நான் தூங்கிக் கொண்டிருந்தேன். எனக்கு இவ்வளவு தொகை கொடுங்கள் என்று நான் யாரிடமும் கூறவில்லை. என்ன தொகைக்கு ஏலம் எடுத்திருந்தாலும் நான் ஐ.பி.எல் தொடரில் ஆடியிருப்பேன். இப்போதைக்கு ஐ.பி.எல்லை மகிழ்ச்சியுடன் ஆடி வருகிறேன், நான் தொலைதூரம் சிந்திப்பதில்லை. ஒரு வீரனாக டேர் டெவில்ஸ் அணியை வெற்றிப் பாதைக்கு திருப்ப வேண்டும் என்பதில் தற்பொழுது மிகக் கவனத்துடன் உள்ளேன். ஏலத்தின் தொகைக்கு ஏற்ப விளையாடுவது அல்ல எனது நோக்கம் மாறாக விளையாட்டுக்கு ஏற்ப ஏலத்தின் தொகை அமையவேண்டும் என்றார். (ரி)

# மிக அருகில்



ஐ.பி.எல். தொடர்களில் மூவாயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டுவதற்கு கொல்கத்தாவின் அணித்தலைவர் கம்பீருக்கு இன்னமும் 68 ஓட்டங்களே தேவையாக உள்ளது.

ஐ.பி.எல் தொடர்களில் கம்பீர் இதுவரை 107 ஆட்டங்களில்விளையாடி 2ஆயிரத்து தொள்ளாயிரத்து 32 ஓட்டங்களை எடுத்துள்ளார். இன்றைய பஞ்சாப்புக்கெதிரான ஆட்டத்தில் கம்பீர் மேலதிகமாக 68 ஓட்டங்களைப் பெறும் பட்சத்தில் ஐ.பி.எல் தொடர்களில் மூவாயிரம் என்ற மைல் கல்லை எட்டமுடியும். ஐ.பி.எல். தொடர்களில் அதிக அரைச்சதம் அடித்த வீரராகவும் கம்பீர் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**தேவை**

எமது நிறுவனத்துக்கு ரைப்பிங் செய்யத் தெரிந்த பெண் பிள்ளை ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 896 4014 (58966) (9.3)

**பணியாளர் தேவை**

எமது அச்சகத்துக்கு புத்தகம் கட்டுநர் தேவை. வேலை பயின்று பணியாற்ற விரும்புபவர்கள் மட்டும் (பெண்கள்)
20, 21, 22.04.2015 ஆம் திகதிகளில் மாலை 5.30 - 6.30 இற்கு இடையில் நேரில் வரவும்.
சிவஞானம்
பலாலி வீதி, கோண்டாவில்.
(58897)(4.3.7)

**கிளிநொச்சியில் கேபிள் ரீ.வி இல் பணியாற்ற இளைஞர்கள் தேவை**

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கேபிள் ரீ.வி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. மூன்று மாத பயிற்சியின் பின்னர் முழுநேர வேலை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 071 038 0149
(58979)(4.3.7)

**A/L பொருளியல்**

**வினாவிடை - 3**


- பேரினப் பொருளியல் முழுப் பாடப்பரப்பும் விடயத் தலைப்புக்களுடன் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது.
- உயர்சித்திபெற இலகு வழிகாட்டி.

ரூபா 250

**வே.கருணாகரன்**
ஆசிரியர்
பொருளியற் கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(58989)(4.3.7)


## மரண அறிவித்தல்



**கணபதி துரைராஜா**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி துரைராஜா 17.04.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2015) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப.2.00 மணிக்கு பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(58988) (45.3.7)

தகவல் :
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கனகசபை நாகேந்திரன்**

(ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி - யாழ் சிறைச்சாலை)

பிறப்பு
10.08.1948

இறப்பு
30.04.2014

திதி: பூர்வபட்ச துதியை

நீங்கள் எம்மை விட்டுச் சென்று
ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
எங்கள் எல்லோரினதும் இதயங்களில்
நீங்காது நிறைந்திருக்கின்றீர்கள்...

முதலாம் கட்டை,
புலோலி, பருத்தித்துறை.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


அக்ஷய திருதியை தினத்தில் எமது வாடிக்கையாளர்கள்
அனைவரது வாழ்விலும் ஐஸ்வர்யம் செழிக்க
பிரார்த்திக்கின்றோம்
உதயா
ஜுவல்லர்ஸ்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
அக்ஷய திருதியை தினத்தன்று தங்கம் வாங்கும்
05 அதிர்ஷ்ரசாலிகளுக்கு தங்கக்காசு பரிசாக
வழங்கப்படும். அன்றையதினம் தங்கம்
கொள்வனவு செய்யும் அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான
பரிசில்கள் மற்றும் சிறப்புத் தள்ளுபடி
விலைக்கழிவும் வழங்கப்படும்
என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்
உங்களது தங்கநகைகளின்
கரட்டை துல்லியமாக உறுதிப்படுத்து
வதற்கான இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு.
KARAT METER
VISA MasterCard Maestro
மூலம் தங்கம் கொள்வனவு
செய்ய முடியும்
தொ.பேசி:
021 222 4434
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
www.facebook.com/uthayaajewellery
Email : uthayaajewellerss4433@gmail.com


NLS
நியூ லலிதாஸ்
ஜுவல்லறி
நியூ நகுலா
ஜுவல்லர்ஸ்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே
தங்க ஐஸ்வரியம் பொங்கும் பொன்நாளாம்
அக்ஷய திருதியை தினத்தில்
நகைகளை கொள்வனவு செய்யும் அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும் அன்பளிப்புகள் வழங்கப்படும்.
அத்தோடு குலுக்கல் முறையில் 03
அதிர்ஸ்ரசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு
முதலாம் பரிசு 1
பவுன் தங்கக்காசு
2ஆம் பரிசு ½
பவுன் தங்கக்காசு
3ஆம் பரிசு ¼
பவுன் தங்கக்காசு
வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்
21.04.2015
No- 30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ. பே : 021 222 5511
No-111 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4134
No- 45 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ. பே : 021 222 4101
No- 109 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 9119
New Lalithas & New Nagula

# வீ. எம். கே
## ஜுவல்லறி

VMK JEWELLERY

குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும்
அதிசய திருநாளாம் அட்சய திருதியை (21-04-2015)
அன்று எமது திருவனத்தில் தங்கத்தை கொள்வனவு செய்து
என்றும் குறையாத ஐஸ்வரியத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

# V. M. K JEWELLERY

*Manufacturers of gold jewels*

**குறிப்பு:**

**21.04.2015 அன்று எமது நிறுவனத்தில் தங்கத்தை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் மனம் மகிழும் பெறுமதியான அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.**

T.P: 021 720 1117
021 2222 515

இல. 83/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

No. 83/3 Kasthuriar Road, Jaffna.



NEW
# Uthayaa
## JEWELLERS

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி! அக்ஷய திருதியை தினத்தன்று
தங்கம் வாங்கும் 05 அதிர்ஷ்ரசாலிகளுக்கு தங்கக்காசு பரிசாக வழங்கப்படும்.
மேலும் பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருள்களும் காத்திருக்கின்றன.

KARAT METER

உங்களது தங்கநகைகளின் கரட்டை துல்லியமாக
உறுதிப்படுத்துவதற்கான இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு.

# நியூ உதயா
## ஜுவல்லர்ஸ்

இல. 91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

No.91 Power House Road, Jaffna. Tel : 021 222 2031

A/L தொழில் நுட்பப் பிரிவிற்கு வடக்கில் தனித்துவமான ஒரே ஒரு முதற்தர தனியார் கல்வி நிறுவனம்

விஸ்டம்

**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**2015 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கு**

Bio System Technology - Spot exam
Engineering Technology - Paper Class

**ஆரம்பம் : 20.04.2015**
**பிற்பகல் 3.00 மணிக்கு**
புதிய அனுமதிகளும் வழங்கப்படும்.
தொடர்புக்கு: 0772487774, 021 221 7860

## மணமக்கள் தேவை

- ★ 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற சைவபோசன மணமகனுக்கு படித்த சைவபோசன மணமகள் தேவை.
- ★ 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 17 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற சைவபோசன மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.
- ★ 78 இல் பிறந்த 7 இல் சூரியனும் செவ்வாயும் 25½ பாவமுடைய Phd இஞ்சினியர் மணமகன் ஜேர்மன் பிரஜா உரிமை பெற்று வந்துள்ளார் பட்டதாரி மணமகள் தேவை.
- ★ 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- ★ 80 இல் பிறந்த 8இல் சூரியனும் செவ்வாயும் 56 பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- ★ 79 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 43 பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- ★ 88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 34 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற தாதி மணமகளுக்கு கனடாவில் பட்டதாரி மணமகன் தேவை.
- ★ 87இல் பிறந்த 8இல் செவ்வாய் 26¼ பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு அவுஸ்திரேலியாவில் அல்லது உள்நாட்டில் பட்டதாரி மணமகன் தேவை.

தொலைபேசி : 077 607 0862

தொடர்பு: கமலக்கண்ணன், திருமண சேவை.
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.

அக்ஷய திருதியையில் தங்கம் வாங்கி வாழ்வில் சுபீட்சத்தை அடைவீர்களாக!



**ஸ்ரீ சுசீலா**
ஆபரண மாளிகை

(916KDM)
தங்க நகைகள்
மொத்தமாகக்
கிடைக்கும்



அக்ஷய திருதியையை முன்னிட்டு
இன்று சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும்

239, பிரதான வீதி, பருத்தித்துறை.
T.P:- 021 3207437, 077 721 0206, 021 226 1003



**டுர்ஜா**
**நகைப் பூங்கா**



தரமான 22 கரட் தங்க
நகைகளைப் பெற்றிட
நாடவேண்டிய ஒரே இடம்

ஓடர் நகைகளைக் குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ளலாம்.

DORJA
NAGAI POONKA

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
077 952 5392

**செல்வி நகைஅகம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels



*Chelvi*
**Nakai Agam**






தங்கத் திருநாளாம் அக்ஷய
திருதியை தினத்தில் எம்மிடம்
தங்கத்தை கொள்வனவு செய்து
ஐஸ்வரியத்தைக் உங்கள் வீட்டுக்குக்
கொண்டு செல்லுங்கள். நாளை
21.04.2015 எமது நிறுவனத்தில்
தங்கத்தை கொள்வனவு செய்யும்
அனைவருக்கும் பரிசில்கள்
காத்திருக்கின்றன.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1/3, Kasthuriar Road, Jaffna.

T.P: 021 222 9441

**நிஷானந்தா**
**ஜுவல்லறி**

*Dealers in 22 Ct, Gold, Jewelleries*
*Gems & Jewellers*





குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய
திருதியை தினத்தில் தங்கநகைகளை கொள்வனவு
செய்து என்றும் குறையாத இன்பத்தைப் பெற்றிடுங்கள்

**NISHANANTHAA**
*Jewellery*

51

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
KASTHURIYAR ROAD, JAFFNA.
TEL: 021 222 7985

## ஐஸ்வரியங்களை அள்ளித் தரும்

# அட்சய திருதியை



நட்சத்திரங்கள், திதிகள் எல்லாம் நம் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிப்பவை. சில மாதங்களில் வரும் திதிகளுக்கு தனி சிறப்பு உண்டு. அந்த வகையில் சித்திரை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் திருதியை திதி, அட்சய திருதியை என்று போற்றப்படுகிறது. அட்சயம் என்றால் வளர்வது, குறையாதது என்று பொருள். அன்றைய தினத்தில் செய்கிற, ஆரம்பிக்கிற எல்லா காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். நல்ல பயனைத் தரும் என்பது வேத வாக்கு.

இந்த வருடம் அட்சய திருதியை நாளை செவ்வாய்க்கிழமை வருகிறது. இந்த நாளைப் பற்றி புராணங்களிலும், நாடிகளிலும், தர்ம சாஸ்திரத் திலும் பல விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. பகவான் கிருஷ்ணரின் பால்ய நண்பர் குசேலன் வறுமையில் வாடுகிறார்.

கிருஷ்ணரைச் சந்திக்க முடிவெடுத்து ஒருபிடி அவலை தன் மேலாடையில் முடிந்து கொண்டு புறப்படுகிறார். அவரை நன்கு உபசரித்த கிருஷ்ணபகவான், அவர் அன்போடு கொண்டு வந்த அவலை மகிழ்ச்சியுடன் எடுத்து உண்டு, அந்த அவலின் ருசியில் மகிழ்ந்து அட்சயம் உண்டாகட்டும் என்று வாழ்த்தி அனுப்புகிறார். அதே கணத்தில் குசேலனின் குடிசை வீடு மாட மாளிகையாக மாறுகிறது. அஷ்ட ஐஸ்வரியங்களும் அவரது வீட்டில் குடி கொள்கின்றன. பகவான் கிருஷ்ணர் இன்னொரு வாய் சாப்பிட அவலை எடுக்க.. மகாலட்சுமியின் அம்சமான ருக்மணி, கிருஷ்ணரின் கையைப் பிடித்துத் தடுக்கிறாள்.

எனக்குப் பிடித்த அவலை தின்ன விடாமல் ஏன் தடுக்கிறாய்? என்று கிருஷ்ணர் கேட்க.. ஒரு பிடி சாப்பிட்டதால் குசேலனின் வறுமை நீங்கி, அஷ்ட ஐஸ்வரியங்களும் அவன் வீட்டில் குவிந்துவிட்டது. இன்னும் ஒரு பிடி சாப்பிட்டால், மகாலட்சுமியான நானே அவன் வீட்டுக்குப்போக வேண்டியது தான் என்கிறாள் ருக்மணி. இந்த அற்புதம் நிகழ்ந்தது அட்சய திருதியை நாளிலாகும். கௌரவர் சபையில் திரௌபதி துகிலுரியப்பட்டபோது ஆடைகளை அள்ளி வழங்கி கண்ணன் அருள்பாலித்ததும் இந்த நாளே என்கிறது வியாச புராணம். தசாவதாரங்களில் பரசுராமர் அவதரித்த நாள், சிவனுக்கு காசி அன்னபூரணி அன்னப்பிச்சை அளித்த நாள், ஐஸ்வரிய லட்சுமி அவதரித்த நாள், சங்க நிதி – பத்மநிதியை குபேரன் பெற்ற நாள், மகாவிஷ்ணுவின் வலது மார்பில் மகாலட்சுமி இடம் பிடித்த நாள் என பல சிறப்புக்களை உடையது அட்சய திருதியை நாள்.

பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான் என்பது ரமணர் வாக்கு. இல்லாதோர், இயலாதோருக்கு அவர்கள் தேவையறிந்து செய்யும் உதவிகள், தர்மங்கள், பலமடங்கு அதிகமாகி உதவி செய்தவனுக்கே ஏதாவது ஒரு வகையில் திரும்ப கிடைக்கும். மேலும் மேலும் தான தர்மங்கள் செய்கிற ஏற்படுத்தி தரும். அட்சய திருதியை நாளில் நாம் செய்யும் தான தர்மங்கள் நமக்குப் புண்ணியத்தைச் சேர்க்கும். இந்நாளில் சுயநலத்துடன் செய்கிற காரியங்களைவிட, பொதுநலத்துடன் கூடிய காரியங்கள் செய்வது மிகவும் சிறப்பாகும். ஏழைகள், நோயாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யலாம். சாலையோரம் வசிப்பவர்களுக்கு வேட்டி, சேலை, போர்வை தானம் கொடுக்கலாம்

ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவலாம். ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்குச் சென்று உணவு, இனிப்புகள் வழங்கலாம். கோயில்களில் அன்னதானம் செய்யலாம். குறிப்பாக தயிர் சாதம், தேங்காய் சாதம், நீர் மோர், பழங்கள் கலந்த பால் சாதம், பால் பாயசம் போன்றவை வழங்கலாம். இந்த நாளில் குலதெய்வ ஆலயத்துக்குச் சென்று வழிபடலாம். பிரசித்தி பெற்ற தலங்களுக்கும் செல்லலாம். குழந்தைகளின் கல்விக்கு தேவையான புத்தகங்கள், பேனா, கணினி போன்ற சாதனங்கள் வாங்கலாம். சுபகாரியங் களுக்கு பிள்ளையார் சுழி போடலாம். வங்கியில் புதுக்கணக்கு ஆரம்பிக்கலாம். புதிய பூஜைகள், விரதங்கள், விட்டுப்போன வழி பாடுகள் தொடங்கலாம். அரிசி, பருப்பு போன்ற பொருள்கள் வாங்கலாம்.

தீராத நோய் உள்ளவர்கள், அடிக்கடி நோய்வாய்ப்பட்டவர்கள் ஆலமிலையை தலையணைக்கு அடியில் வைத்து இறைவனின் நாமத்தை ஜெபம் செய்து படுப்பதால் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் கிடைக்கும். கைக்குழந்தை முதல் 6 வயது குழந்தைகள் படுக்கும் தலையணையின் அடியில் ஆலமிலையை வைப்பதால் திருஷ்டி பாலரிஷ்ட தோஷங்கள் கழியும் என்பது ஐதீகம். வீட்டில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம் போன்ற ஹோமங்கள் செய்யலாம். குறிப்பாக, சகல வெற்றிகளும் தரும் மிருத்யுஞ்ஜய மந்திரம் சொல்லி ஹோமம் செய்யலாம்.

ஏழை, எளியவர்கள், இல்லாதோருக்கு ஆடை, போர்வை தானம் தருவதால் சுக போக வாழ்வு கிட்டும். தயிர், பால் சாதம் தானம் செய்வதால் ஆயுள், ஆரோக்கியம் கூடும். ஆதரவற்ற முதியோர்கள், சிறார் இல்லங்களிலும் ஏழைகளுக்கும் இனிப்பு வழங்குவதால் திருமண பிராப்தம் கூடி வரும். அரிசி, பருப்பு, தானியங்களை தானம் செய்தால் விபத்துகள் நேராமல் இறைவன் காத்தருள்வார். பசு, நாய், பட்சிகளுக்கு உணவளிப்பதால் மன அமைதி, செல்வ வளம் ஏற்படும். அட்சய திருதியை தினத்தில் தங்கம், வைர ரத்தின ஆபரணங்கள், வெள்ளிப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள் வாங்க வேண்டும் என்ற வழக்கம் உருவானது சமீபகாலமாகத்தான். அட்சய திருதியை நாளில் தங்கம் வாங்கினால் பல மடங்காக பெருகும் என்பது ஒரு நம்பிக்கையே தவிர, தங்கம் வாங்கினால் என்ன பலன் கிடைக்கும் என்று சாஸ்திரத்தில் சொல்லப்ப டவில்லை. மேலும், அட்சய திருதியை நாளில் கடன் வாங்கி, தங்கம் வாங்குவது தவிர்க்கப்பட வாங்கும் வழக்கம் மேன்மேலும் அதிகரிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது.

அட்சய திருதியை நாளில் தான தர்மங்கள், நற்செயல்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேலும் நல்ல காரியங்கள் தொடங்கவும் சுபவிடயங்களைப் பேசவும் ஏற்ற நாளாகும். மகிழ்வித்து மகிழ் என்று சொல்வார்கள்.

எனவே, மற்றவர்கள் மகிழும் வகையில் தான தர்மங்கள் செய்து, பல புண்ணியங்கள் பெற்று ஆயுள், ஆரோக்கியம் நிறைந்த வளமான வாழ்வு பெறுவோமாக.


### என்ன தானம் செய்தால் என்ன பலன்?

| | |
|---|---|
| ஆடை, போர்வை | – சுகபோக வாழ்வு |
| தயிர், பால் சாதம் | – ஆயுள், ஆரோக்கியம் |
| இனிப்புகள் | – திருமண பிராப்தம் |
| அரிசி, பருப்பு | – பாதுகாப்பான பயணம் |
| பசு, நாய்க்கு உணவு | –மன அமைதி, செல்வ வளம் |


தரமான 916 KDM தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
தரன் நகைமாளிகை
(பருத்தித்துறை)

T.P: 0602219254
Mobile No: 077 3276356

21/04/2015 அன்று அக்ஷய திருதியையை முன்னிட்டு எமது வியாபார ஸ்தாபனத்தில் நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.
வினோ நகைப்பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்
Vino Nakai Poonka
Gold & Jewel Merchant
அசல் 22 கரட் தங்கநகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

உரிமையாளர் :
சடாச்சரம் புவிச்சந்திரன்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
185, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 5394 / 021 222 9494,


உரிமையாளர்: வை. இரத்தினம்
ரட்ணா ஜூவல்லர்ஸ்
தங்க வைர நகை வியாபாரம்
Radna Jewellers
Gold & Jewel Merchant
T.P: 021 561 7258
K.K.S. Road, Thavady Junction, Thavady.
கே.கே.எஸ். வீதி, தாவடிச் சந்தி, தாவடி.


மயூரன்ஸ் நகை மாளிகை
MAYURANS
NAKAI MALIKAI
Manufacturers of Gold Jewels
41, Muslim College Road, Jaffna.


அக்ஷய திருதியை தினத்தன்று தங்கம் கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்
கன்னிஹா ஜுவல்ஸ்
KANNIHA
JEWELS
இல.99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 077 3620969


எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
கோல்டன் ஸ்ராரின் இனிய அக்ஷய திருதியை வாழ்த்துக்கள்
சுவைப்பிரியர்களின் "Super Star"
கோல்டன் ஸ்ரார்
இது ஒரு குடும்ப உணவு விருந்தி
ரெஸ்ரோரன்ட்
இப்பத்திரத்துடன் வருபவர்களுக்கு
10% விலைக்கழிவு (நிபந்தனைக்குட்பட்ட)
குறைந்த செலவில் இனிய ரெஸ்ரோரன்ட்
உணவுகளை சுவைத்து மகிழ
86/2, பருத்தித்துறை வீதி,
(ஆரியகுளம் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P: 077 8890 888


தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை அன்று சிறுதுளி
தங்கத்தையேனும் வாங்கி உங்கள் வாழ்க்கையை
பொன்னாக்குங்கள்
நடராசா கஜேந்திரன்
NJ நியூ மைதிலி
ஜுவலர்ஸ்
உங்களது தங்க நகைகளின்
கரட்டை துல்லியமாக
உறுதிப்படுத்துவதற்கான
இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு
KARAT METER
அக்ஷய திருதியை தினத்தன்று நாளை
(21.04.2015) எமது நிறுவனத்தில் நகைகளை
கொள்வனவு செய்தோ அல்லது முற்பதிவு
செய்தோ அக்ஷய திருதியை அன்று
சீட்டுக் குலுக்கல் மூலம் தங்கத்தை
வெல்லுங்கள்.
இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
தொ.பே: 021 221 7878, 021 221 7877

அக்ஷய திருதியை தினத்தில் தங்க நகைகளை கொள்வனவு செய்து
தங்கள் இல்லங்களுக்கு தங்கத் திருமகளை அழைத்துச் செல்லுங்கள்

# சாரங்கா ஜுவலறிஸ்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P: 021 222 6972, Fax: 021 222 8869





ஐஸ்வரியம் பொங்கும்
பொன்நாளான அக்ஷய
திருதியை தினத்தில்
எம்மிடம் கொள்வனவு
செய்யும் தங்கத்தின்
பெறுமதிக்கேற்ப
அன்பளிப்பு பொருள்கள்
வழங்கப்படும்

கிளை:-
சாரங்கன் நகையகம்
இல. 1, மாநகரசபை கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் இல்லத்தில் செல்வம் கொழிக்க அக்ஷய திருதியை
தினத்தன்று தங்கம் கொள்வனவு செய்து அன்பளிப்புகளையும்
பெற்றுக்கொள்ளுங்கள்



# விஷ்ணு ஜுவல்லறி

தங்கப்பவுண்
நகை வியாபாரம்



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

Vishnu Jewellery
Manufacturers of Gold Jewels

181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (வின்சர் தியேட்டர் முன்பாக)
181, Kasthuriar Road, Jaffna.
(Opposite Winser Theatre)
021 561 8653, 077 661 8190



# Maithely Nagai Madam
# மைதிலி நகைமாடம்

89V, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021-222 7902, Email: maithilynagaimaadam89@gmail.com

அக்ஷயதிருதியையை முன்னிட்டு 21ஆம்
திகதிவரை நகைகள் வாங்குபவர்களுக்கு
மூன்று சிறப்புப் பரிசுகள் காத்திருக்கின்றன.
குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட
அதிர்ஷ்டசாலிகளின் விவரம்
23.04.2015 ஆம் திகதி
உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.



தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை தினத்திற்காக
- அக்ஷய திருதியையை முன்னிட்டு அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு அதற்கான விலையில நம்பமுடியாத கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக் கழிவு உண்டு.
- பவுண்காசு மற்றும் லக்ஷ்மி காசுக்கு விலைக் கழிவு உண்டு.
- குறிப்பிட்ட சில் நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

# Yarl Maithily யாழ் மைதிலி ஜுவலர்ஸ்

79Z, Sea Street, Colombo-11. Tel: 0112396239

எமக்கு யாழ். நகரில் வேறு கிளைகளோ, தலைமை நிறுவனங்களோ கிடையாது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்